REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2020 ஓகஸ்ட் 26 புதன்கிழமை

# தினகரன்

THINAKARAN திනකරන්

வருட. 88 இல. 202 | August 26, Wednesday, 2020 | 20பக்கங்கள் | 30/-

உங்கள் அபிமான மாத இதழ்
வண்ண வானவில் Vanna Vaanavil
இப்போது பரபரப்பான விற்பனையில்...
ஓகஸ்ட் மாத இதழ்!
வாசிக்க எக்கச்சக்கமான விடயங்கள் கொட்டிக் கிடப்பது வானவில்லில் மட்டுமே!



# மக்கள் சேவையை பிரதானமாக கடைப்பிடிப்பது எம்.பிக்களின் கடமை

## பாராளுமன்ற செயலமர்வில் சபாநாயகர் மஹிந்த யாப்பா



பாராளுமன்றுக்கு தெரிவாகியுள்ள உறுப்பினர்கள் அனைவரும் மக்கள் சேவையை பிரதானமாகக் கொள்ள வேண்டுமென சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன வலியுறுத்தினார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டபோதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர், “பல வருடங்களுக்கு பின்னர், இன்று இலங்கையில் முழுமையானதொரு பாராளுமன்றமொன்று ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதற்காக, நாம் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தோம். 06



பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தயாரித்த முதலாவது சஞ்சிகையான ‘பாராளுமன்ற தகவல் திரட்டு” 09ஆவது பாராளுமன்றத்தின் புதிய உறுப்பினர்களுக்கான நேற்றைய கருத்தரங்கில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவினால் வெளியிடப்பட்டபோது... சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய ஆகியோரையும் படத்தில் காண்க.

# கல்வி, தொழில்நுட்பத் துறைகளின் அபிவிருத்திக்கு இந்தியா உதவி

## கல்வி அமைச்சரிடம் இந்திய உயர்ஸ்தானிகர் உறுதி



**லோரன்ஸ் செல்வநாயகம்**

இலங்கையில் கல்வி, தொழில்நுட்பம் மற்றும் தொழிற் பயிற்சி துறைகளில் பயிற்சிகளை வழங்குவதற்கும் அத்துறைகளை அபிவிருத்தி செய்வதற்கும் இந்திய அரசாங்கம் தமது ஒத்துழைப்புக்களை வழங்குமென இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே தெரிவித்துள்ளார்.

கல்வியமைச்சில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டபோதே இந்திய 06

## தனிப்பட்ட நிகழ்ச்சி நிரலை புறந்தள்ளி மக்கள் எதிர்பார்ப்பு பூர்த்தி செய்யப்படும்;

# கட்சி பேதங்களை கடந்து அனைவரது ஒத்துழைப்புடன் புதிய அரசியலமைப்பு

## விரைவில் உருவாக்கப்படுமென்கிறார் பிரதமர்



**லோரன்ஸ் செல்வநாயகம்**

புதிய அரசியலமைப்பொன்றை உருவாக்குவதற்கு கட்சி பேதங்களைக் கடந்து அனைவரதும் ஒத்துழைப்பும் பெற்றுக் கொள்ளப்படுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களை புறந்தள்ளி மக்கள் எதிர்பார்க்கும் அரசியலமைப்பு மாற்றத்தில் ஒன்றிணைவது அவசியமென்றும் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களிடம் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற புதிய எம்.பிக்களுக்கான விசேட 06

# மின் விநியோகத் தடை அறிக்கை அமைச்சரவையில் இன்று சமர்ப்பிப்பு



நாடு முழுதும் கடந்த 17 ஆம் திகதி ஏற்பட்ட மின் விநியோகத்தடை தொடர்பில் ஆராயவென நியமிக்கப்பட்ட குழுவினால் முன் வைக்கப்பட்டுள்ள அறிக்கை இன்று புதன்கிழமை அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாக மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார். கெரவலபிட்டி உப மின்னுற்பத்தி நிலையத்தில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறினால் நாடு முழுவதும் கடந்த 17ம் திகதி 06

# கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் நீங்கிவிட்டதாக கருத முடியாது

## சமூகத்திற்குள்ளும் ஆபத்து என்கிறார் சவேந்திர சில்வா



கொரோனா வைரஸ் தொடர்பில் மக்களை தொடர்ந்தும் எச்சரிக்கையுடன் இருக்குமாறு இராணுவத் தளபதி சவேந்திர சில்வா கேட்டுக்கொண்டுள்ளார்.

கொரோனா வைரஸ் ஆபத்து முற்றாக நீங்கிவிட்டதென கருதி மக்கள் கொரோனா வைரஸ் தொடர்பான தங்கள் எச்சரிக்கையை தளர்த்தக்கூடாதென அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். இலங்கையில் 06

# ரவி கருணாநாயக்கவிடம் நான்கு மணி நேரம் வாக்குமூலம் பதிவு



சர்ச்சைக்குரிய மத்திய வங்கியின் பிணைமுறி சம்பவம் தொடர்பில் வாக்குமூலம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்காக முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க 06

# வெளிநாட்டு பட்டதாரிகளின் மேன்முறையீடுகளும் பரிசீலிப்பு

## டக்ளஸ் மீண்டும் வலியுறுத்தி விண்ணப்பிக்க கோரிக்கை



பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தைப் பெற்ற வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் பட்டதாரிகளுக்கும் மேன்முறையீடுகளை மேற்கொள்ள முடியுமென தெரிவித்துள்ள கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, இந்த மேன்முறையீடுகளும் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும் எனவும் தெரிவித்தார். நாடு முழுவதும் அண்மையில் 06

# கரு தலைவரானால் UNPயின் செயலாளராக வர நான் தயார்

## பச்சைக்கொடி காட்டியுள்ள மங்கள சமரவீர



ஐக்கிய தேசியக் கட்சியின் இடைக்காலத் தலைவராக கரு ஜயசூரிய நியமிக்கப்படும் பட்சத்தில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளராக மங்கள சமரவீர தெரிவு செய்யப்படலாமென அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியமுடிகின்றது. பொதுத் தேர்தலில் ஏற்பட்ட தோல்வியின் பின்னர் மங்கள சமரவீர 06



# யாழ் – கொழும்பு ரயில்சேவை மீண்டும் வழமைக்கு திரும்பல்

## ஆசனப் பதிவு செய்யும் பணி ஆரம்பம்

**யாழ்ப்பாணம் குறூப் நிருபர்**



யாழ் கொழும்பு ரயில் சேவை மீண்டும் வழமைக்கு திரும்பியுள்ளதாக யாழ். ரயில் நிலைய பிரதான ரயில்நிலைய அதிபர் எஸ்.பிரதீபன் தெரிவித்தார். 06

# ரஞ்சனுக்கு எதிரான வழக்கு விசாரணை நேற்றுடன் நிறைவு



நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டு தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்கவிற்கு எதிரான வழக்கு விசாரணைகள் நேற்றுடன் 06

# இனவாதத்தை மூலதனமாக்கும் வங்குரோத்து அரசியலில் சிலர்

## கைவிடுமாறு காதர் மஸ்தான் எம்.பி கோரிக்கை



எமது வன்னி மாவட்ட மக்களின் அபிலாஷைகள் தேவைகள் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டே எமது அரசியலை முன்னெடுத்துச் செல்கிறோம்.

இனவாதத்தை தோளில் தூக்கிக் கொண்டு மக்கள் மத்தியில் செல்கின்றவர்கள் மக்களால் புறக்கணிக்கப்படுகின்ற நிலைமையை நம்மால் அவதானிக்க முடிகிறது என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார், முல்லைத்தீவு மாவட்டங்களின் அபிவிருத்திக்குழு 06

# சர்ச்சைக்குள்ளான விக்கியின் உரை ஹன்சார்ட்டில் சேர்ப்பு



தென்னிலங்கை அரசியல் களத்தில் சர்ச்சையை ஏற்படுத்திய தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி. விக்னேஸ்வரனின் பாராளுமன்ற உரை ஹன்சாட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

உலகில் உயிர்வாழும் மூத்த மொழிகளில் ஒன்றும், இந்நாட்டின் முதல் சுதேச குடிமக்களின் மொழியிலும் வாழ்த்துக்களை தெரிவிப்பதாக பாராளுமன்ற உறுப்பினர் 06

# அரசியலமைப்புக்கு ஆதரவு; மாகாணசபை தேர்தலுக்கு எதிர்ப்பு



மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு கடும் எதிர்ப்பை வெளியிட்டுள்ள தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம், புதிய அரசியலமைப்பை உருவாக்கும் விடயத்துக்கே அரசாங்கம் முன்னுரிமை வழங்க வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ளது. 06



தலைவரே.., நல்லாட்சியில நீங்க மக்களுக்கு எதுவுமே பண்ணல, இருந்தும் மக்கள் உங்கள ஏன் இந்த வாட்டியும் தெரிவு செய்தாங்க....?

அதுதான் அப்பு எனக்கும் புரியல.. நம்ம சனங்க ரொம்ப ரொம்ப நல்லவங்க... நல்லாட்சியில நல்லது செஞ்ச எவனையுமே வெல்ல வைக்காம சும்மா படங்காட்டின நம்மள திரும்பவும் வெல்ல வச்சிருக்காங்க...

## கொழும்பு பல்கலை மாணவர் முயற்சி;

# ஆரோக்கியமான வாழ்வுக்கு தீங்கு விளைவிக்காத பர்கர்

தொற்று அல்லாத நோய்களால் பாதிக்கப்படும் நபர்களின் எண்ணிக்கை தற்போது அதிகரித்து வருகிறது. உடனடியாக தயாரிக்கப்படும் துரித உணவுகளை உண்ணும் பழக்கமே இதற்கு காரணம் என மருத்துவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

எவ்வாறாயினும் ஆரோக்கியமான உணவு வகைகளை தேடி உண்பது சிரமமான இக்காலத்தில் ஆரோக்கியமான மாற்று உணவை கொழும்பு பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ 06



# இரணைமடுவில் சட்டவிரோத மணல் அகழ்வை தடுக்கக் கோரி போராட்டம்

**கிளிநொச்சி குறூப் நிருபர்**



இரணைமடு குளத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டுவரும் சட்டவிரோத மணல் அகழ்வை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு இரணைமடு விவசாய சம்மேளனம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் கவனம் செலுத்துமாறு நேற்று இரணைமடு விவசாய சம்மேளனத்தினால் கவன ஈர்ப்பு போராட்டம் ஒன்றும் முன்னெடுக்கப்பட்டது. கரைச்சி பிரதேச சபை முன்பாக இருந்து 06

# நாட்டில் விலை கூடிய மருந்துகளை உற்பத்தி செய்வதே அரசின் இலக்கு

## இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜனசுமன





**மர்லின் மரிக்கார்**

இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அதிகூடிய விலை கொண்ட மருத்துப்பொருட்களை அடுத்துவரும் 18 மாதங்களில் உள்நாட்டில் உற்பத்தி செய்வதே எமது இலக்கு என்று மருந்துப்பொருட்கள் உற்பத்தி, விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜனசுமன தெரிவித்தார்.

அரசாங்க மருந்தாக்கட் கூட்டுத்தாபனத்தின் பணிகள் தொடர்பில் ஆராய்வதற்காக விஜயம் செய்த அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எமக்கு வழங்கியுள்ள பொறுப்பானது ஐந்து வருடங்களுக்குள் நாட்டுக்கு தேவையான மருந்து பொருட்களை உள்நாட்டிலேயே உற்பத்தி செய்வதாகும். இது தொடர்பில் நாட்டில் பணியாற்றும் பிரதான நிறுவனமாக அரசாங்க மருந்தாக்கட் கூட்டுத்தாபனம் விளங்குகின்றது. அதனால் அடுத்துவரும் 18 மாதங்களுக்குள் நாட்டுக்கு இறக்குமதி செய்யப்படும் விலை கூடிய மருந்துப் பொருட்களை இந்நாட்டிலேயே உற்பத்தி செய்ய ஆரம்பிக்கப்பட வேண்டும்.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் தற்போது தொடங்கியுள்ளன. இது தொடர்பில் புதிய தொழிற்சாலையொன்றை ஆரம்பிப்பதற்கும் புற்றுநோய் சிகிச்சைக்கு தேவையான சில மருந்துகளை இங்கு உற்பத்தி செய்வதற்கும் எதிர்பார்த்துள்ளேன். கடந்த காலங்களில் பல்வேறு அரசியல் காரணங்களால் இது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லை.

ஆனால் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் அதிகூடிய விலை கொண்ட மருத்துப் பொருட்களை அரசாங்க மருந்துபொருள் உற்பத்தி தொழிற்சாலைகளில் அடுத்துவரும் 18 மாதங்களில் உற்பத்தி செய்ய வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கைக்கு தேவையான மருந்துப் பொருட்களில் சுமார் 20 வீதமானவை உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இதனை 60 75 வீதம் வரை அதிகரிக்கப்பட எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இதன் ஊடாக நாட்டுக்கு தேவையான மருந்துப் பொருட்களை இறக்குமதி செய்யவென செலவாகும் பெருந்தொகை அந்நியச் செலாவணியை மீதப்படுத்த முடியும். அத்தோடு உயர்தரத்தினாலான மருந்துப்பொருட்களை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க முடிவதோடு நாட்டில் புதிய தொழில் வாய்ப்புக்களும் உருவாகும்.

இவ்வைபவத்தில் மருந்துப்பொருள் உற்பத்தி கூட்டுத்தாபனத்தின் தலைவர் டொக்டர் உத்பல இந்திரவன்ச, முகாமைத்துவ பணிப்பாளர் சமன் ஹேரத், பொதுமுகாமையாளர் அஜீத் ஜயசிங்க உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# குடிநீர் தேடி யானைக் கூட்டங்கள் குளக்கட்டுகளுக்கு வருகை

**திறப்பனை தினகரன் நிருபர்**

தற்பொழுது நிலவும் கடுமையான வரட்சி காரணமாக குடி நீர் தேடி அலையும் யானைக் கூட்டங்கள், மாலை வேளைகளில் குளக் கட்டுகளை நோக்கி வருகின்றன.

இவற்றைப் பார்ப்பதற்கு பிரதேச மக்கள் குளக்கட்டை நோக்கி வருகின்றனர்.அனுராதபுரம் குளக் கட்டில் வந்து குவியும் இந்த காட்டு யானைக் கூட்டம் நீரை அருந்தி விட்டு எவ்வித தீங்கும் இழைக்காது செல்கின்றன.

காட்டிலிருந்து வெளியில் வரும் இந்த யானைகளை, பார்வையிட ஒவ்வொரு நாளும் குளத்தின் காட்டுப் பகுதியை நோக்கி பொது மக்கள் படையெடுத்தும் வருகின்றனர்.

மனித நடமாட்டம் இல்லாத குளத்தின் காட்டுப் பகுதியிலிருந்து வெளி வரும் இந்த யானைகள் நீர் அருந்துவதற்காக குளக்கரைக்கு வருவதும், குளத்தில் இறங்கி நீரில் விளையாடுவதும் மக்களைப் பெரிதும் கவர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# கட்டாக்காலி நாய்களால் மக்கள்,மாணவர்கள் அவதி

**(திறப்பனை தினகரன் நிருபர்)**

அநுராதபுர மாவட்ட நாச்சியாதீவு பிரசே செயலகத்துக்குட்பட்ட 535 536 ஆகிய இரு கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் பொது மக்கள், கட்டாக்காலி நாய்களால்

பெரும் அவஸ்தைக்கு உள்ளாகியுள்ளனர்.

இதனால் இது வரையில் சுமார் 05 பேர் நாய்க்கடிக்கும் ஆளாகியுள்ளனர். வீதிகள், பொது இடங்களில் இந்த கட்டாக்காலி நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளன.

பொது மக்களைத் துரத்துவதும், கடிப்பதும் என இந்நாய்களின் தொல்லைகள் அதிகரித்துள்ளதால் இப்பகுதிகளில் நடமாட மக்கள் அச்சமுற்றுள்ளனர்.பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களே கடுமையாக அச்சமடைந்துள்ளனர். இது சம்பந்தமாக இது வரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என இப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.சம்பந்தப்பட்டவர்கள் இது விடயத்தில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் பொது மக்கள் எதிர்பார்க்கின்றனர்.



வாக்களித்த மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொருட்டு அனுராதபும் நகரை அண்மித்த 50,55, கடைப்பகுதி மற்றும் பன்டுகாபய புர பகுதிகளுக்கு அண்மையில் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க விஜயம் செய்தார்.ஆதரவாளர்கள் வெற்றிலை கொடுத்து வரவேற்பதை படத்தில் காணலாம்.
படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்

# வத்தளை,ஹெந்தலை — மருதானை; 06 கோடி10 இலட்சம் ரூபா செலவில் வீதி அபிவிருத்தி திட்டங்கள் ஆரம்பம்





ஒரு இலட்சம் கிலோமீட்டர் வீதி அபிவிருத்தி செய்யும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் வத்தளை பிரதேச சபையின் செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட 6 கோடியே 10 லட்சம் ரூபா செலவில் மதிப்புள்ள வீதி அபிவிருத்தி திட்டங்கள் இரண்டு ஆரம்பித்து (24) வைக்கப்பட்டது. சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் கிராமப்புற சாலைகள் மற்றும் பிற உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

ஹெந்தலை மருதானை பிரதான வீதி கார்பட் இடும் திட்டத்துக்கு 4 கோடியே 70 இலட்சம் ரூபாவும் பல கலைவத்த சுற்று வீதி கார்பட் இடும் திட்டத்துக்கு 1கோடியே 40 இலட்சம் ரூபாவும் ஒதுக்கப்பட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

# போதைப் பொருட்களுடன் இருவர் கைது

**( புத்தளம் தினகரன் விசேட நிருபர் )**

போதைப் பொருள் வைத்திருந்த இருவரை சிலாபம் தொகுதி போதைப் பொருள் தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்துள்ளனர்.

இவர்களிடமிருந்து 04 கிராம் 190 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் மீட்கப்பட்டது.

மாராவில பொலிஸ் பிரிவிற்குப்பட்ட மகாவெவ தாதுசேன மாவத்தை பிரதேசத்தில் வைத்து இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள்,தொடுவா கூடாமடுல்ல பகுதி,

மகாவெவ வீஹென பகுதியைச் சேர்ந்தவர்களாவர். கைது செய்யப்பட்ட இருவரும் சுற்றுலா விடுதியில் பணிபுரிந்தவர்கள் என விசாரணைகளில் தெரிய வந்துள்ளது



சிலாபம், மாதம்பை கிராமிய மருத்துவமனைக்கு அருகே கொள்கலன் லொறியொன்று விபத்துக்குள்ளானதில் வர்த்தக நிலையமொன்றுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது. அதிகளவு வேகமே விபத்துக்கு காரணமெனக் கண்டறியப்பட்டுள்ளது.
(படம் புத்தளம் மாவட்ட குறூப் நிருபர்)

# மாதம்பை பிரதேசத்தில் இயங்கிய கள்ளு உற்பத்தி நிலையம் முற்றுகை

**புத்தளம் தினகரன் விசேட நிருபர்**

மாதம்பை மனக்குளம் பிரதேசத்தில் செயற்பட்டு வந்த செயற்கை முறையில் கள்ளு தயாரிக்கும் உற்பத்தி நிலையமொன்றை ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் சுற்றி வளைத்துள்ளனர். இச்சுற்றி வளைப்பு இடம் பெற்ற போது, செயற்கை முறையில் கள்ளு தயாரித்துக் கொண்டிருந்த இருவர் கைது செய்யப்பட்டனர்.

அவ்விடத்தில் தயாரிக்கப்பட்ட 25ஆயிரம் லீட்டர் கள்ளு, இரண்டு தண்ணீர் இறைக்கும் இயந்திரம், எட்டு கிலோ சக்கரீன் , 15 போத்தல் கள்ளு , மூன்று பெரிய அளவிலான பிளாஸ்டிக் பெரல்கள் என்பவற்றை ஊழல் தடுப்பு பிரிவின் அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர். தென்னை மரத்திலிருந்து பெறப்பட்ட கள்ளுடன், நீர், சக்கரீன் மற்றும் சீனியைக் கலந்து இங்கு செயற்கை கள்ளு தயாரிக்கப் பட்டு வந்துள்ளதுமை விசாரணைகளில் தெரிய வந்துள்ளது. இங்கு தயாரிக்கப்பட்ட கள்ளு எந்தப் பிரதேசங்களுக்கு விற்பனை செய்யப்பட்டன, இங்கு வந்து செல்வோர் யார்,போன்ற தகவல்ளைப் பெறும் பொருட்டு பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முன்னாள் அமைச்சர் அஸ்வரின் மூன்றாம் ஆண்டு நினைவுப் பேருரை

முன்னாள் இராஜாங்க அமைச்சர் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வரின் 03வது வருட ஞாபகர்த்த வைபவமும், நினைவுப் பேருரையும் எதிர்வரும் (30) காலை 9.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் ஒன்றியம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

கொழும்பு 08, எல்விடிகல மாவத்தை, 7 இல் அமைந்துள்ள அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிபர் ஒன்றியத்தின் தலைமையகத்தில் நடைபெறவுள்ள மேற்படி இந்நிகழ்வில்

ஈரானுக்கான முன்னாள் இலங்கை தூதுவரும், முன்னாள் கொழும்பு மாநகர மேயரும், சோனக இஸ்லாமிய கலாசார நிலையத்தின் தலைவருமான ஒமர் காமில் "கடந்த பொதுத் தேர்தலும் முஸ்லிம்களும்" எனும் தலைப்பில் நினைவுப் பேருரை நிகழ்த்தவுள்ளார்.

மேலும், நிகழ்வில் மர்ஹூம் ஏ.எச்.எம்.அஸ்வர் அவர்களது ஞாபகத்தமாக வறிய உயர் தர மாணவர்களுக்கான புலமைப்பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் கலந்து கொள்ள விரும்புவோர் முன்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.



ஆனமடு உப்பளவத்த கிராமிய அபிவிருத்தி சங்கம் மற்றும் மரணாதார சங்கம் இணைந்து ஏற்பாடு செய்த இரத்ததான முகாம் அண்மையில் உப்பளவத்த சனசமூக நிலையத்தில் இடம் பெற்றது.இதில் கலந்து கொண்ட சிலர் உதிரம் கொடுப்பதை படத்தில் காணலாம்.
( புத்தளம் தினகரன் விசேட நிருபர் )





வை. எம். எம். ஏ. இன் விதவைத் தாய்மார்களின் மேம்பாட்டுக் குழுவின் செயற்றிட்ட தலைவர் கே.என்.டீனின் ஏற்பாட்டில் பல்வேறு உதவிகள் வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ பேரவையின் தேசிய தலைவர் சஹீட் எம். ரிஸ்மி பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். கொழும்பு மாவட்டத்தில் கொலொண்ணாவை, வெல்லம்பிட்டி பகுதியில் தெரிவு செய்யப்பட்ட விதவைத் தாய்மார்களுக்கு சுயதொழிலுக்காக நிதி உதவிகள், விசேட தேவையுடைய மூவின விதவைத் தாய்மார்களுக்கு சக்கர நாற்காலிகள்,கல்விக்கான நிதியுதவிகள் என்பன வழங்கி வைக்கப்பட்டன. மத்திய வை. எம். எம். ஏ தலைவர், தலைவி மற்றும் தேசிய பொது செயலாளர் சட்டத்தரணி சாபிர்சவாத், முன்னாள் தலைவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2020 ஓகஸ்ட் 26 புதன்கிழமை

# தினகரன்
THINAKARAN தினகரன்

தினகரன் விளம்பரம் 0112429367 | விற்பனை பிரிவு 0112429444, 0112429378 | ஆசிரியபீடம் editor.tkn@lakehouse.lk

**தொழுகை நேரம்**
24ம் திகதி முதல் 26ம் திகதி வரை

| | |
|---|---|
| சுபஹ் | 04.46 |
| லுஹர் | 12.14 |
| அஸர் | 03.25 |
| மஃரிப் | 06.22 |
| இஷா | 07.34 |

**இன்றைய சுபதினம்**
சார்வரி வருடம் ஆவணி 09

ராகுகாலம் : பகல் : 12.00 - 1.30 வரை
சுபநேரம் : காலை : 9.00 - 10.30 வரை
யோகம்: சித்தயோகம்
நட்சத்திரம்: அனுஷம் மாலை 5.50
திதி: அஷ்டமி



புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 09ஆவது பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான திசைமுகப்படுத்தல் கருத்தரங்கு நேற்று (25) பாராளுமன்றத்தில் நடைபெற்றது. இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ உரையாற்றுவதையும் புதிதாக தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களையும் படங்களில் காண்க.

# பலமான பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாட்டில் அதிகளவு விளைச்சல்கள் அவசியம்

## அதற்கான ஆலோசனைகள் ஜனாதிபதியால் முன்வைப்பு

- அரச, தனியார் மட்டத்தில் விதைகள் உற்பத்தி
- உரப் பாவனையில் புதியதோர் புரட்சி
- விவசாயிகள் வலுவூட்டப்படல் வேண்டும்




பலமான தேசிய பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கு விவசாய விளைச்சலை அதிகரிப்பதற்கான காலம் உருவாகியுள்ளதென சுட்டிக்காட்டிய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, அதற்காக பல யோசனைகளையும் முன்வைத்தார்.

கொவிட் நோய்த் தொற்று காரணமாக வீழ்ச்சியடைந்துள்ள ஏனைய நாடுகளின் பொருளாதாரத்தை கண்காணித்து தேசிய விவசாய பொருளாதாரத்தை வளப்படுத்த வேண்டியதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

விதை மற்றும் கன்றுகள் உற்பத்தி உரப் பாவனை, விவசாய புத்தாக்க ஆராய்ச்சிகள், களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்து ஆகிய அனைத்து துறைகள் குறித்தும் கவனம் செலுத்தி, எதிர்வரும் இரண்டு வருடங்களில் சவாலான இலக்கை வெற்றிகொள்ள வேண்டுமென்றும் ஜனாதிபதி தெரிவித்தார். நெல் மற்றும் தானியங்கள், சேதன உணவுகள், மரக்கறிகள், பழவகைகள், மிளகாய், வெங்காயம் மற்றும் உருளைக்கிழங்கு செய்கை மேம்பாடு, விதை உற்பத்திகள் மற்றும் உயர் தொழிநுட்ப கமத்தொழில் விவசாய இராஜாங்க அமைச்சின் எதிர்கால திட்டங்கள் குறித்து (24) பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி 06 ▶

## புரவலர் புத்தக பூங்காவின் 40 ஆவது வெளியீடு



புரவலர் புத்தக பூங்காவின் 40 ஆவது வெளியீடாக கொழும்பைச் சேர்ந்த ஊடகவியலாளர் பாக்கியநாதன் ராதா மேத்தாவின் 'உள்ளத்தில் வைப்போமா?' கட்டுரைத் தொகுதி நூல் விரைவில் வெளிவரவுள்ளது.

எழுத்தாளர்களுக்கு இலவசமாக நூல்களை வெளியிட்டு உதவும் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமரின் இத்திட்டத்தின் 40 ஆவது வெளியீடாகும். இதன் பிரதிகள் வைபவ ரீதியாக வெளியிட்டு வெகு விரைவில் நூலாசிரியருக்கு வழங்கி வைக்கப்படவுள்ளது.

## நாணயமாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 129.62 | 135.74 |
| கனடியன் டொலர் | 136.74 | 142.64 |
| யூரோ | 214.64 | 222.18 |
| ஜப்பான் யென் | 1.7076 | 1.7852 |
| சிங்கப்பூர் டொலர் | 132.26 | 137.75 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 238.55 | 246.39 |
| சுவிஸ் பிராங்க் | 198.62 | 206.62 |
| அமெரிக்க டொலர் | 182.65 | 187.25 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை |
|---|---|
| பஹ்ரின் டினார் | 490.00 |
| குவைத் டினார் | 604.16 |
| ஓமான் ரியால் | 479.79 |
| கட்டார் ரியால் | 50.72 |
| சவூதி ரியால் | 49.25 |
| ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 50.29 |

## குடு ரொஷானின் நெருங்கிய நண்பர் நேற்று கைதானார்

விளக்கமறியலில் உள்ள பிரதான குற்றவாளியான துப்பெஹி ஆராச்சிலாகே பிரசாத் ருவன் குமார எனும் 'குடு ரொஷான்' என்பவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்த 06 ▶

# ஹக்கீம் தலைமையில் மு.கா எம்.பிக்கள் இந்திய உயர்ஸ்தானிகருடன் சந்திப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர்கள், கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையில் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பக்லேயை (25) சந்தித்து சமகால அரசியல் நிலவரம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடினர். இச்சந்திப்பு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் நடைபெற்றது.

புதிய அரசாங்கம் பதவியேற்றுள்ள நிலையில் 19ஆவது அரசியலமைப்பு திருத்தத்தை நீக்குதல் மற்றும் புதிய அரசியலமைப்பை தயாரித்தல் போன்ற விடயங்கள் குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச 09ஆவது பாராளுமன்றத்தை அங்குரார்ப்பணம் செய்து வைத்து ஆற்றிய உரையில் குறிப்பிட்ட அம்சங்கள் தொடர்பில் ஆளுங்கட்சி, எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களும், அரசியல் பிரமுகர்கள் சிலரும் பல்வேறு கருத்துக்களை வெளிப்படையாகவும், பகிரங்கமாகவும் கூறிவருவது பற்றி அபிப்பிராயங்கள் தெரிவிக்கப்பட்டன.

அத்துடன் நாட்டில் வாழும் சகல சமூகத்தினரும் பயனடையக் கூடிய வகையில் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படும் வீடமைப்பு திட்டங்களை முன்னெடுப்பது சாலச் சிறந்ததாக இருக்குமென்றும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

கிழக்கு மாகாணத்தை பொறுத்தவரை நீர் விநியோகத் திட்டங்கள் போன்றவற்றை நடைமுறைப்படுத்துவதில் இந்திய அரசாங்கத்தின் ஒத்துழைப்பும் பெரிதும் 06 ▶

# பாராளுமன்ற தகவல் திரட்டு சஞ்சிகை நேற்று வெளியீடு

பாராளுமன்றத்தின் தொடர்பாடல் திணைக்களம் தயாரித்துள்ள முதலாவது சஞ்சிகையான 'பாராளுமன்ற தகவல் திரட்டு" சஞ்சிகை புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 09ஆவது பாராளுமன்றத்தின் உறுப்பினர்களுக்கான திசைமுகப் படுத்தல் கருத்தரங்கில் நேற்று (25) வெளியிடப்பட்டது. நேற்றைய நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரதமர் மஹிந்த ராஜபக்ச, சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன, பிரதி சபாநாயகர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, குழுக்களின் பிரதித் தலைவர் அங்கஜன் இராமநாதன், சபை முதல்வர் தினேஷ் குணவர்த்தன, ஆளும் கட்சியின் முதற்கோலாசான் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ மற்றும் எதிர்க்கட்சியின் முதற்கோலாசான் லக்ஷ்மன் கிரியெல்ல ஆகியோருக்கு பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க முதலாவது சஞ்சிகையை 06 ▶



கொழும்பு, வெள்ளவத்தை உருத்திரா மாவத்தை சைவ மங்கயர் வித்தியாலயத்திற்கு நீண்டதூரம் ஒலியை எழுப்பக்கூடிய ஐம்பொன் கண்டாமணி வழங்கும் வைபவம் அண்மையில் கல்லூரி ஆலய பூஜையுடன் நடைபெற்றது. பம்பலப்பிட்டி, புதிய கதிரேசன் ஆலய அறங்காவலர் எஸ். இராஜேந்திரன் செட்டியார் இதனை அன்பளிப்பு செய்துள்ளார். நிகழ்வில் முகாமையாளர் சிவாநந்தினி யோகேந்திரர துரைசாமி, அதிபர் அருந்ததி இராஜ விஜயன், இராஜேந்திரன் செட்டியார் ஆகியோர் இணைந்து மணிஓசை எழுப்பி பூஜையை ஆரம்பித்தனர். அருகில் உப அதிபர் வளர்மதி சுமாதரன் நிற்பதையும், முகாமையாளர் செட்டியார் உரையாற்றுவதையும் கலந்து கொண்ட மாணவிகளையும் படங்களில் காணலாம். (படங்கள்: கொழும்பு வடக்கு நிருபர்)



தினகரன் THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சார்வரி வருடம் ஆவணி மாதம் 10ஆம் நாள் புதன்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 முஹர்ரம் பிறை 06

### குறள் தரும் சிந்தனை



துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை

துறந்தவர்கும் வறியவர்க்கும் தன்னிடத்தே
இறந்தவர்க்கும் இல்லறம் மேற்கொண்டு
வாழ்கிறவன் துணையாவான்.

# வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்களின் பாதுகாப்பு

வெளிநாடுகளில் தொழில் புரிகின்ற இலங்கையர்களுக்கு நன்மையளிக்கும் வகையில் அவர்களது தகவல்கள் அடங்கிய களஞ்சியமொன்றை உருவாக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன தெரிவித்துள்ளார். பொதுத் தேர்தலுக்குப் பின்னர் புதிய அரசாங்கம் பதவியேற்றதையடுத்து அறிமுகப்படுத்தப்படவிருக்கும் திட்டம் இதுவாகும்.

மத்திய கிழக்கு நாடுகளில் மாத்திரமன்றி உலகின் பல்வேறு நாடுகளிலும் இலட்சக்கணக்கான இலங்கையர்கள் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கும் இவர்களது உறவினர்களுக்கும் பயனளிக்கும் வகையிலே விசேட தகவல் பிரிவு உருவாக்கப்படவுள்ளது. பல்வேறு நாடுகளிலும் பணி புரியும் இலங்கையர்களின் குடும்பங்களுக்குத் தேவையான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்கவும், எதிர்கொள்ளப்படுகின்ற பிரச்சினைகளில் தலையீடுகள் மேற்கொள்வதற்கும் வசதியாக மேற்படி செயற்றிட்டம் அமையுமென்று வெளிநாட்டு வேலைவாய்ப்பு இராஜாங்க அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மேலும் தெரிவித்துள்ளார்.

எமது நாட்டுக்கு அந்நிய செலாவணியை அதிகம் ஈட்டித் தருவது வெளிநாட்டு வேலைவாய்ப்புத் துறை ஆகும். மத்திய கிழக்கு நாடுகளிலேயே கூடுதலான இலங்கையர்கள் தொழில் புரிகின்றனர். அவ்வாறு அங்கு பணி புரிகின்ற இலட்சக்கணக்கான இலங்கையர்களாலேயே எமது நாட்டுக்கு கூடுதலான அந்நிய செலாவணி கிடைத்து வருகின்றது.

ஆனாலும் அந்நிய செலாவணியை அதிகமாக ஈட்டித் தருகின்ற இலங்கையர்களின் நலன்கள் மத்திய கிழக்கு நாடுகளில் திருப்திகரமாக இல்லை. மத்திய கிழக்கு நாடுகளில் இலங்கை பணிப்பெண்கள் பல்லாயிரக்கணக்கானோர் தொழில் புரிகின்றனர். இவர்களில் அரசாங்கத்தால் பதிவு செய்யப்பட்ட முகவர்கள் ஊடாக சென்றோர் மாத்திரமன்றி, சட்டவிரோதமான முகவர்கள் ஊடாக சென்றவர்களும் அடங்குகின்றனர். அரசு அங்கீகாரம் பெறாத முகவர்களால் அனுப்பப்பட்ட பணிப்பெண்கள் அந்நாடுகளில் அநீதிகளை எதிர்நோக்கும் போது அதற்கு தீர்வு காண்பது முடியாத காரியமாக உள்ளது.

மத்திய கிழக்கில் பணிபுரியும் பணிப்பெண்கள் பலர் கடந்த காலத்தில் உடல் ரீதியான துன்புறுத்தல்களுக்கு உள்ளாகி நாடு திரும்பியதை நாம் அறிந்துள்ளோம். தீக்காயங்கள் மற்றும் உடலில் இரும்பு ஆணி ஏற்றப்பட்ட காயங்கள் போன்றவற்றுடன் பணிப்பெண்கள் நாடு திரும்பி உள்ளனர். மேலும் பலர் வீட்டு எஜமானர்களால் சம்பளம் வழங்கப்படாத நிலையில் நாடு திரும்பிய பரிதாபக் கதைகளும் உள்ளன.

இதேவேளை மத்திய கிழக்கு நாடுகளில் சம்பளம் வழங்கப்படாமலும் துன்புறுத்தல்களுக்கு உள்ளான நிலையிலும் பல பெண்கள் தாயகம் திரும்புவதற்கே வழியில்லாமல் அங்கு அவதியுறுவதாகவும் தகவல்கள் வருகின்றன.

இவற்றுக்கெல்லாம் நிரந்தரமான தீர்வு காணப்படுவது அவசியமாகும். எமது நாட்டுப் பெண்கள் வறுமையின் நிமித்தம் இன்னொரு நாட்டிற்கு சென்று தொழில் புரியும் போது ஏற்படுகின்ற இவ்வாறான கொடுமைகள் உண்மையிலேயே பரிதாபம் நிறைந்தவை ஆகும். பெண்கள் பணிப்பெண் வேலைக்காக வெளிநாடுகளுக்கு செல்வது என்பது பலவிதமான சிக்கல்கள் நிறைந்த விடயமாகும். அதிலும் திருமணமான தாய்மார் வெளிநாட்டு பணிப்பெண் வேலைக்கு செல்லும் போது அவர்களது குடும்பத்தில் ஏற்படுகின்ற துயரங்கள் குறித்து ஊடகங்களில் செய்திகள் வந்து கொண்டே இருக்கின்றன. தாயின் பராமரிப்பு கிடைக்காத நிலையில் சிறு பிள்ளைகள் துன்புறுத்தல்களுக்கும் துஷ்பிரயோகங்களுக்கும் உள்ளாகும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. குடும்ப கட்டமைப்பிலும் பலவிதமான சீரழிவுகள் ஏற்படுகின்றன.

குடும்ப வறுமையை போக்கிக் கொள்வதற்காக இலங்கை பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு செல்வதை உடனடியாக தடுத்து நிறுத்துவது தீர்வைத் தந்து விடப் போவதில்லை. எமது நாட்டின் குடும்பப் பெண்கள் மத்திய கிழக்கு நாடுகளுக்கு வீட்டுப் பணிப் பெண்களாக தொழிலுக்குச் செல்வதில் அரசாங்கத்துக்கும் உடன்பாடு கிடையாது. ஆனாலும் இவ்வாறு அவர்கள் தொழில் தேடிச் செல்வதை உடனடியாகத் தடுத்து நிறுத்தி விடவும் முடியாது.

குடும்ப வறுமையைப் போக்குவதற்கான மாற்றுத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதன் மூலமே எமது நாட்டு பெண்கள் மத்திய கிழக்கு நோக்கி தொழில் வாய்ப்புக்காகச் செல்வதை படிப்படியாக கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும்.

எவ்வாறாயினும் மத்திய கிழக்கில் தொழில் புரிகின்ற இலங்கையர்கள் விடயத்தில் இலங்கை அரசாங்கம் தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கை பாராட்டப்பட வேண்டியதாகும்.அங்கு தொழில் புரிவோரின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான ஒரு சிறந்த திட்டமாகவே இதனைக் கருத முடியும்.

editor.tkn@lakehouse.lk

# வெறுப்பை வெளிக்காட்டாதீர்கள்: ஒற்றுமையாக, அன்பாக இருங்கள்

கொரோனா வைரஸ் பற்றிய பல நேர்மாறான விடயங்களை மக்கள் கேள்விப்படுகின்றனர். மக்கள் இரண்டு விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். ஒன்று உங்களிடமிருந்து யாருக்கும் இந்த நோய் பரவக் கூடாது, இரண்டாவது யாரிடமிருந்தும் நீங்கள் இந்நோயைப் பெற்றுக் கொள்ளக் கூடாது. சமூக இடைவெளியை கடைப்பிடியுங்கள், கைகளைக் கழுவி சுத்தமாக வைத்திருங்கள். எதற்கும் பதற்றப்படாமல் இருங்கள்.

இது பயப்படுவதற்கான நேரமல்ல, பொறுமையுடன் இருக்க வேண்டிய நேரமாகும். இது விழிப்புணர்வுடன், உங்களின் உள்ளே இருக்கும் பலத்தைக் கொண்டு தைரியமாகச் செயற்படுவதற்கான நேரமாகும்.இந்த நிலைமை இப்படியே இருக்கப் போவதில்லை.

மனிதனின் மனம் நேரத்திற்கு நேரம் மாறிக் கொண்டே இருக்கும். ஒரு சிலரே ஒரே வர்ணத்தில் வாழ்க்கையைக் கொண்டு செல்கின்றனர். வாழ்வில் ஆனந்தம் உண்டு என்பதை நாம் என்றும் மறக்கக் கூடாது. எமது இதயம் ஆனந்தத்தை தேடுகின்றது. அந்த ஆனந்தத்தை இப்பொழுதும் நாம் பெற முடியும். அந்த ஆனந்தம் உங்களின் உள்ளேதான் இருக்கின்றது. நாம் வெளியிலிருந்து உண்மையான ஆனந்தத்தைப் பெற முடியாது. ஆகவே நீங்கள் அதனைத் தேடுங்கள், உங்களை நீங்களே அறிந்து கொள்ளுங்கள்.

நாம் இந்தச் சூழ்நிலையை, சில நன்மைகளைப் பெற்றுக் கொள்ள ஏற்பட்ட சந்தர்ப்பமாகக் கூடக் கருதலாம். வெளிப்புறச் சூழல் பாதகமாக இருக்கும் இந்நேரத்தில் உட்புறமாக உங்கள் மனதை திருப்புங்கள். ஆயிரமாயிரம் வருடங்களுக்கு முன்பே பல அறிஞர்களும் மகான்களும் கூறிச் சென்ற செய்திகள் உள்ளன. இந்த உடல் 'வாழ்க்கைக் கடலைக் கடப்பதற்கான ஓர் படகு', 'வந்து போகும் இந்த மூச்சுத்தான் அருள்' என்று கூறப்பட்டுள்ளது. இந்த அருள் இப்போது உங்கள் மீது பொழிகின்றது. இந்த மூச்சு உங்களின் உள்ளே வந்து போகின்றதே... அப்படியானால் கடவுளின் ஆசீர்வாதம் உங்களிடம் உண்டல்லவா. நீங்கள் அதனைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் உள்ளத்திலே உள்ள விளக்கை ஏற்றுங்கள், அந்த ஒளியில் இருள் விலகி விடும், உண்மை தெளிவாகப் புலப்படும்.

## பிரேம் ராவத் பல நாடுகளிலுமுள்ள மக்களிடம் 'அமைதியை உணர்வது ஒவ்வொரு மனிதனுக்கும் சாத்தியம்' என உரையாற்றி வருகின்றார். அதிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சில பகுதிகள் இவை...



பிறப்பும், இறப்பும் இறைவனின் அருளினாலே நடைபெறுகின்றன. நீங்கள் உயிருடன் இருக்கும் வரை பயப்படுவதற்கான அவசியமே இல்லை. எமக்குக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை புரிந்து கொள்ளுங்கள், வாழ்க்கை கிடைத்திருக்கின்றது, மெய்ஞானம் உள்ளது, உங்களை உணர்ந்து கொள்ளுங்கள், விழிப்புணர்வுடன் வாழுங்கள் மற்றும் இதயத்தில் நன்றியை உணருங்கள், எமக்குத் தரப்பட்ட இந்த உயிர்வாழ்வை ஆனந்தமாக அனுபவியுங்கள்.

உங்கள் குடும்பத்தினரோடு ஒற்றுமையாகவும், அன்பாகவும் இருங்கள். எவரிடமும் வெறுப்பைக் காட்டாதீர்கள். இந்தக் கடினமான காலம் விரைவில் கடந்து சென்று விடும். பொறுமையாக இருங்கள். சகிப்புத்தன்மையைக் கற்றுக் கொள்ள உங்களுக்குக் கிடைத்த ஒரு நல்ல சந்தர்ப்பமாக எண்ணுங்கள். இறுதி மூச்சுவரை இந்த ஆனந்தம் உங்கள் உள்ளேதான் இருக்கும். தேடிக் கண்டு கொள்ளுங்கள், ஆனந்தமாக வாழுங்கள்.

**மேலதிக விபரங்களுக்கு:**
www.timelesstoday.tv
www.premrawat.com
https://www.youtube.com/c/PremRawatOfficial/featured
www.tprf.org/peaceeducationprogram
0777793140

**தொகுப்பு: இ.மனோகரன்...**

# மாவட்ட ஒருங்கிணைப்பு குழு அதிகாரத்தில் வீணற்ற குழப்பம்

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள், வரையறைகள், அதிகார எல்லைகள் தொடர்பாக இன்று பல குழப்பமான கருத்துக்கள் வெளிவந்து கொண்டு இருக்கின்றன.

குறிப்பாக, அரச அதிகாரிகள் மட்டத்தில் கூட இது தொடர்பாக சில தெளிவற்ற கருத்துக்கள் நிலவுவதாக அறிய வருகின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு என்பது ஒரு மாவட்டத்தின் நிறைவேற்று செயற்பாடுகளை, குறிப்பாக அபிவிருத்தித் திட்டங்களை ஒன்றிணைப்பதற்கும், மேற்பார்வை செய்வதற்குமான ஒரு நிர்வாக ரீதியான ஏற்பாடாகும். இக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக பொது நிர்வாக அமைச்சு, ஜனாதிபதி செயலகம், உள்நாட்டலுவல்கள் அமைச்சு போன்றவற்றின் சுற்றறிக்கைகளே வழிகாட்டியாக அமைகின்றன.

அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு பொது இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே முடிவுகளை எடுக்க வேண்டுமென வழிகாட்டல்களில் குறிப்பிடப்பட்டு இருக்கின்றனவே தவிர இணைத்தலைவரோ, அல்லது மாவட்ட செயலாளரோ தன்னிச்சையாக முடிவுகளை எடுப்பதற்கோ, மேற்பார்வை செய்வதற்கோ அதிகாரமளிக்கப்பட்டவர்களாக அச்சுற்றிக்கைகளில் குறிப்பிடப்படவில்லை.

மேலும் ஓர் அமைச்சர்/அமைச்சுக்கு அரசியல் அமைப்பு ரீதியாகவும் சட்ட ஏற்பாடுகளினூடாகவும் வழங்கப்பட்டுள்ள அதிகார எல்லையை மீறியும் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு முடிவுகளை எடுக்க முடியாது. ஓர் அமைச்சரின் தத்துவங்கள் அரசியல் அமைப்பின் பிரிவு 42, 43 இல் விதந்துரைக்கப்பட்டவைக்கு அமைவாக அமைகின்றன.

ஓர் அமைச்சரின் பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைய தனது பொறுப்பிலுள்ள அரசாங்க திணைக்களங்கள் அல்லது வேறு நிறுவனங்கள் செயற்பட வேண்டுமென்பது அரசியல் அமைப்பின் பிரிவு 52(2) இல் அமைச்சருக்கு வழங்கியுள்ள தத்துவம். அதே போல், ஓர் அமைச்சிற்கு உரிய விடயப் பரப்புகள் அந்தந்த அமைச்சுக்குரிய சட்ட ஏற்பாடுகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

அத்துடன் ஜனாதிபதியின் செயலாளரினால் கையொப்பமிடப்பட்டு வெளியிடப்பட்ட 19.08.2020 திகதிய மாவட்ட செயலாளர்களுக்கான கடிதத்தில் ஜனாதிபதி ஒவ்வொரு மாவட்டத்தினதும் ஒருங்கிணைப்புக் குழுவிற்கு அம்மாகாணத்தின் ஆளுநரையும், ஒரு பாராளுமன்ற உறுப்பினரையும் இணைத்தலைவர்களாக நியமித்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இதிலிருந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவராக எவரும் நியமிக்கப்படவில்லை என்பதும் தெளிவாகின்றது.

மாவட்ட மற்றும் பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தொடர்பாக சுற்றறிக்கைகள் காலத்துக்குக் காலம் சில சில மாற்றங்களுடன் வெளிவந்துள்ளன.

இவற்றில், விடயங்களை தெளிவுபடுத்தும் முக்கியத்துவம் கொண்டவையாக 24.10.1996 ஆம் திகதிய பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை, 23.03.2016 ஆம் திகதிய ஜனாதிபதி அலுவலகச் சுற்றிக்கை, 22.05.2017 திகதிய உள்நாட்டலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை, 13.02.2019 மற்றும் 27.06.2019 ஆம் திகதிய உள்ளக உள்நாட்டலுவல்கள் மாகாண அமைச்சு ஆகியவற்றின் சுற்றிக்கைகள் குறிப்பிடத்தக்கவை. இச்சுற்றிக்கைகளில் இருந்து மாவட்ட அபிவிருத்தி குழுக்களின் செயற்பாடுகள் தொடர்பாக பின்வருவனவற்றைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு மாவட்ட மட்டத்தில் காணப்படும் அனைத்து அபிவிருத்தி கருத்திட்டங்களையும் ஒருங்கிணைப்பு மற்றும் மேற்பார்வை செய்யும் பிரதான குழுவாகும்.

மாவட்ட செயலாளர் அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகளில் செயற்படுத்தப்படும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மாவட்ட இணைப்புக்குழுக்களில் கலந்துரையாடி பொது இணக்கப்பாட்டின்படி செயற்படுத்தப்பட வேண்டும்



மேற்குறித்த நோக்கத்தை அடைவதற்காக செற்படும் போது அரச சுற்றறிக்கைகள் போன்றவற்றிலுள்ள சட்டபூர்வ ஏற்பாடுகள் காரணமாக ஏதாவது தடையோ, சிக்கல் நிலையோ ஏற்படுமானால் பொருத்தமான திருத்தங்களை மேற்கொள்ளுதல் தொடர்பில் ஆராய்ந்து பார்ப்பதற்காக புதிய முன்மொழிவுகளை முறைப்படி உரிய அலுவலர்களுக்கு (நிரல் அமைச்சுக்கள்/ திணைக்களங்கள்/ அரச திணைக்களங்கள்/ அரச நிறுவனங்கள்) அனுப்ப வேண்டியது மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் பொறுப்பாகும்.

மாவட்ட இணைப்புக் குழுவால் எடுக்கப்பட்ட சில முடிவுகள் விடயம் சார்ந்த அமைச்சின் நடவடிக்கைகளை பாதிக்கும் சந்தர்ப்பம் ஒன்றில் அக்குழு முடிவை செயற்படுத்துவதற்கு முன் சம்பந்தப்பட்ட விடயம் சார்ந்த அமைச்சினதும், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அமைச்சினதும், உள்நாட்டலுவல்கள் அமைச்சினதும் இணக்கத்தைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

அந்த வகையில் தற்போது ஒருங்கிணைப்புக் குழு தலைமை தொடர்பில் அதிகாரிகளுக்கு, குறிப்பாக உயர் அதிகாரிகளுக்கு, ஏற்பட்டுள்ள குழப்ப நிலையை அதற்கென வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைகளை சரிவர புரிந்து கொண்டு மாவட்டத்தின் அபிவிருத்தி மற்றும் செயற்பாடுகளை தடையின்றி மேற்கொள்ளவேண்டும்என்பதேஇத்தெளிவுபடுத்தலின் நோக்கமாகும்.

**சி. தவராசா...**
**(முன்னாள் எதிர்க்கட்சி தலைவர், வட மாகாண சபை)**

# நேரு குடும்பத்தின் தலைமைக்கு பின்னர் காங்கிரஸின் எதிர்காலம்

இந்தியாவின் இன்றைய சூழலில் சோனியா காந்தியின் பங்கு மிகவும் முக்கியமானது. அவர் இல்லாத காங்கிரஸை கற்பனை செய்ய கூட முடியவில்லை. அன்று சோனியா என்ற அச்சாணியில்தான் பரந்து விரிந்த இந்திய தேசம் சுழன்று கொண்டிருந்தது. அப்போது நாட்டில் எந்த பகுதியிலும் மதக்கலவரங்கள் இல்லை, அரசியல் வன்முறைகள் இல்லை.

எதிர்க்கட்சிகள் ஒவ்வொரு முறை இடையூறுகள் செய்து, நாடாளுமன்றத்தை முடக்கினாலும், அவர்களை சோனியா கடிந்து பேசியதில்லை. தனிப்பட்ட முறையில் யாரையும் மனம் புண்படும்படி விமர்சித்ததும் இல்லை. எதிர்க்கட்சி தலைவர்களாக இருந்தாலும் அவர்களிடம் நட்போடு பேசும் நற்குணமும் அவருக்கு உண்டு.எடுத்தேன் கவிழ்த்தேன் என்று செயல்படாமல், பழிவாங்கும் நடவடிக்கையில் இறங்காமல், அவர்களை மதித்து போற்றும் மாண்பும் சோனியாவுக்கு உண்டு.



அன்றைய பிரதமர் மன்மோகனுக்கு முழு சுதந்திரத்தை தந்தார். யாராவது ஊழலில் சிக்கினால், தயவு தாட்சண்யம் இல்லாமல் பதவியில் இருந்து தூக்கி எறிந்தார். முக்கியமாக, இவர் மீது இன்னமும் ஊழலின் நிழல் கூட படியாமல் இருக்கிறது. இவர்களை பயன்படுத்தி சிலர் ஆதாயம் அடைந்தார்களே தவிர, நேரு குடும்பத்தில் உள்ள யாருமே நீதிமன்றம், வழக்கு, கைது, சிறை என்ற அவப்பெயருக்கு ஆளானதில்லை.

2011இல்தான் சோனியாவுக்கு உடம்பு சரியில்லாமல் போனது. வெளிநாட்டு சிகிச்சைக்காக அமெரிக்காவும் சென்றார். வெளிநாட்டு சிகிச்சை என்றாலே அச்சமும், பயமும் தோன்றி விடும். இவர் என்று வெளிநாடு போனாரோ அப்போதே இந்தியாவில் 2 பெரும் நெருக்கடிகளை நாடு சந்தித்தது. ஒன்று அன்னா ஹசாரே விவகாரம். மற்றொன்று பிரணாப்_ சிதம்பரம் இடையே நடந்த உரசல்! சோனியா நாட்டில் இல்லாத நேரத்திலேயே, ஒரு பெரும் நெருக்கடியை தந்து மன்மோகன் அரசை கவிழ்த்து விடலாம் என்று பா.ஜ.க காய் நகர்த்தியது. அதற்கு எடுப்பார் கைப்பிள்ளையாக கிடைத்தார் அன்னா ஹசாரே. சோனியா சிகிச்சையில் இருந்து திரும்பி வந்தவுடனேயே இந்த 2 பிரச்சினைகளை சரி செய்தார். எதிர்க்கட்சிகளின் எதிர்பார்ப்பை தகர்த்தெறிந்தார்.

அவ்வாறான ஆளுமையும் திறமையும் மிக்க சோனியாவை உடல்நலம் அதிகமாகவே சோதித்து வருகிறது. இந்த சமயத்தில்தான் ராகுல் தீவிரமாக களமிறக்கப்பட்டார்.ஆனால் அதற்கு அவர் பொருத்தமானவராக இல்லை என்பதே அன்றைய, இன்றைய உண்மை. அவர் இன்னும் முழுமையாக பக்குவப்படவில்லை. அரைகுறையான மற்றும் அவசரமான விமர்சனங்களை அள்ளி வீசி வருகிறார். நேருவும், இந்தியாவும் பிறந்து வளர்ந்த காங்கிரஸ் கோட்டையான உ.பியில் படுதோல்வி அடைய காரணமாக இருந்ததே ராகுல்தான் என்பதை மறக்க முடியாது.

அவர் நிச்சயம் அரசியலில் இன்னும் பயிற்சி பெற வேண்டும், பக்குவமடைய வேண்டும் என்பதை ஆணித்தரமாக சொல்ல வேண்டி உள்ளது.

தற்போது கட்சி இருக்கும் நிலைமை பற்றி நேர்மையாக சுய ஆய்வு செய்ய ஒட்டுமொத்த காங்கிரஸே தயார் ஆக வேண்டும். காங்கிரஸ் கட்சியில் உள்ள இளைஞர்கள் நம்பிக் கையிழந்து கொண்டு வருகிறார்கள். அவர்களை நம்பிக்கையை மீட்டெடுக்க வலுவான தலைமை தேவை என்ற புள்ளியில் வந்து காங்கிரஸ் இன்று நிற்கின்றது. நிலையான மற்றும் முழுநேரத் தலைவர் இல்லாததால் , கட்சி திசைதெரியாமல் பயணப்பட ஆரம்பித்து விட்டது.

# மக்களை ஏமாற்றி, நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு திட்டத்தையும் செயற்படுத்த மாட்டோம்

**'நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் சவால்களை முறியடிக்கலாம்' என்கிறார் நிதி மூலதன சந்தை மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால்.**

***கேள்வி: தேர்தலில் போட்டியிடாமல் உங்களுக்குக் கிடைத்த இராஜாங்க அமைச்சர் பதவியைப் பற்றி என்ன நினைக்கின்றீர்கள்?***

**பதில்:** எமது நாட்டில் பொருளாதாரம் பாதிக்கப்பட்ட துறைகள் பல உள்ளன. அவை அனைத்தையும் மேம்படுத்த வேண்டும் .அதனை நாம் செய்வோம் என்ற நம்பிக்கையிலேயே ஜனாதிபதி எமக்கு பொறுப்புகளை வழங்கியுள்ளார். ஜனாதிபதி பிரகடனப்படுத்தியுள்ள 'சுபிட்சத்தின் நோக்கு' என்னும் திட்டத்தின் ஒரு பகுதியே இந்த அமைச்சின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ளது. அத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக இராஜாங்க அமைச்சர் பதவியை ஜனாதிபதி எனக்கு வழங்கியுள்ளார். ஜனாதிபதி கூறுவது போன்று நாம் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே இச்சவாலை எதிர்கொள்ள முடியும்.

***கேள்வி: நீங்கள் மத்திய வங்கி ஆளுநராக கடமையாற்றியவர், அந்த அனுபவங்களின் மூலம் தற்போதைய பதவியை முன்னெடுத்துச் செல்ல முடியுமா?***

**பதில்:** நிதித்துறையின் ஸ்திரத்தன்மையை பாதுகாப்பதுதான் மத்திய வங்கியின் கடமையாகும். ரூபாவின் பெறுமதியை பேணி, எமது நாட்டின் பொருளாதாரத்தை சமநிலையில் வைத்திருப்பது அதன் பொறுப்பாகும். ஆனால் நிதி அமைச்சுக்கான பொறுப்பு அதையும் விட விரிவானதாகும். நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்காக விழிப்புணர்வை ஏற்படுத்துவது அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பாகும். மத்திய வங்கி நிதி அமைச்சின் ஒரு நிறுவனம் மாத்திரமேயாகும். அதையும் விட பல பணிகளை நிதி அமைச்சு நிறைவேற்ற வேண்டியுள்ளது. அதனை நிறைவேற்ற மத்திய வங்கியின் ஆளுநராக கடமையாற்றிய அனுபவம் எனக்கு உதவியாக இருக்கும் என நான் நம்புகின்றேன்.

***கேள்வி: சம்பிரதாய அரசியல்வாதியாக இல்லாத நீங்கள் அரச சேவையிலிருந்து அரசியலுக்கு வந்துள்ளீர்கள். இதனை நீங்கள் எவ்வாறு உணர்கின்றீர்கள். ?***

**பதில்:** தொழில்ரீதியாக அனுபவமுள்ள அறிஞர்களை பாராளுமன்றத்துக்கு நியமிக்க ஜனாதிபதியும் பிரதமரும் கவனம் செலுத்தியுள்ளார்கள். அதனால் இம்முறை தேர்தலில் பொதுமக்கள் பாரம்பரிய சிரேஷ்ட அரசியல்வாதிகளை புறந்தள்ளி கல்விமான்களான பலரை தெரிவு செய்துள்ளார்கள். அதேபோன்று இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தனது தேசியப் பட்டியல் மூலமாகவும் பல தொழில் திறமையுள்ள அறிஞர்களை தெரிவு செய்துள்ளது. அதன் காரணமாகவே எனக்கும் பாராளுமன்றத்தில் தேசியப் பட்டியல் உறுப்பினர் பதவி கிடைத்தது. கடந்த காலங்களில் பொதுமக்கள் பாராளுமன்றத்தின் மீது வெறுப்பையே கொண்டிருந்தார்கள். அதனை ஓரளவுக்கு மாற்றி பாராளுமன்றத்தை புதியதாக்க இத்தலைவர்கள் எடுத்த முயற்சி வெற்றி அடைந்துள்ளது என்பது உங்களுக்கே தெரியும். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசின் அமைச்சர் குழுவில் 60 வீதமானவர்கள் புதிய முகங்களே ஆவர். இவர்களையும் அனுபவம் வாய்ந்த பழைய அணியினரையும் இணைத்துக் கொண்டு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பசில் ராஜபக்ஷ ஆகிய தலைவர்கள்



## 'அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் சவால்களை முறியடிக்கலாம்'

நாட்டை புதிதாக உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளார்கள்.

***கேள்வி: ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 'நான் எனது கடமைகளை நிறைவேற்றுகிறேன், நீங்களும் உங்கள் கடமைகளை நிறைவேற்றுங்கள்' என்று கூறியிருந்தார். அதனை மக்கள் நிறைவேற்றியுள்ளார்கள் அல்லவா?***

**பதில்:** ஆம், பொதுமக்கள் தமது கடமைகளை சரியாக நிறைவேற்றியுள்ளார்கள். அதே போல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும் மிகவும் சரியான முறையில் தமது பொறுப்புகளை நிறைவேற்றக் கூடிய அமைச்சரவை ஒன்றை அமைத்துள்ளார். இதன் மூலம் மிகக் குறுகிய காலத்தில் மக்கள் அறியக் கூடிய வகையில் பல பணிகளை ஆற்ற முடியும் என நான் நம்புகின்றேன்.

***கேள்வி: நல்லாட்சி அரசாங்க காலத்தில் சரிவடைந்த பொருளாதாரம் கொவிட் 19 காரணமாக மேலும் சரிவடைந்துள்ளது. இதனை சரி செய்ய நீங்கள் எவ்வாறான நடைமுறைகளை பின்பற்ற உள்ளீர்கள்?***

**பதில்:** எமது நாடு கடந்த ஐந்து வருடங்களாக பாரிய பொருளாதார பின்னடைவை சந்தித்திருந்தது. ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல் மற்றும் கொவிட் 19 தொற்று என்பன பொருளாதாரத்தை மேலும் சீர்குலைத்தன. எமது அரசாங்கம் மிகவும் மோசமான பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. ஆனால் அதைப் பற்றி எண்ணி கவலைப்பட்டுக் கொண்டிருக்க முடியாது. நாம் அவற்றை வெல்லக் கூடிய வழிவகைகளை கண்டறிய வேண்டும்.அதற்கான திட்டங்களை நாம் தயாரித்து வருகிறோம்.

***கேள்வி: மக்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதாக கூறுவதென்பது சர்வதேச நிதியம் போன்ற நிறுவனங்களிடமிருந்து நாட்டுக்கு பொருந்தாத நிபந்தனைகளுக்கு உட்பட்டு கடனாக பணத்தை பெறுவதா?***

**பதில்:** இந்தக் கேள்விக்கான பின்னணி கடந்த அரசாங்கத்தின் பொருளாதார நடைமுறை என நான் எண்ணுகின்றேன். நாம் மக்களை ஏமாற்றி நாட்டுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தவொரு திட்டத்தையும் செயல்படுத்த மாட்டோம். உங்களுக்குத் தெரியும் நாம் யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த வேளையில் சர்வதேசம் பெரும் பொருளாதார பிரச்சினையை சந்தித்திருந்தது. அது எம்மையும் பாதித்தது. அவ்வேளையில் நாம் சர்வதேச நிதியத்திடம் இருந்து நிபந்தனைகளின்றி கடன் பெற்றோம்.

## இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் பேட்டி

***கேள்வி: இம்முறை அமைச்சர்களை நியமித்து அவர்களுக்கு வழங்கிய பொறுப்புகள் சிலரால் கேலி செய்யப்பட்டதல்லவா? அது பற்றி என்ன கூறுகின்றீர்கள்?***

**பதில்:** இம்முறை அமைச்சர் குழுவை நியமிக்கும் போது எந்த ஒரு அமைச்சரும் தனது கடமையில் இருந்து விலகிச் செல்லாதவாறு பொறுப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அதேபோன்று பொதுமக்களும் தங்களுடைய பிரச்சினைகளை தெரிவிப்பதற்கு நிலையான நபர்களையும் நிறுவனங்களையும் அரசாங்கம் நியமித்துள்ளது. வெற்றிலை உற்பத்தி செய்யும் விவசாயி, மட்பாண்ட உற்பத்தியாளர்கள் போன்ற தேசிய கைத்தொழிலாளர்கள் தங்களது பிரச்சினைகளை கூறுவதற்கு யார் பின்னாலும் அலைய வேண்டிய அவசியமில்லை. அது முடிவுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதன் மூலம் வேகமான தேசிய உற்பத்தியை எதிர்பார்க்க முடியும். அதற்கு நான் உதாரணம் ஒன்றைக் கூறுகின்றேன். மகாவலி திட்டத்தை எடுத்துக் கொண்டால் அது நீர்ப்பாசனத்துடன் தொடர்புடையது. அதனை நீர்ப்பாசனத்துறையுடன் இணைக்காமல் மகாவலி அபிவிருத்தி அமைச்சு என்ற ஒன்றை அமைத்து மிகக் குறுகிய காலத்தில் அதனை வெற்றி பெறச் செய்ய முடிந்தது. அதன்படியே தேசிய உற்பத்தியை இலக்காகக் கொண்டு அமைச்சுக்கான விடயங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இதில் விசேடம் என்னவென்றால் அமைச்சர்களின் எண்ணிக்கையைக் குறைத்து இப்பணிகளை புரிவது குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

***கேள்வி: அரசாங்கம் வேலையற்ற பட்டதாரிகள் ஒரு இலட்சம் பேருக்கு பதவிகளை வழங்குவது தேர்தல் வெற்றிக்கு நன்றி செலுத்துவதற்காகவா?***

**பதில்:** ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் முயற்சியை யாராவது அரசியல் கண்கொண்டு நோக்கினால், அதனை விமர்சனம் செய்தால் அவர்கள் வெட்கப்பட வேண்டும். ஏனென்றால் வேலையற்ற பட்டதாரிகள் பாதையில் இறங்கி போராட்டங்களை நடத்தும் போது அன்றும் அவர்களுக்கு மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் வேலைவாய்ப்புகளை வழங்கியது. இன்று இந்த அரசாங்கமும் அதனையே செய்கின்றது. வேலைவாய்ப்பற்ற குடும்பங்களை தெரிவு செய்து அவர்களுக்கு வேலை வழங்குவது தவறாகுமா?

***கேள்வி: வேலை வழங்குவதில் பாரபட்சம் காட்டப்படுவதாக குற்றச்சாட்டு உண்டல்லவா?***

**பதில்:** இத்திட்டத்தின் மூலம் யாருக்காவது அநியாயம் நிகழ்ந்திருந்தால் தாம் வசிக்கும் மாவட்ட செயலாளர் ஊடாக ஜனாதிபதிக்கு அதுபற்றி அறியத் தரலாம். குற்றச்சாட்டுகளை ஆராய்ந்து அதற்கான தீர்வினை வழங்க ஜனாதிபதி செயலாளர் காரியாலயம் நடவடிக்கை எடுக்கும்.

**ஜயசூரிய உடுகும்புற...**
**தமிழில்: வீ.ஆர்.வயலட்**

---

## அலம்பல் – சிலம்பல்

# நமது தொலைக்காட்சிகளில்...

## பொதுவான பொருள்கள் பற்றிய முதிய அவதானியொருவரின் குறிப்புகள்

**'தட்டிக் கேட்க ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டம்' என்றொரு பிரயோகம் தமிழில் உண்டல்லவா?**

நமது தொலைக்காட்சி நிலையங்களில் பயனுள்ள நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுகின்றன என்பது உண்மைதானாயினு ம், இளைய வயதினர் கலந்து கொள்ளும் நிகழ்ச்சிகள் சில, பல தவறுகளுடன் ஒளிபரப்பப்படுகின்றன. இது விசனிக்கத்தக்கது. எனவே, இவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, ஒலி/ஒளி பரப்புகளில் நெடுங்காலம் அனுபவப்பட்டது காரணமாக சில விதப்புரைகளைச் செய்ய விரும்புகிறேன்.

மின்னியக்க ஊடகங்களில் முக்கியமானதொரு நிகழ்ச்சி 'செய்திகள்' பற்றியதாகும்.பத்திரிகைச் செய்திகளை, நேயர்கள் நலன் கருதி சில நிலையங்கள் ஒளிபரப்பி வருகின்றன. செய்திகளை கூறும் வேகமான வாசிப்பு பயனற்றது.

பலதரப்பட்ட கேட்கும் வலிமை கொண்ட தொலைக்காட்சி நேயர்கள் இருக்கிறார்கள். புத்திக் கூர்மையுடைய நேயர்கள் இந்த வேகமான வாசிப்பை செய்திகளை கிரகித்துக் கொள்ளக் கூடும். ஆனால் சாதாரணமாக சராசரி நேயர்கள் இவர்கள் என்ன கூறுகிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளக் கஷ்டப்படுகிறார்கள்.

விரைவாக வாசித்து விட்டுப் போய் விடுவோம் என்று அவர்கள் நினைக்கின்றனரோ தெரியவில்லை.


இவர்களுடைய பெயர்கள் என்னவென்று நேயர்கள் அறிய மாட்டார்கள். அவற்றை வாசிப்போர் தமிழ் மொழியின் மகத்துவமான சொற்பிரயோகங்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பில்லை போலும். சொல் வறுமை காணப்படுகின்றது.

இவர்கள் எல்லா நேரங்களிலும் எல்லா பத்திரிகைகளையும் வாசிப்பதாய் இல்லை. சில வேளைகளில் குறிப்பிட்ட பத்திரிகைகள்தான் அவர்கள் கண்களுக்குப் புலப்படுகின்றன.

எனவே தயவு செய்து, ஆறுதலாக, தெளிவாக, நிதானமாக, எல்லா நேயர்களும் பயன் பெறும் விதத்தில் பத்திரிகைச் செய்திகளை எடுத்துக் கூறும்படி வேண்டுகிறோம்.

நேயர்கள் பயன் பெறும் விதத்தில் சிலர் வாசிப்பதனால் நேயர்கள் பயனடைகிறார்கள். சில தொலைக்காட்சி அலைவரிசைகளில் செய்தி வாசிப்பவர்கள் தங்கள் பெயர்களைக் குறிப்பிடுவார்கள், ஆனால் சரியாக அவற்றை உச்சரிக்க மாட்டார்கள்.

ஒரு சிலரே செய்தியை உள்வாங்கி, உச்சாடனம் செய்கிறார்கள்.



**கே.எஸ். சிவகுமாரன்...**

---

# கசிப்புக்கு எதிராக களமிறங்கியுள்ள வட்டக்கச்சி கிராம இளைஞர்கள்

**சட்டவிரோத கசிப்பு உற்பத்திக்கு எதிராக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள வட்டக்கச்சி கிராமத்து இளைஞர்கள் களத்தில் குதித்துள்ளனர். 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் இப்பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் கசிப்பு உற்பத்தி மற்றும் விற்பனையைக் கட்டுப்படுத்துவதற்காகவும், எதிர்கால சமுதாயத்தை வளமாக்கும் நோக்குடனும் போதைப்பொருளற்ற பிரதேசமாக இப்பகுதியை அடையாளப்படுத்தும் தூரநோக்கு சிந்தனையுடனும் களமிறங்கினர்.**

சில தினங்களுக்கு முன்னர் காலை வேளையில் கிளிநொச்சி வட்டக்கச்சி 10 வீட்டுத் திட்டம் பகுதியில் மேற்படி இளைஞர்களால் பெருமளவு கசிப்பு அழித்தொழிக்கப்பட்டது. இந்த இளைஞர்களின் செயற்பாட்டை அப்பிரதேச மக்கள் பாராட்டி வருகின்றனர்.

அண்மைய நாட்களாக வட்டக்கச்சி பிரதேசத்தைச் சேர்ந்த 100க்கு மேற்பட்ட இளைஞர்கள் இவ்வாறு போதைப்பொருள் தடுப்பு நடவடிக்கையில் சுயமாக களமிறங்கியுள்ளனர். பொலிசார், இராணுவ புலனாய்வுப் பிரிவினர், விமானப் படையினரின் ஆதரவுடன் 'போதைப்பொருளற்ற வட்டக்கச்சி' எனும் தொனிப்பொருளில் மேற்படி சமூகநல வேலைத் திட்டத்தில் இவர்கள் களமிறங்கியுள்ளனர்.

இளைஞர்களின் இந்தப் பணி இப்பிரதேசத்தில் வரவேற்பைப் பெற்றுள்ளது. இந்த வேலைத் திட்டத்தின் கீழ் சட்டவிரோத மதுபானம் உற்பத்தி செய்யப்படும் பகுதிகளை முற்றுகையிட்டு பொலிசாரிடம் குற்றவாளிகளைப் பாரமளித்தல், விற்பனை செய்யப்படும் பகுதிகளுக்கு கசிப்பு வரும் மக்களைத் தடுத்தல் உள்ளிட்ட பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறுகிய கால வேலைத் திட்டத்தில் கணிசமான அளவு சட்டவிரோத கசிப்பு விற்பனை தடுக்கப்பட்டுள்ளதாக சமூக பணியில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த வேலைத் திட்டத்தில் ஒன்றான கசிப்பு உற்பத்தியினை தடுக்கும் வகையில் இளைஞர்கள் சுற்றிவளைப்பொன்றை அண்மையில் மேற்கொண்டு 420 லீட்டர் கோடா மற்றும் 10 லீட்டர் கசிப்பு ஆகியனவற்றை மீட்டு பொலிசாரிடம் கையளித்தனர்.

மேற்படி இளைஞர்களின் செயற்பாட்டில் தொடர்ந்தும் மேலும் பல இளைஞர்கள் இணைந்து வருவதாகவும், குறிப்பாக குடும்பப் பெண்கள் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகவும் சமூக வேலைத் திட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்கள் தெரிவிக்கின்றனர்.

போதைப்பொருளற்ற வட்டக்கச்சி மண்ணை உருவாக்கும் செயற்திட்டத்தில் ஈடுபட்டு வரும் இளைஞர்களுக்கு பிரதேசத்தில் அமோக வரவேற்பளிக்கப்பட்டுள்ளது. இதேவேளை தம்மைப் போன்று ஏனைய பிரதேசங்களில் உள்ள இளைஞர்கள் குறைந்தது 10 பேராவது களத்தில் இறங்கினால் போதைப்பொருளற்ற மாவட்டமாக கிளிநொச்சி மாவட்டத்தை உருவாக்க முடியும் என அந்த இளைஞர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.





## சமூக சீர்திருத்தப் பணிக்கு பொலிசார், படையினர் முழுமையான ஒத்துழைப்பு

இதேவேளை தமது செயற்பாட்டிற்கு தொடர்ந்தும் பொலிசாரும், முப்படையினரும், அரச அதிகாரிகளும், பொதுமக்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்ற கோரிக்கையினையும் அவர்கள் முன்வைக்கின்றனர்.

**பரந்தன் குறூப் நிருபர்...**

## ஆரோக்கியமான வாழ்வுக்கு...

பீடத்தின் மூன்றாம் ஆண்டு மாணவர்கள் சிலர் கண்டு பிடித்துள்ளனர். பலாக்காய் பிஞ்சு (பொலஸ்) மற்றும் காளான் சேர்த்து விஷமற்ற பர்கர் உணவை அவர்கள் தயாரித்துள்ளனர். பர்க்கருக்கான பனிஸ் குரக்கன் மாவில் தயாரிக்கப்பட்டிருப்பது விசேட அம்சமாகும். உடனடி உணவு வகைகளை விரும்பும் நபர்களின் உடலுக்கு எந்த தீங்கும் விளைவிக்காத இந்த புதிய பர்கர் உணவை கேட்கும் அளவுக்கு தயாரித்து வழங்க முடியுமென மாணவர்கள் கூறியுள்ளனர்.

## மின் விநியோகத் தடை...

பகல் 12.30 மணி தொடக்கம் சுமார் இரவு 10 மணிவரை மின் விநியோகத்தடை ஏற்பட்டது.

அதனைத் தொடர்ந்து மின்விநியோகத்தடை தொடர்பில் ஆராய்வதற்காக மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெருமவின் பணிப்புரைக்கமைய அமைச்சின் செயலாளரால் 09 பேரடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டது.

குழு நியமிக்கப்பட்டு ஒரு வாரத்தின் பின்னர் கடந்த திங்கட்கிழமை மாலை அதன் அறிக்கை அமைச்சரிடம் கையளிக்கப்பட்டது.

பேராசிரியர் ராகுல அத்தலகே தலைமையில் மின்சக்தி அமைச்சினால் இந்த குழு நியமிக்கப்பட்டிருந்தாலும் இதில் இருவரை தவிர ஏனைய 07 உறுப்பினர்களும் துறையில் நிபுணத்துவம் பெற்ற வெளியாட்களாவர் என்றும் மின்சக்தி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## இனவாதத்தை மூலதனமாக்கும்...

தலைவருமான காதர் மஸ்தான் குறிப்பிட்டார். ஊடகவியலாளர்கள் கேட்ட கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டதாவது..

இனவாதத்தை அடிப்படையாக வைத்து வங்குறோத்து அரசியலை செய்பவர்கள் அதைக் கைவிட்டுவிட்டு மக்களுக்குத் தேவையான காத்திரமான அரசியலை செய்ய முன்வர வேண்டும். யுத்தத்தால் படுமோசமாக பாதிக்கப்பட்ட வன்னி மக்களின் வாழ்வை உயர்த்துவதற்கு நான் அர்ப்பண சிந்தையுடன் செயற்பட்டு வருகிறேன் என்பதற்கு எனக்கு வாக்களித்த மூவின மக்களும் சாட்சியாக இருக்கின்றனர்.அந்த மூவினமும் சரிநிகர் சமானமாக அபிவிருத்திகளை பெற வேண்டும் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

இனமத பிரதேச அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் நின்று மனித நேயமிக்க சேவைகளை நாம் ஆற்றுகின்ற பொழுது எம் மீது சில வங்குறோத்து அரசியல்வாதிகள் காழ்ப்புணர்ச்சி கொண்டு கருத்துக்களை உமிழ்ந்து வருவதை எமது மக்கள் தெளிவாக உணர்ந்து வைத்துள்ளனர்.

தேர்தலில் வெற்றி பெற்ற மறுதினமே மக்களிடமிருந்து வெருண்டோடும் இவர்கள் ஐந்து வருடங்களுக்கு பின் மனச்சாட்சியற்று அந்த மக்களிடமே மீண்டும் வந்து இனவாத போக்குடன் வந்து வாக்குகளை கொள்ளையடித்து திரும்பவும் தமது உல்லாச வாழ்வுக்கு மீண்டுவிடுகின்ற அவலநிலையை நாங்கள் காண்கிறோம்.

இவர்கள் பாராளுமன்றத்தில் அங்கம் வகித்த நீண்ட நெடிய காலத்தில் வன்னி மாவட்டத்தை எவ்வளவோ அபிவிருத்தி செய்திருக்க முடியும்.

அதனைச் செய்யாமல் தமக்கு வாக்களித்த மக்களின் வாழ்வாதாரம் உயர உழைக்காமல் இனவாதம் மூலம் வாக்குகளை பெற எத்தனிக்கின்றனர்.

இந்த நிலை மாற வேண்டும், எமக்கு வாக்களித்த மக்களின் தேவைகளை நிறைவேற்ற வாக்குகளை பெற்று பாராளுமன்ற உறுப்பினர் பதவிகளை பெற்றவர்கள் முன்வர வேண்டும். எமது நடவடிக்கைகள் செயற்பாடுகள் நியாயமாக இருக்கும் பட்சத்தில் மக்களுடைய ஆதரவு எம் பக்கமே இருக்கும் என்பது எமது பலமான நம்பிக்கையாகுமெனவும் குறிப்பிட்டார்

## ரஞ்சனுக்கு எதிரான...

(25) நிறைவுக்கு வந்துள்ளதாக உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

எனினும் இந்த வழக்கு தொடர்பான தீர்ப்புக்கு முன்பாக மேலதிக கருத்துக்களை ஒக்டோபர் மாதம் 21ஆம் திகதி தெரிவிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற கலைப்பு தொடர்பாக உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில், நீதிபதிகள் குழுவின் அமர்வு தொடர்பாக, சர்ச்சைக்குரிய கருத்தை வெளியிட்டதாக தெரிவித்து பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பலமான பொருளாதாரத்தை...

03ஆம் பக்கத் தொடர்

இதனைத் தெரிவித்தார். நாட்டின் வருடாந்த உருளைக்கிழங்கு அறுவடை 80,000 மெற்றிக் தொன்களாக இருக்கும் நிலையில் நுகர்வோரின் தேவை 2,50,000 மெற்றிக் தொன்களாக உள்ளது. உருளைக்கிழங்கை இறக்குமதி செய்யாது உள்நாட்டிலேயே தேவையை நிறைவேற்றிக்கொள்வதற்கு விவசாயிகளை வலுவூட்ட வேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

உயர் தொழிநுட்பத்தின் கீழ் விதைகள் மற்றும் கன்றுகளை விவசாயிகளுக்கு வழங்கி இலக்குகளை வெற்றிகொள்வதற்கு மற்றும் ஏனைய கிழங்கு வகைகளை நுகர்வதற்கு வலுவூட்டுவதன் மூலம் உருளைக்கிழங்கு இறக்குமதியை மட்டுப்படுத்த முடியுமென்றும் பொருளாதார புத்தெழுச்சி தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் பசில் ராஜபக்ஷ சுட்டிக்காட்டினார். அடுத்த ஆண்டு சோள உற்பத்தியில் தன்னிறைவை பெற்றுக்கொள்வதற்கு வாய்ப்புள்ளதாகவும் பசில் ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

விதைகள் மற்றும் கன்றுகள் உற்பத்திக்கு நவீன தொழிநுட்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பதுடன், அதற்கு தேவையான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

களஞ்சியப்படுத்தல் மற்றும் போக்குவரத்தின்போது ஏற்படும் சேதங்களை குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் விரிவாக கலந்துரையாடப்பட்டது.

எட்டு வருடங்களாக விவசாய திணைக்களத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படவில்லை. வெற்றிடங்களை விரைவாக நிரப்பி இத்துறையின் முன்னேற்றத்திற்கு முறையான நிகழ்ச்சித்திட்டமொன்றை தயாரிக்குமாறு ஜனாதிபதி அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்தார்.

உயர்தரம் வாய்ந்த பசளைகளை உரிய முறையில் பயன்படுத்துவதற்கும் சுகாதாரமான வினைத்திறன் வாய்ந்த தலைமுறை ஒன்றை உருவாக்குவதற்கும் சேதனப் பசளை பயன்பாட்டிற்கு மாறுவது குறித்தும் கொள்கை சார்ந்த தீர்மானம் ஒன்றை மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். விவசாயத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அழுத்கமகே, இராஜாங்க அமைச்சர் சஷிந்திர ராஜபக்ஷ, ஜனாதிபதியின் செயலாளர் பி.பீ. ஜயசுந்தர ஆகியோரும் அமைச்சு மற்றும் இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள அதிகாரிகள் மற்றும் விவசாய சங்கங்கள் மற்றும் விவசாய வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இச் சந்திப்பில் பங்குபற்றினர்.

## ஹக்கீம் தலைமையில்...

03ஆம் பக்கத் தொடர்

எதிர்பார்க்கப்படுவதாகவும் உயர்ஸ்தானிகரிடம் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடன் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எஸ்.தௌபீக், ஹாபிஸ் நஸீர் அஹமத், பைசல் காசிம் ஆகியோரும் இதில் பங்குபற்றினர். இந்திய பிரதி உயர்ஸ்தானிகர் வினோத் கே.ஜேகப் தூதரகத்தின் அரசியல் மற்றும் கொன்சியூலர் பிரிவிற்கு பொறுப்பான பானு பிரகாஷ் ஆகியோரும் உடனிருந்தனர்.

பரஸ்பரம் கருத்துக்களை பரிமாறிக் கொண்ட இந்தச் சந்திப்பு நம்பிக்கையூட்டுவதாக அமைந்திருந்ததாக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் கருத்து வெளியிட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஊடகப் பிரிவு தெரிவித்தது.

## பாராளுமன்ற தகவல்...

03ஆம் பக்கத் தொடர்

கையளித்தார். பாராளுமன்ற செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த செயலமர்வில் கலந்துகொண்ட புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் இந்த சஞ்சிகை வழங்கப்பட்டது. பாராளுமன்ற முறைமை மற்றும் சம்பிரதாயம், பிரதிநிதித்துவ ஜனநாயகம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களைத் தாங்கியதாக பாராளுமன்ற தகவல் திரட்டு சஞ்சிகை தயாரிக்கப்பட்டுள்ளது. புதிய பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலாதாரமாகப் பயன்படுத்தும் நோக்கில் இந்த சஞ்சிகை தயாரிக்கப்பட்டுள்ளது.

## குடு ரொஷானின்...

03ஆம் பக்கத் தொடர்

ஒருவர் ஹெரோயினுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விஷேட அதிரடிப்படையினரால் வெல்லம்பிட்டிய, வெலேவத்த பகுதியில் வைத்து இந் நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேகநபரிடமிருந்து 5 கிராம் 600 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக வெல்லம்பிட்டிய பொலிஸ் நிலையத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

## மக்கள் சேவையை பிரதானமாக...

இவை அனைத்தும் எமக்கான ஒரு பாடமாகத்தான் கருதுகிறோம்.

இலங்கையில் தற்போது காணப்படும் பல பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக்கொடுக்க வேண்டுமென்ற எதிர்ப்பார்ப்பில்தான் இந்தப் பாராமன்றம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. விசேடமாக புதிய அரசியலமைப்பொன்று இன்று நாட்டுக்கு தேவைப்பட்டுள்ளது. இதனை நிறைவேற்றும் வகையில் உறுப்பினர்கள் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

ஒரு நாட்டில் இதயமாகக் கருதப்படும் பாராளுமன்றத்தில், எதிர்காலத்தில் எந்தவொரு தவறும் இருந்துவிடக்கூடாது என்றுதான் நாம் இந்த செயலமர்வை ஏற்பாடு செய்துள்ளோம். மக்களுக்கு சேவையாற்றக்கூடிய மக்கள் பிரதிநிதியாக அனைவரும் திகழ வேண்டும்" என தெரிவித்தார்.

## கல்வி, தொழில்நுட்பத் துறைகளின்...

உயர்ஸ்தானிகர் கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸிடம் இதனைத் தெரிவித்துள்ளார்.

அமைச்சர் ஜீ. எல். பீரிஸ், இராஜாங்க அமைச்சர் சீதா அரம்பேபொல, கல்வி அமைச்சின் செயலாளர் கே. கே. சி.கே. பெரேரா உட்பட துறைசார்ந்த முக்கியஸ்தர்கள் பலரும் கலந்துகொண்ட இந்நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த இந்திய உயர் ஸ்தானிகர்,

இந்தியா தற்போது மகாத்மா காந்தி புலமைப்பரிசில் திட்டம் உட்பட கல்வித்துறை அபிவிருத்தி தொடர்பில் இலங்கைக்கு ஒத்துழைப்புகளை வழங்கி வருகிறது. நாட்டின் கல்வித்துறையின் முக்கியம் வாய்ந்த துறைகளை இனங்கண்டு முன்வைத்தால் எதிர்காலத்தில் அதன் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு இந்தியா ஒத்துழைப்பு வழங்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

இலங்கையின் தொழில் வாய்ப்பு சந்தை மற்றும் தொழிற் கல்வி ஆகியவற்றுக்கிடையில் பொருத்தமின்மை காணப்படுகின்றன. இந்த நிலையை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பது அவசியமாகும். தற்போது தொழிற் கல்வியை வழங்கும் பெரும்பாலான நிறுவனங்கள் சம்பிரதாய கல்வி முறையையே வழங்கி வருகின்றன. மாணவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் புதிய கற்றல் முறைகளை ஏற்படுத்த வேண்டியுள்ளமை முக்கிய விடயமாகும் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். அதேவேளை, தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம், விஞ்ஞானம் உள்ளிட்ட துறைகளிலும் நிபுணர்களை உருவாக்குவதற்கான பயிற்சிகளை முன்னெடுப்பது அவசியம். அதற்கென இரண்டு நாடுகளுக்கிடையிலான நட்புறவுகளை பயன்படுத்தி வேலைத் திட்டங்களை பலமானதாக முன்னெடுக்க முடியும். அதேவேளை தொழிற் கல்வி மற்றும் தொழில்நுட்ப துறைகளில் ஒன்லைன் பாடத்திட்டங்களையும் விரிவான வகையில் அறிமுகப்படுத்துவதற்கு இந்தியாவின் ஒத்துழைப்பை எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.(ஸ)

## கட்சி பேதங்களை கடந்து...

செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே பிரதமர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தைப் பொறுத்தவரை உறுப்பினர்கள் அனைவரும் சிறந்த மக்கள் பிரதிநிதியாக இருக்க வேண்டும். இதனைப் புறக்கணிப்பவர்களுக்கு அரசியல் எதிர்காலமொன்று கிடையாது என்றும் சுட்டிக்காட்டிய பிரதமர், எமக்கு அரசியல் பழிவாங்களில் ஈடுபட தற்போது நேரமில்லை. அதற்காக மக்கள் எமக்கு ஆணை வழங்கவுமில்லை என்றும் தெரிவித்தார்.

ஒன்பதாவது பாராளுமன்றத்திற்கு புதிதாக தெரிவு செய்யப்பட்ட எம்.பிக்களுக்கான செயலமர்வு பாராளுமன்ற கட்டிடத்தில் நேற்று நடைபெற்றதுடன் செயலமர்வில் உரைநிகழ்த்தியபோதே பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய பிரதமர்,

'மக்கள் நினைப்பது அமைச்சரொருவரை உருவாக்குவதற்கல்ல. தம்மை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர் ஒருவரை உருவாக்குவதே அவர்களின் நோக்கம். எத்தகைய அதிகாரம் கொண்ட அமைச்சுப் பதவி இருப்பினும் தமது பொறுப்பை முறையாக செயற்படுத்தாவிடின் மக்கள் அவர்களை வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். அதனால் பாராளுமன்றத்தில் சிறந்த உறுப்பினராகவும், மக்கள் பிரதிநிதியாகவும் செயற்படுவதே மிக அவசியமானது.

கடந்த தேர்தல் நாட்டின் அரசியல் வரலாற்றில் மறக்க முடியாத பொதுத் தேர்தல் என்பதை நாம் அனைவரும் அறிவோம். அது விகிதாசார தேர்தல் முறையின் கீழ் 2/3 பெரும்பான்மை கிடைத்ததால் மட்டுமல்ல. 1946 இல் ஆரம்பிக்கப்பட்ட மிகப் பழமையான அரசியல் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த தேர்தலில் ஒரு ஆசனத்தை கூட வெல்ல முடியாது போனதும் ஆச்சரியமூட்டும் விடயமாகும். அவை வரலாற்றில் சேர்க்கப்பட வேண்டிய விடயங்களாகும்.

இந்த தேர்தலின் மூலம் எதிர்காலத்திற்கான ஒரு நல்ல செய்தியை மக்கள் எங்களுக்கு வழங்கியுள்ளனர்.

இந்தத் தேர்தலில் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் பண பலத்தை கொண்டு பாரியளவிலான பிரசாரங்களை மேற்கொள்ள முடியவில்லை. போஸ்டர்கள் இல்லை. கட்அவுட்கள் இல்லை. நிகழ்வுகள் இல்லை. ஆர்ப்பாட்டங்கள் இல்லை. பஸ்களில் கூட்டங்களை அழைத்துவரும் செயற்பாடும் இடம்பெறவில்லை. அனைத்து பிரதேசங்களிலும் சுகாதார விதிமுறைகளுக்கு அமையவே செயற்பட்டோம். அதனால் 71 வீதமான மக்கள் வாக்களிப்பு நிலையங்களுக்கு வந்து வாக்களித்தனர். இது எதிர்காலத்திற்கான ஒரு முக்கிய செய்தியாகும். இது மக்களுக்கு நாட்டின் மீதுள்ள அன்பு போன்றே சரியான வேலைத் திட்டத்திற்கும் ஜனநாயகத்திற்கும் அவர்கள் வழங்கும் கௌரவத்தை எடுத்துக்காட்டுகிறது. இந்த முறை தேர்தலில் பிரதமரானாலும் அல்லது கட்சித் தலைவரானாலும் நாட்டிற்காக வேலை செய்யாவிடின் அவர்கள் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். சிறந்த அரசியல் தலைமுறையிலிருந்து வந்திருந்தாலும் கூட வேலை செய்ய முடியாவிட்டால் வீட்டிற்கு அனுப்பப்பட்டனர். மக்கள் தொடர்ந்தும் இவ்வாறே செயல்படுவார்கள் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

எனவே, இளமையாக இருப்பதனாலும் பதவியில் இருப்பதனாலும் ஒரு தலைமுறையிலிருந்து தோற்றம் பெற்றவர்களானாலும் அல்லது படித்தவர்களாக இருப்பதனாலும் பயனில்லை. மக்கள் எமக்கு வழங்கியுள்ள பணியை சரியாகச் செய்யாவிட்டால் அவர்கள் பெரியவர்களாக இருந்தாலும் சிறியவர்களாக இருந்தாலும் மக்கள் நிராகரித்து விடுவர்.

இளம் உறுப்பினர்கள் பாராளுமன்றத்திற்கு வந்தவுடன் அமைச்சர்களாகிவிட எதிர்பார்க்கின்றனர். சில பாராளுமன்ற உறுப்பினர்கள் என்னை பாராளுமன்றத்தில் சந்தித்து நாட்டிற்காக பணியாற்ற தங்களுக்கு ஒரு அமைச்சுப் பதவியை வழங்குமாறு கோருகின்றனர்.

அமைச்சுப் பதவியின்றி அரசாங்கத்தில் இருக்க முடியாதவர்களுக்கு ஒருபோதும் எதிர்க்கட்சியில் அரசியலில் ஈடுபட முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அமைச்சுப் பதவிக்காக அரசியலில் ஈடுபடுபவருக்கு உறுப்பினராக பொறுப்பை நிறைவேற்றவும் முடியாது. அவ்வாறு அமைச்சுப் பதவியில் தங்கியிருப்பவர்கள் தான் எதிர்க்கட்சிக்கு சென்றவுடன் கட்சி தாவுகின்றனர். அவ்வாறானவர்களுக்கு அரசியலில் சிறந்த எதிர்காலம் இல்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசியலமைப்பு மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கின்றார்கள். புதிய அரசியலமைப்பின் ஊடாக வரலாற்றில் இடம்பெற்ற தவறுகள் சரி செய்யப்படும் என்றும் மக்கள் நம்புகிறார்கள். நாம் அனைத்து தனிப்பட்ட நிகழ்ச்சி நிரல்களையும் ஒதுக்கி வைத்துவிட்டு, மக்களின் அபிலாஷைகளை முதலில் நிறைவேற்ற வேண்டும்.

1977 முதல் இப்போது வரை கிட்டத்தட்ட அரை நூற்றாண்டு காலமாக நாட்டை ஆட்சிசெய்த ஒரு அரசியலமைப்பு உள்ளது. அது அவ்வப்போது திருத்தப்பட வேண்டும்.

அரசியலமைப்பு என்பது ஒரு தரப்பிற்கு சொந்தமான உரிமை அல்ல. அது நம் அனைவரிலும் தாக்கம் செலுத்தும் அடிப்படை சட்டமாகும். அதில் உள்ள ஒவ்வொரு காற்புள்ளியும், முற்றுப்புள்ளியும் எமது வாழ்வில் தாக்கம் செலுத்துகின்றது. இதனால், மக்கள் கோருகின்ற அரசியலமைப்பை மாற்றும் பணியில் அரசியல், கட்சி பேதங்களை காட்ட வேண்டாம். இது எங்கள் பொறுப்பு. தற்போதுள்ள அரசியலமைப்பின் அனைத்து சாதகமான அம்சங்களையும் நாம் உள்வாங்க வேண்டும். என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## இரணைமடுவில்...

ஆரம்பிக்கப்பட்ட கவனயீர்ப்பு பேரணி கிளிநொச்சி மாவட்ட செயலகத்திற்கு அங்கு அரசாங்க அதிபருக்கு மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. இரணைமடு குளத்தின் கீழ் உள்ள கனகராயன் ஆற்றப்படுக்கையில் மிக மோசமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருவதாகவும் அதனை கட்டுப்படுத்துமாறு கோரியும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், செருக்கன் பகுதியில் அமைக்கப்படும் உப்பளத்தின் பணிகளை நிறுத்தி செய்கை நிலங்களை பாதுகாத்து தருமாறும் போராட்டத்தின்போது வலியுறுத்தப்பட்டுள்ளது.

போராட்டத்தில் இரணைமடு விவசாய சம்மேளனத்தின் கீழுள்ள கமக்கார அமைப்புக்களின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த இரணைமடு விவசாய சம்மேளனத்தின் செயலாளரும் கரைச்சி பிரதேச சபை உறுப்பினருமான எம்.சிவமோகன்,

இரணைமடு குளத்தின் கீழுள்ள கனகராயன் ஆற்றுப்படுக்கையில் மிக மோசமான முறையில் மணல் அகழ்வு இடம்பெற்று வருகின்றது. மணல் அகழ்வை தடுக்காதுவிடின் இரணைமடு குளத்திற்கு பாரிய ஆபத்து காணப்படுகின்றது. அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டுவரும் மணல் அகழ்வை தடுப்பதற்குரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றோமென தெரிவித்தார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் காலம் தொட்டே குறித்த பகுதியில் மணல் அகழ்வு ஆரம்பித்துவிட்டது. அக்காலப்பகுதியில் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் மாவட்ட அபிவிருத்தி குழு தலைவராகவும் இருந்தார். அப்போது கட்டுப்படுத்த முடியாது போன மணல் அகழ்வை இப்போதுள்ள அரசாங்கம் கட்டுப்படுத்தும் என நம்புகின்றீர்களா ? என ஊடகவியலாளர் ஒருவர் அவரிடம் வினவியபோது,

இக் காலப்பகுதியில் மணல் அகழ்வை கட்டுப்படுத்துவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆனாலும் பொலிசாரின் கவன குறைவும், அவர்களின் செயற்பாடுமே கட்டுப்படுத்த முடியாது போனமைக்கான காரணமாகும். தற்போதுள்ள அதிகாரிகள் மற்றும் அரச தலைவர்கள் இவ்விடயத்தில் அதிகம் அக்கறை செலுத்துவதால் இக்காலகட்டத்தில் இதனை கட்டுப்படுத்த முடியுமென நம்புகின்றோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## யாழ் – கொழும்பு ரயில்சேவை...

கொரோனா வைரஸ் தொற்று காலத்தின் பின்னர் தற்போதுள்ள ரயில்சேவை தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த மார்ச் மாதம் முதல் நாட்டில் ஏற்பட்ட கொரோனா வைரஸ் தொற்று அச்சம் காரணமாக யாழ். கொழும்பு ரயில் சேவைகள் தடைப்பட்டிருந்தன. கடந்த மாதம் மீண்டும் ரயில் சேவை ஆரம்பிக்கப்பட்டு, தற்போது வழமையான ரயில் சேவைகள் நடைபெற்று வருகின்றன. கடந்த நாட்களில் இடைநிறுத்தப்பட்டுள்ள நகர் சேர் கடுகதி ரயில்சேவை எதிர்வரும் 29 ,30 ,31 ,மற்றும் 01ஆம் திகதிகளில் பரீட்சார்த்தமான சேவையை ஆரம்பிப்பதற்கு ரயில்வே திணைக்களம் தீர்மானித்துள்ளது. கொரோணா காலத்தில் இடைநிறுத்தப்பட்டிருந்த இச் சேவை, எதிர்வரும் 29ஆம் திகதி முதல் பரீட்சார்த்தமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. எனவே பயணிகள் தங்களுக்குரிய முன் ஆசன பதிவுகளை யாழ். ரயில் நிலையத்தில் மேற்கொள்ள முடியுமென யாழ். பிரதான ரயில் நிலைய அதிபர் மேலும் தெரிவித்தார்.

## அரசியலமைப்புக்கு ஆதரவு;...

இது தொடர்பில் கருத்து வெளியிட்ட அவ்வமைப்பின் தலைவர் கலாநிதி குணதாச அமரசேகர,

" அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் மாகாண சபைகளுக்கு அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ளன. அவற்றிலுள்ள சில அதிகாரங்கள் அச்சுறுத்தலானவை. தற்போது அவை நடைமுறைப்படுத்தப்படவில்லையென்றபோதிலும் சட்டத்தில் உள்ளன.

எனவே, அவற்றில் திருத்தம் மேற்கொள்ளாது மாகாணசபைத் தேர்தலை நடத்துவதற்கு நாம் கடும் எதிர்ப்பை வெளியிடுகின்றோம். மாகாண சபைகளுக்கான அதிகாரங்கள் மட்டுப்படுத்தல் உட்பட நாட்டுக்கு தேவையான அரசியலமைப்பொன்றை உருவாக்கிய பின்னரே தேர்தல் நடத்தப்படவேண்டும்.

நாட்டில் இரண்டாண்டுகளாக மாகாணசபைகள் இயங்கவில்லை. இதனால் யாருக்கும் எந்தவித இழப்புகளும் இல்லை. எனவே, புதிய அரசியலமைப்பு இயற்றப்படும்வரை தேர்தலை நடத்தாமல் இருப்பதே சிறப்பு." – என்றார்.

## சர்ச்சைக்குள்ளான விக்கியின்...

சி.வி.விக்னேஸ்வரன் கடந்த 20ஆம் திகதி உரையாற்றினார். இதனையடுத்து சி.வி.விக்கினேஸ்வரனின் உரையை ஹன்சார்ட்டில் இருந்து நீக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மனுஷ நாணயக்கார கோரிக்கை விடுத்திருந்தார்.

இது குறித்து ஆராய்வதாக அன்றையதினமே சபாநாயகர் மஹிந்த யப்பா அபேவர்தன தெரிவித்திருந்தபோதும் விக்கினேஸ்வரனின் உரையின் விவரிக்கப்படாத பதிப்பு பாராளுமன்றத்தின் ஹன்சார்ட்டில் சேர்க்கப்பட்டுள்ளது.

## வெளிநாட்டு பட்டதாரிகளின்...

மேற்கொள்ளப்பட்ட பட்டதாரிகள் நியமனத்தின் போது வட மாகாணத்தில் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்ட பட்டதாரிகளில் ஒரு பகுதியினர் வவுனியா றோயல் விடுதி மண்டபத்தில் நேற்று (25) கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இதனை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

ஏற்கனவே, கடந்த அமைச்சரவை கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் வெளிநாட்டு பல்கலைக் கழகங்களின் பட்டதாரிகளும் மேன்முறையீட்டை மேற்கொள்ளமுடியுமென்றுஅமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், பிரதேச செயலகங்களினால் விநியோகிக்கப்படும் மேன்முறையீட்டு படிவங்களில் வெளிநாட்டு பட்டதாரிகள் தொடர்பி'ல் குறிப்பிடப்படாத நிலையில், சேமலாப நிதி கணக்கை கொண்டிருப்பவர்கள் என்ற அடிப்படையில் நிராகரிக்கப்பட்டவர்கள் மாத்திரமே மேன்முறையீடு மேற்கொள்ள முடியுமென்று பிரதேச செயலக அதிகாரிகளினால் தெரிவிக்கப்படுவதாக அமைச்சரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தது. இந்நிலையில் சம்மந்தப்பட்ட தரப்புக்களுடன் தொடர்பு கொண்ட அமைச்சர், கடந்த வாரம் அமைச்சரவையில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தை உறுதிப்படுத்தியதுடன், வெளிநாட்டு பட்டதாரிகளின் மேன்முறையீடுகளையும் ஏற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலாளர்களுக்கு சம்மந்தப்பட்ட அதிகாரிகளூடாக அறிவுறுத்துவதற்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கொரோனா வைரஸ்...

சமூகத்தில் கொரோனா வைரஸ் பரவவில்லையென்ற போதிலும் அது இடம்பெறும் ஆபத்தை நிராகரிக்க முடியாதென அவர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட கொரோனா வைரஸ் நோயாளிகள் அனைவரும் வெளிநாடுகளிலிருந்து வந்தவர்களென அவர் தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டிலிருந்து அழைத்து வரப்படுபவர்களில் சிலர் கொரோனா வைரசினால் பாதிக்கப்படும் நிலை காணப்படுகின்ற போதிலும் வெளிநாட்டிலுள்ள இலங்கையர்களை அழைத்து வருவதை தொடர்வதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதென அவர் தெரிவித்துள்ளார்.

பொதுமக்கள் எச்சரிக்கையுடன் இருக்கவேண்டும். ஆபத்து நீங்கிவிட்டதென கருதக்கூடாதென்றும் இராணுவத் தளபதி தெரிவித்துள்ளார்.

## ரவி கருணாநாயக்கவிடம்...

இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவிற்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அதன்படி, அவர் (25) நேற்றுக் காலை 9.00 மணியளவில் இலஞ்ச மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் ஆஜரானார். அவரிடம் சுமார் 04 மணி நேரம் வாக்குமூலம் பெறப்பட்டு பிற்பகல் 1.30 மணியளவில் அவர் அங்கிருந்த சென்றுள்ளார்.

## கரு தலைவரானால்...

வுக்கு அழைப்பை ஏற்படுத்திய ரணில் விக்கிரமசிங்க, அவரை உடனடியாக கொழும்புக்கு அழைத்து, கட்சி மறுசீரமைப்பு பற்றி கலந்துரையாடியுள்ளார்.

# போதை ஒழிப்பு தொடர்பில் பாடசாலை மட்டத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்

## சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி எம். ஏ. எம். நாசீர்

போதைப் பொருள் பாவனையில் இருந்து எமது பிள்ளைகளைப் பாது காக்க வேண்டும். போதைப் பொருள் கள் பல்வேறு வகையில் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படு கிறது. போதை ஒழிப்பு தொடர்பில் பாடசாலை மட்டத்தில் ஊர் மட்டத் தில் காத்திரமான பணியை நாங்கள் முன்னெடுக்க வேண்டும். இதற்குத் தேவையான ஒத்துழைப்பை நாங்கள் வழங்கத் தயாராக இருக்கின்றோம் என்று சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரி எம். ஏ. எம். நாசீர் தெரிவித்தார்.




உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசா லையின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் மாத்தளை பிரதேச வாலி பர்களின் வளமான எதிர்காலத்தினைக் கருத்தில் கொண்டு, தொழில் வழிகாட் டல் பயற்சி செயலமர்வு உக்குவளை அஜ்மீர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் இடம்பெற்றது.

பாடசாலை அதிபர் ஏ. எம். எம். சரூக் மற்றும் உக்குவளை அஜ்மீர் கல் லூரியின் பழைய மாணர்வ சங்கத் தலைவரும் சமூகச் செயற்பாட்டாள ருமான சீ. எம். அபூதாலிப் தலைமை யில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே மேற் கண்டவாறு தெரிவித்தார்.

நாசீர் மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது,...

புத்தக அறிவு மட்டும் ஒரு மாணவனை மேலெழ செல்வதற்கான போதிய தகைமையாக இருக்காது. அதனோடு சேர்ந்து மனித ஆளுமை விருத்தி இருத்தல் வேண்டும். அப்படி இருக்கும் பட்சத்தில் தான் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ள லாம். மொழி அறிவு சிறுபான்மை சமூ கத்தின் மத்தியிலேயே அதிகம் இருக் கிறது.

நாங்கள் கல்வி பெறுவதன் மூலம் எமது சமூகத்திற்கு ஏதாவது செய்ய வேண்டும். நமது நாட்டுக்கும் அது பயன் தர வேண்டும். நாம் மரணிக் கும் போது ஒரு கடன் இல்லாத சமூ கமாக மரணிக்க வேண்டும்.

எனவே இன்று எம்முடைய முன் னேற்றத்திற்கு தடையாக இருப்பது கையடக்கத் தொலைபேசியாகும்.

புரட்சிகரமான தொழில்நுட்ப மாற்றம் தான் எமது சந்ததியினரின் வளர்ச்சிகளுக்கு தடையாக இருக்கி றது. இது தொடர்பில் பெற்றோர்கள் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

எமது நாட்டிலுள்ள முன்னணி தொழில் வழிகாட்டல் நிறுவனங் களான இன்சைட்,கொழும்பு டெக்னிகல் கொலேஜ்,நோலேஜ் பொக்ஸ், நேஸ்ட் ஆகிய நிறுவனங் களிலிருந்து வளவாளர்கள் இந்நிகழ் வில் கலந்து கொண்டு உரை நிகழ்த் தினர்.

இந்நிகழ்வில் விசேடமாக பாடசாலை அதிபர், ஓய்வு பெற்ற அதிபர்கள், ஓய்வு பெற்ற ஆசிரி யர்கள், பழைய மாணவ மாணவி சங்கத்தினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

சிரேஷ்ட ஊடகவி யலாளர் சரத் லால் குமார எழுதியுள்ள 'கொரோனா காலம்' (சிங்கள மொழி) என்ற நூல் சுற்றா டல் அமைச்சின் செயலாளரும் முன்னாள் சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகமுமான டொக்டர் அனில் ஜாசிங்கவிடம் கைய ளித்து வெளியிட்டு வைக்கப்பட்ட போது பிடிக்கப்பட்ட படம்.



# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சின் கீழான சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் உணவகத்தை நடாத்திச் செல்லல் – வருடம் 2021

சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலை பெறுகைக்குழுத் தலைவரினால் வருடம் 2021 தொடர்பாக, சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையில் உணவகத்தை நடாத்திச் செல்வதற்காக அதில் அனுபவத்தைக் கொண்டுள்ளவர்களிடமிருந்து விலைமனுக்கோரப்படுகின்றது.

01. விலைமனு விண்ணப்பங்களை, கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறாக, விலைமனு ஆவணக் கட்டணமாக மீளளிக்கப்படாத தொகையொன்றை, சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் கணக்காளர்/சிறாப்பரிற்கு செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து, 2020.08.27ஆம் திகதி தொடக்கம் 2020.09.15ஆம் திகதி வரை மு.ப.10.00 முதல் பி.ப.2.00 வரை, கணக்குப் பிரிவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

| | விலைமனு ஆவணக் கட்டணம் |
|---|---|
| வைத்தியசாலை உணவகம் தொடர்பாக | 2,500.00 |
| மருத்துவர்களின் உணவகம் தொடர்பாக | 1,000.00 |

02. விலைமனு விண்ணப்பங்கள், மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியாகத் தயாரிக்கப்பட்டு, இரண்டு தபாலுறைகளில் சேர்க்கப்பட்டு, அவ்விரண்டு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் சேர்க்கப்பட்டு, முத்திரை பொறிக்கப்பட்டு, அதன் இடதுபக்க மேல் மூலையில் "வருடம் 2021 தொடர்பாக உணவகச் சேவை, மருத்துவர்களின் உணவக சேவையை வழங்கல் - மாவட்ட பொது வைத்தியசாலை - சிலாபம்" எனக் குறிப்பிட்டு, 2020.09.16 அன்று மு.ப.10.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, தலைவர், பெறுகைக்குழு, மாவட்டப் பொது வைத்தியசாலை, சிலாபம் என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் அல்லது கணக்காளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டிக்கு சேர்க்கப்படல் வேண்டும்.

03. விலைமனுக்கள் பொறுப்பேற்பது முடிவடைந்தவுடன் உடனடியாக, அந்த இடத்திலேயே விலைமனு விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் விலைமனுதாரர்க்கு அல்லது அவரின் அதிகாரமுள்ள பிரதிநிதியொருவருக்கு அச்சந்தர்ப்பத்தில் கலந்துகொள்வதற்கு அனுமதி வழங்கப்படும்.

04. அரசாங்க ஒப்பந்த விதிமுறைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்பட்டுள்ள நபர்களுக்கு விலைமனு கையளிக்கப்படமாட்டாது

05. மேலதிக விபரங்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள தொலைபேசி இலக்கங்களுடன் தயவுசெய்து தொடர்பு கொள்ளுங்கள்

(தொலைபேசி இலக்கம் : 032-2222261/032-2222721/032-2223261)

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**சிலாபம்.**

# பொருட் கொள்வனவு அறிவித்தல்

## அரசாங்க அச்சுத் திணைக்களம்

N-57

அரசாங்க அச்சுத் திணைக்களத்தின் பொருட்கொள்வனவுத் தலைவர் பின்வரும் பண்டங்கள் தொடர்பில் உற்பத்தியாளர்கள், அவர்களின் பிரதிநிதிகள் அல்லது அவர்களது அங்கீகாரம் பெற்ற உள்ளூர் முகவர்களிடமிருந்து விலைமனுக்களைக் கோருகின்றார்.

Item

01. CTP Violet KORD Plate (550mmx650mm-0.25mm-0.30mm)- 1000 Nos
02. CTP Violet SORD Plate (715mmx915mm-0.24mm-0.30mm)- 4000 Nos
03. Devoloper - 200 Ltr
04. Replenisher - 200 Ltr

**விலைமனு ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் :** 2020.09.09ஆந் திகதி பி.ப.2.00 மணி வரையாகும்

**விலைமனு குறிப்பு இல.:** SCP02/NCB10/CTP/S/K/2020-8

மேற்குறிப்பிட்ட விலைமனு தொடர்பில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1,500/- கொண்டதும் அத்துடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி தினத்துக்கு முந்திய தினம் 2.00 மணிக்கு முன்னதாக கிடைக்கப்பெறும் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரில் அரசாங்க அச்சுத் திணைக்கள, வழங்கல் பிரிவில் கடமை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைமனு தொடர்பான ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம். மேலதிக விபரங்கள் கடமை நாட்களில் மு.ப.8.30 மணி முதல் பி.ப.4.15 மணி வரை எமது அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

**கங்கானி லியனகே**
பொருட்கொள்வனவுத் தலைவர்.

**அரசாங்க அச்சுத் திணைக்களம்,**
**இல. 118, டாக்டர் டனிஸ்டர் டி சில்வா மாவத்தை,**
**கொழும்பு - 08.**
**2020.08.26**
**தொலைபேசி : 011-2694898**
**இணையத்தளம் : www.documents.gov.lk**





24.08.2020 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 756,137
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை 33,837,610.00
ரூ. 2,000,000.00 பரிசுகள் 02 ரூ. 1,000,000.00 பரிசுகள் 03 ரூ. 100,000.00 பரிசுகள் 31
NLB
www.nlb.lk












# வடக்கில் ஆளுநராக நியமிக்கப்பட்ட மேஜர் சந்திரசிறியே ஒழுங்காக வேலைகளை செய்தார்

## அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

ப.சதீஸ்



வடமாகாண முன்னாள் ஆளுநர் மேஜர் ஜெனரல் சந்திரசிறிக்கு பின்னர் வடக்கில் நியமிக்கபட்ட எந்த சிவில் அதிகாரிகளும் தமது ஆளுநர் வேலையை ஒழுங்காக செய்யவில்லை என கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த அவர், அரச நியமனங்கள் நிராகரிக்கப் பட்ட பட்டதாரிகளை சந்தித்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

அரச நியமனங்களில் பலரது விண்ணப்பங்கள் பல்வேறு காரணங்களிற்காக நிராகரிக்கப்பட்டுள்ளதாக அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது. பல்கலைகழக மானியங்கள் ஆணைக் குழுவால் அவர்களது சான்றிதழ்கள் அங்கீகரிக்கப்பட்டிருப்பின் அவர்கள் பட்டதாரிகளாக உள்வாங்கப்பட வேண்டும் என்பது தான் அரசாங்கத்தினுடைய இறுதி நிலைப்பாடாக இருந்தது.

அந்த வகையில் மேலதிகமாக 10 ஆயிரம் பேருக்கு அரச நியமனத்தை வழங்குவதற்கு ஜனாதிபதி இணங்கியிருக்கின்றார். அந்தவகையில் ஈ.பி.எப், மற்றும் மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்பட்டிருந்தவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தால் நீங்கள் மேல்முறையீட்டிற்காக விண்ணப்பிக்க முடியும்.

அத்துடன் ஒரு இலட்சம் வேலை வாய்ப்புத்திட்டம் வடக்கிலும், கிழக்கிலும் செயற்படுத்தப்படும். இந்தவிடயம் தொடர்பாக இன்று அமைச்சரவையில் கலந்துரையாடவுள்ளேன்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை தென்னிலங்கை தலைவர்கள் மாத்திரம் எதிர்க்கவில்லை. தமிழ் தலைவர்களும் அதனை எதிர்த்துள்ளனர். 13ஆவது திருத்தச்சட்டததை விடுத்து வேறு ஒரு தீர்வு வேண்டும் என்று புலித் தலைமை மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பும் அன்று இதனை எதிர்த்தார்கள்.

எனினும் அதனை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே இந்தியாவின் நிலைப்பாடாகவும் இருக்கின்றது. என்னுடைய நிலைப்பாடும் அதுவே. அதுதான் சாத்தியமானது. மக்கள் எனக்கு கூடிய ஆசனங்களை தந்திருந்தால் இவற்றை நான் இலகுவாக தீர்த்திருப்பேன். வடக்கில் இராணுவ அதிகாரியை ஆளுநராக நியமிக்கும் நிலைப்பாடு இதுவரை அரசிடம் இல்லை என்றார்.



ஆனையிறவில் 1991ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளின் புல்டோசர் மீது தாக்குதல் நடத்தியபோது உயிரிழந்த இராணுவ கோப்ரல் காமினி குலரத்திரவின் நினைவு தினம் நேற்று கிளிநொச்சி பாதுகாப்பு படைத் தலைமையகத்தில் நடைபெற்றது. இதன்போது மேஜர் ஜெனரல் கே.என்.எஸ். கொதுவெகொட அஞ்சலி செலுத்திய போது... (படம்: பரந்தன் குறூப் நிருபர்)

# பொலிசாரின் கடமைக்கு இடையூறு விளைவித்த இருவருக்கு பிணை

மாங்குளம் குறூப் நிருபர்

முல்லைத்தீவு முள்ளியவளை பிரதான வீதியில் ஞாயிற்றுக்கிழமை இரவு வீதி சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசாரது கடமைக்கு இடையூறாக செயற்பட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இரண்டு அரச உத்தியோகத்தர்களுக்கும் பிணையில் செல்ல நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

ஞாயிற்றுக்கிழமை இரவு 7.30 மணியளவில் வீதிச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த பொலிசார் வீதியால் சென்றவர்களை மறித்த போது அவர்கள் சோதனை சாவடியில் நிக்காமல் சென்றுவிட்டு சற்று தள்ளி சென்று மோட்டார் சைக்கிளை நிறுத்தியுள்ளனர்.

பொலிசார் வாகன காப்புறுதி,மற்றும் சாரதி அனுமதிப்பத்திரம் என்பனவற்றை சோதனை செய்தபோது இருவரும் கணவன் மனைவி என தெரிவித்து மனைவி கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் பணிபுரியம் கிராம அலுவலகர் என்றும், கணவன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகத்தின் கீழ் பணிபுரியம் அரச உத்தியோகத்தர் என்று கூறி பொலிசாருடன் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களின் நடத்தையை காணொளியாக பதிவு செய்த பொலிஸ் உத்தியோகத்தரின் கையடக்க தொலைபேசியினை கணவன் தட்டி பறிக்க முற்பட்டபோது பொலிசாரின் சீருடையில் இருந்த பெயர் (அரசமுத்திரை) கழன்று வீழந்துள்ளது.

இதனையடுத்தே குறித்த இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். இதன்போது இருவரையும் தலா ஒரு இலட்சம் ரூபா சரீர பிணையில் விடுவித்ததோடு வழக்கு விசாரணையை ஐப்பசி மாதம் 8 ஆம் திகதிக்கு தவணையிட்டு நீதவான் உத்தரவிட்டார்.

# 'போதைப் பொருளை கட்டுப்படுத்த ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்'

பருத்தித்துறை விசேட நிருபர்

போதைப் பொருள் பாவனையை ஒழிப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என கிளிநொச்சி புத்திஜீவிகள் குழு தெரிவித்துள்ளது.

அண்மையில் கிளிநொச்சியை சேர்ந்த மாணவர்கள் நால்வர் போதைப்பொருள் பாவனையில் ஈடுபட்டனரென சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இதனையடுத்து நேற்று முன்தினம் கிளிநொச்சி வலய கல்வி பணிப்பாளர் கமல்ராஜன் தலைமையில் மருத்துவர் ஜெயராஜா, மருத்துவர் சத்தியமூர்த்தி, கலாநிதி யோசுவா, வலயக்கல்வி பணிமனை உயர் நிலை உத்தியோகத்தர்கள் சில பாடசாலைகளின் அதிபர்கள் கூடி மேற்படி விடயம் தொடர்பாக கலந்துரையாடினார்கள்.

மாவட்டத்தில் போதைப்பொருள் பாவனையை முற்றாக ஒழிக்க அனைவரும் பாடுபட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. போதைப்பொருள் பாவனைக்கு எதிராக கல்வியலாளர்கள், பெற்றோர்கள் குறிப்பாக அதிபர், ஆசிரியர்கள் அனைவரும் குரலெழுப்பி தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

போதைப்பொருள் விற்பனையாளர்களை கண்டுபிடித்து அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க பொலிஸ் திணைக்களம் உரிய நடவடிக்கைகளை எடுத்து மாவட்டத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்

# கொரோனாவினால் தடைப்பட்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் துரித கதியில் முன்னெடுப்பு

## யாழ். மாவட்ட அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம் குறூப் நிருபர்

கொரோனாவினால் தடைப்பட்டிருந்த அபிவிருத்தி வேலைகள் தற்போது துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில்,

யாழ்.மாவட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் அபிவிருத்தி திட்டங்களில் 2 பிரதான திட்டங்கள் அரசினாலும் மேலும் ஒரு திட்டம் உலக வங்கியின் நிதியீட்டத்திலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதனைவிட பல திட்டங்கள் செயற்படுத்தப்படவுள்ளன. இதில் "சப்ரிகம" செயற்திட்டத்தின் கீழ் யாழ் மாவட்டத்தில் ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும்



2 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஒவ்வொரு கிராம சேவையாளர் பிரிவிலும் அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் சுமார் 690 மக்களால் இனங்காணப்பட்ட திட்டங்கள் ஏற்கனவே கடந்த பாராளுமன்ற ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் அனுமதிக்கப்பட்டு இவ் வருடம் 2020ல் நடைமுறைப்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளது.

அந்த 690 திட்டங்களுக்குமான மொத்த மதிப்பீடு 870 மில்லியன் ரூபாவாகும். இந்த திட்டத்தினை கொரோனா காலப்பகுதிக்கு முன்னர் தொடங்கியிருந்தாலும் அதன் பிற்பாடு அந்த வேலைகள் முற்றாக முடிவுறுத்தப்படவில்லை. எனினும் 573 வேலைகள் முடிவுற்றுள்ளன. இதற்கென 245 மில்லியன் ரூபா தற்போது வரை செலவிடப்பட்டுள்ளது.

மிகுதி வேலைகள் இந்த வருட இறுதிக்குள் பூர்த்தி செய்யக்கூடியவாறான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

அதேபோல" கிராமிய உட்கட்டமைப்பு அபிவிருத்தித் திட்டத்தின்" கீழ் 57 திட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. அவற்றுக்கான நிதி ஒதுக்கீடு 21.2 மில்லியன் ரூபா இந்த 57 திட்டங்களில் தற்போது 46 திட்டங்கள் பூரணப் படுத்தப்பட்டுள்ளன. இதற்கென 16 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது என்றார்.

# மகளை கொடுமைப்படுத்திய தாய்; பூட்டி அறையிலிருந்து சிறுமி மீட்பு

## வவுனியாவில் கொடூரம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா, பெரியதம்பனை பகுதியில் வீட்டு அறையொன்றில் பூட்டி வைக்கப்பட்டு கொடுமைப் படுத்தப்பட்ட 7 வயது சிறுமி செட்டிகுளம் பிரதேச செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களால் நேற்று முன்தினம் மீட்கப்பட்டு பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா மருதங்குளி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் வைத்து 7 வயது சிறுமி ஒருவரை பல நாட்களாக தொடர்ச்சியாக தாயார் மற்றும் தாயாரின் மறுதார கணவர் ஆகியோர் அடித்து, சூடு வைத்து துன்புறுத்தி வந்துள்ளனர்.

இந் நிலையில், நேற்று முன்தினம் சிறுமி தாயாரால் அடித்து துன்புறுத்தப்பட்டு வீட்டு அறை ஒன்றில் தனியாக வைத்து பூட்டப்பட்டுள்ளார்.

இது தொடர்பில் செட்டிகுளம் பிரதேச செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்களுக்கு தெரியவர அவர்கள் அங்கு சென்றிருந்தனர். இதன்போது வீட்டில் எவரும் இல்லாத நிலையில் குறித்த சிறுமியை வீட்டு அறை ஒன்றில் பூட்டி வைத்திருந்த நிலையில் மீட்டுள்ளனர்.

இது தொடர்பான விசாரணைகளை முன்னெடுத்துள்ள செட்டிகுளம் பிரதேச செயலக பெண்கள், சிறுவர் பிரிவு உத்தியோகத்தர்கள் சிறுமியின் வாக்குமூலம் மற்றும் சிறுமியின் உடலில் இருந்த துன்புறுத்தல் காயங்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்துள்ளதுடன், குறித்த சிறுமியை பறையனாலங்குளம் பொலிசாரிடம் ஒப்படைத்துள்ளனர். சிறுமி தொடர்பில் வழக்கு பதிவு செய்த பொலிசார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# யாழ். அரச அதிபருடன் கட்டளை தளபதி சந்திப்பு

பருத்தித்துறை விசேட நிருபர்



யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர்ஜெனரல் செனரத் பண்டார யாழ். மாவட்ட அரசாங்க அதிபரை சந்தித்து கலந்துரையாடினார். நேற்று முன்தினம் யாழ். மாவட்ட செயலகத்துக்கு சென்ற கட்டளைத் தளபதி அரசாங்க அதிபருடன் சந்திப்பினை மேற்கொண்டார். இச் சந்திப்பு தொடர்பாக அரசாங்க அதிபர் கூறுகையில்,

யாழ்ப்பாணத்தில் இராணுவத்தினரால் மேற்கொள்ளப்படுகின்ற மனிதாபிமான வேலைத்திட்டங்களை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் என தெரிவித்தேன். அதேபோன்று வீடற்றவர்களுக்கு வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும் செயற்பாட்டை தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும் எனவும் குறிப்பிட்டேன். இடம்பெயர்ந்து நலன்புரி முகாம்களில் வாழும் மக்கள், அண்மையில் மீள்குடியேறிய மக்கள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது என்றார். சந்திப்பின் பின்னர் யாழ் மாவட்ட அரசாங்க அதிபருக்கு இராணுவ தளபதி நினைவுப் பரிசினை கையளித்தார்.

# மஹோற்சவ காலத்தில் சொற்பொழிவு நிகழ்வு

யாழ்ப்பாணம் உரும்பிராய் மேற்கு அருள்மிகு ஸ்ரீ ஞான சக்தி வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு சிறப்புச் சொற்பொழிவு நடத்தப்படவுள்ளது. ஆலயப் பிரதான மண்டபத்தில் எதிர்வரும் சனிக்கிழமை தொடக்கம் 07.09.2020 திங்கட்கிழமை வரை மாலை 7.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

29.08.2020 சனிக்கிழமை சிறப்புச் சொற்பொழிவு இளம்சைவப்புலவர் ச.நவநீதன் விடயம் " விக்கினங்கள் தீர்ப்பான் விநாயகர் " , 30.08. சைவப்புலவர் பொன். சந்திரவேல் விடயம் " சமயமும் உள ஆரோக்கியமும்", 31.08 சைவப்புலவர் கா.கமலநாதன் விடயம் "மஹோற்சவம் உணர்த்தும் ஐந்தொழில் தத்துவம்", 01.09 இளம் சைவப்புலவர் க.கைலவாசன் விடயம் "நாயன்மார் காட்டிய நன்நெறிகள்".

02.09 இளம்சைவப்புலவர் க.கைலைநாதன் விடயம் "வைரவர் அவதாரம்", 03.09 சிவநெறிச்செம்மல் நித்திய பாபுதரன் விடயம் "சைவத்தின் காவலர் நாவலர்", 04.09 சைவப்புலவர் கந்த சத்தியதாசன் விடயம் "அழுதால் உன்னை பெறலாமே", 05.09 இளம்சைவப்புலவர் ச.நவநீதன் விடயம் "கிராமிய வழிபாட்டில் வைரவர்", 06.09 இளம்சைவப்புலவர் க.கைலவாசன் விடயம் "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே", 07.09 சிறப்புச் சொற்பொழிவு சைவப்புலவர் பொன் சந்திரவேல் விடயம் "தொண்டர் தம் பெருமை".

# முதியோர் இல்ல காணி தனியாருக்கு விற்பனை?

கோவில்குளம் குறூப் நிருபர்

வவுனியா கள்ளிக்குளத்தில் முதியோர் இல்லம் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்ட காணி தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

கள்ளிக்குளத்தில் 'அரவணைப்பகம்' என்ற பெயரில் பத்து எக்கர் நிலம் முதியோர் இல்லம் கட்டுவதற்கு ஒதுக்கப்பட்ட நிலையில் குறித்த காணி கள்ளிக்குளம் கிராம அபிவிருத்தி சங்கத்தின் ஆதரவுடன் தனியாருக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளதாக கிராம மக்கள் குற்றசாட்டியுள்ளனர்.

சிதம்பரம் மாதிரிக்கிராமம் என பெயர் சூட்டப்பட்ட கள்ளிக்குளம் கிராமத்தில் 'அரவணைப்பகம்' என்ற பெயரில் முதியோர் இல்லம் கட்டுவதற்காக 45 இலட்சம் நன்கொடையாக பெறப்பட்டு அடிக்கல் நாட்டப்பட்டு கல்வெட்டும் பொறிக்கப்பட்ட நிலையில் குறித்த கல்வெட்டு உடைத்து வீசப்பட்டு காணி நான்கு துண்டுகளாக பிரித்து விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும், முதியோர் இல்லம் கட்டுவதற்காக நன்கொடையாக கிடைக்கப் பெற்ற 45 இலட்சம் பணத்திற்கு என்ன நடந்தது என்ற விபரம் இல்லை எனவும் இது தொடர்பாக கிராம உத்தியோகத்தர் நடவடிக்கை எதனையும் மேற்கொள்ளவில்லை என கிராம மக்கள் தெரிவித்தனர். 5 இலட்சம் ரூபா பணத்திற்கு என்ன நடந்தது என்ற விசாரணையை இலஞ்ச ஆணைக்குழு முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை கிராம மக்கள் முன்வைத்துள்ளனர்.



மன்னார் உப்பளம் பகுதியில் கொலை செய்யப்பட்ட நெடுந்தீவை சேர்ந்த யுவதியின் சடலமானது மன்னார் மாவட்ட மாதர் ஒன்றியத்தின் உதவியுடன் நேற்றுமுன்தினம் மாலை மன்னாரில் அடக்கம் செய்யப்பட்ட போது... (படம்: மன்னார் குறூப் நிருபர்)

# வர்த்தகக் கண்காட்சிக்கு முன்கூட்டியே பணம் செலுத்தினாலே அனுமதி வழங்க வேண்டும்

## யாழ்.மாநகர சபையில் தீர்மானம்

கந்தர்மடம் நிருபர்

யாழ்ப்பாண நகரில் வர்த்தகக் கண்காட்சியை நடத்துபவர்கள் 2018 முதல் மாநகர சபைக்கான நிதிகளை முழுமையாக செலுத்தாது அரைகுறையாகவே செலுத்துகின்றமையினால் 2021ஆம் ஆண்டிற்கான அனுமதிக்கு முன்கூட்டியே பணம் செலுத்த வேண்டும். அவ்வாறு செலுத்தினால் மட்டுமே அனுமதி வழங்க வேண்டும் என யாழ்ப்பாணம் மாநகர சபையில் தீர்மானிக்கப்பட்டது.

மாநகர சபையின் ஒகஸ்ட் மாத அமர்வு நேற்று மாநகர முதல்வர் இ.ஆனல்ட் தலைமையில் நடைபெற்றது. இவ் அமர்விலேயே மேற்படி விடயம் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது.

இதன்போது கருத்துத்து தெரிவித்த உறுப்பினர் கிருபாகரன், 2019ஆம் ஆண்டு 3 மில்லியன் ரூபா செலுத்தவேண்டிய போதும் அரைவாசி தொகை 15 இலட்சம் மட்டுமே செலுத்தினர். 15 இலட்சமாக யார் அனுமதி வழங்கியது என்றார்.

இதன்போது கருத்து தெரிவித்த உறுப்பினர் ந.லோகதயாளன், 2019ஆம் ஆண்டு 15 இலட்சம் செலுத்தியதாக கூறுவதும் தவறானாது. ஏனெனில் 2019ஆண்டு ஜனவரி மாதம் 25ஆம் திகதியன்று இடம்பெற்ற கண்காட்சிக்கான பணம் 20190911 அன்றே 13 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா மட்டுமே செலுத்தப்பட்டது.

ஆயிரம் ரூபா விண்ணப்பம் எடுக்கும் எமது வரி இறுப்பாளர்களே வற்வரியை மேலதிகமாக செலுத்த வேண்டும். ஆனால் இந்த 15 இலட்சம் தீர்மானிக்கப்பட்டவர்கள் வற் வரியினையும் சேர்த்து 15 இலட்சம் செலுத்தியதனால் சபை நிதியாக 13 இலட்சத்து 25 ஆயிரம் ரூபா மட்டுமே சபைக்கு கிடைத்துள்ளது.

# தென்கிழக்கு ஆசியா, மத்தியதரை தவிர்த்து உலகில் கொரோனா பரவல் வேகம் தணிவு

கொவிட்–19 பெருந்தொற்று தொடர்ந்து பரவி வருகின்ற போதும், தென் கிழக்கு ஆசியா மற்றும் கிழக்கு மத்தியதரைப் பிராந்தியங்கள் தவிர்த்து உலகெங்கும் நோய்த் தொற்று சம்பவங்கள் மற்றும் உயிரிழப்பு குறைவடைந்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

இந்தத் தொற்றுநோயின் புதிய விபரங்களை உலக சுகாதார அமைப்பு கடந்த திங்கட்கிழமை இரவு வெளியிட்டது. அதில் கடந்த ஒரு வாரத்தில் உலகெங்கும் பதிவான நோய்த் தொற்று சம்பவங்களில் பாதி எண்ணிக்கை மற்றும் 39,240 உயிரிழப்புகளில் 62 வீதம் என அமெரிக்காஸ் தொடர்ந்து மோசமாக பாதிக்கப்பட்ட பிராந்தியமாக உள்ளது.

உலகில் நோய்த் தொற்றுக்கு உள்ளானோர் எண்ணிக்கை 23.65 மில்லியனுக்கு மேல் அதிகரித்திருப்பதோடு 811,895 பேர் உயிரிழந்திருப்பதாக ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்தில் தரவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"கடந்த ஓகஸ்ட் 23 ஆம் திகதி முடிவுற்ற வார இறுதியில் உலக சுகாதார அமைப்புக்கு 1.7 மில்லியனுக்கும் அதிகமான கொவிட்–19 தொற்று சம்பவங்கள் மற்றும் 39,000 புதிய உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

இது நோய்த் தொற்று எண்ணிக்கையில் 4 வீத வீழ்ச்சி என்பதோடு முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் உயிரிழப்பிலும் வீழ்ச்சி (12 வீதம்) ஏற்பட்டுள்ளது" என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது. எனினும் இரண்டாவது அதிகம் பாதிக்கப்பட்ட பிராந்தியமான தென்கிழக்கு ஆசியாவில் புதிய நோய்த் தொற்று சம்பவங்கள் 27 வீதமாக அதிகரித்திருப்பதோடு உயிரிழப்பும் 15 வீதம் உயர்ந்துள்ளது. இந்தியா தற்போது அதிகம் நோய்ப் பரவல் கொண்ட நாடாக இருப்பதோடு நேபாளத்திலும் தற்போது கொரோனா தொற்று வேகமாக அதிகரித்து வருகிறது.



அதேபோன்று கிழக்கு மத்தியதரைப் பிராந்தியத்திலும் வைரஸ் பரவல் 4 வீதம் அதிகரித்தபோதும் கடந்த ஆறு வாரங்களில் உயிரிழப்பு தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுள்ளது.

முந்தைய வாரத்துடன் ஒப்பிடுகையில் லெபனான், துனீசியா மற்றும் ஜோர்தானில் நோய்த் தொற்று எண்ணிக்கை அதிகரித்திருப்பதாக உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

ஆபிரிக்க பிராந்தியத்தில் கடந்த வாரத்தில் நோய்த் தொற்று மற்றும் உயிரிழப்பு முறையே 8 மற்றும் 11 வீதமாக குறைந்துள்ளது. அல்ஜீரியா, கென்யா, கானா, செனகல் மற்றும் தென்னாபிரிக்க நாடுகளில் நோய்ப் பரவல் குறைவடைந்ததே இதற்குக் காரணம் என்று உலக சுகாதார அமைப்பு குறிப்பிட்டுள்ளது.

"கடந்த மூன்று வாரங்களில் ஐரோப்பிய பிராந்தியத்தில் நோய்த் தொற்று சம்பவங்கள் நிலையாக அதிகரித்துள்ளன" என்று அது குறிப்பிட்டது.

"எவ்வாறாயினும், அண்மைய வாரங்களில் அதில் ஒரு வீதமாக சற்று குறைவடைந்து, பிராந்தியத்தில் உயிரிழப்பு எண்ணிக்கை தொடர்ச்சியாக வீழ்ச்சி கண்டுள்ளது" என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## போலியோ நோயில் இருந்து ஆபிரிக்க கண்டம் விடுதலை



ஆபிரிக்கக் கண்டம் போலியோ நோயில் இருந்து விடுதலை பெற்ற பிராந்தியமாக உலக சுகாதார அமைப்பு நேற்று அறிவித்தது. கடைசியாக நான்கு ஆண்டுகளுக்கு முன்னர் வடகிழக்கு நைஜீரியாவில் இந்த நோய் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

"வாழ்நாள் முழுவதும் பக்கவாதத்தை ஏற்படுத்துவதில் இருந்து 1.8 மில்லியன் குழந்தைகளை பாதுகாத்ததற்கு அரசுகள், நன்கொடையாளர்கள், சுகாதார பணியாளர்கள் மற்றும் சமூகங்களின் இடைவிடாத முயற்சிக்கு நன்றிகள்" என்று உலக சுகாதார அமைப்பு வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

போலியோ அல்லது இளம்பிள்ளை வாத தொற்று நோய் குழந்தைகளின் முதுகெலும்பைத் தாக்குவதோடு குணப்படுத்த முடியாத பக்கவாதத்தை ஏற்படுத்துகிறது.

1950களில் இந்த நோய்க்கு தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம் உலகெங்கும் இந்த நோய் ஒழிக்கப்பட்டு வருவதோடு, ஆசியா மற்றும் ஆபிரிக்காவின் வரிய நாடுகளில் மாத்திரமே எஞ்சியிருந்தது. எனினும் இந்த ஆண்டில் ஆப்கான் மற்றும் பாகிஸ்தானில் மாத்திரம் மொத்த 87 போலியோ நோய் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சமய ரீதியாக அந்த நாடுகளில் தடுப்புச் சொட்டு மருந்தைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பதில் எதிர்ப்பு நிலவுகிறது. அந்தச் சொட்டுமருந்து, சிறுமிகளைக் கருத்தரிக்க விடாமல் செய்யும் மேல்நாட்டுச் சதி என்று சமய கடும்போக்காளர்கள் சிலர் தவறாகப் பிரசாரம் செய்து வருகின்றனர்.

சமயத் தலைவர்களும், இனக் குழுத் தலைவர்களும் இணைந்து அந்தத் தவறான பிரசாரத்தை முறியடிக்கப் போராடி வருகின்றனர்.

## அமெரிக்காவில் கறுப்பினத்தவர் கொலையால் புதிய போராட்டம்



கறுப்பினத்தவர் மீது பொலிஸார் துப்பாக்கிச் சூடு நடத்திய சம்பவத்தை தொடர்ந்து அமெரிக்காவின் விஸ்கொசினில்இரண்டாவது நாளாகவும் கட்டடங்கள் மற்றும் கார்கள் தீக்கிரையாக்கப்பட்டு மோதல் இடம்பெற்றுள்ளது.


29 வயதான ஜகப் ப்ளெக் என்ற அந்த கறுப்பின இளைஞர் தனது கார் வண்டியை நோக்கிச் சென்று அதன் கதவை திறக்கும் போதே பொலிஸார் பல தடவைகள் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளனர். அவர் தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்நிலையில் துப்பாக்கிச் சூடு நடத்திய பொலிஸாரை கண்டித்தும் நிறவெறிக்கு எதிராகவும் போராட்டம் வெடித்துள்ளது.

இதனை அடுத்து உள்ளூர் பொலிஸாருக்கு உதவியாக தேசிய காவல் படைக்கு ஆளுநர் டோனி எவர்ஸ் அழைப்பு விடுத்துள்ளார். நகரில் ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட போதும் அதனை சில ஆர்ப்பாட்டக்காரர்கள் மீறியுள்ளனர்.

ஏற்கனவே கடந்த மே மாதம் மினசொட்டாவில் ஜோர்ஜ் பிளொயிட் என்ற கறுப்பினத்தவர் பொலிஸாரின் பிடியில் கொல்லப்பட்ட சம்பவத்தை அடுத்து நிறவெறி மற்றும் பொலிஸ் வன்முறைகளுக்கு எதிராக அமெரிக்கா எங்கும் ஆர்ப்பாட்டங்கள் வெடித்தமை குறிப்பிடத்தக்கது.

## ஹொங்கொங் ஆடவருக்கு 2ஆவது முறை கொரோனா



ஹொங்கொங்கில் கொரோனா தொற்றில் இருந்து குணமடைந்த ஆடவர் ஒருவர், மீண்டும் அந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளது ஊறுதி செய்யப்பட்டிருப்பதாக ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

அத்தகைய சம்பவம் ஒன்று பதிவாவது உலகில் இது முதல்முறை என நம்பப்படுகிறது. 33 வயதுடைய அந்த ஆடவர் கடந்த ஏப்ரல் மாதம் குணமடைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆனால் இம்மாதம் ஸ்பெயினுக்குச் சென்று திரும்பிய அவரிடம் பரிசோதனை செய்யப்பட்டபோது அவருக்கு மீண்டும் நோய் தொற்றியது கண்டுபிடிக்கப்பட்டது. நோய் அறிகுறிகள் ஏதும் அவரிடம் தென்படவில்லை.

வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்த பின்னரும் அவரது உடலில் வைரஸ்கள் இருந்தனவா என்பது முதலில் தெளிவாகத் தெரியவில்லை.

ஆனால், இரண்டு மாறுபட்ட கொரோனா வகை வைரஸால் அவர் பாதிக்கப்பட்டது பின்னர் உறுதியானதாக ஆய்வாளர்கள் கூறினர்.

ஒருமுறை கொவிட்–19 நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மீண்டும் அந்நோய் ஏற்படாது என்றே இதுவரை நம்பப்பட்டது. ஆனால் புதிய கண்டுபிடிப்பு அந்த நம்பிக்கையைக் கேள்விக்குறியாக்கியுள்ளது. இருப்பினும் அவசரப்பட்டு எந்த முடிவுக்கும் வரவேண்டாமென உலக சுகாதார அமைப்பு கேட்டுக்கொண்டுள்ளது.

## ஆப்கானில் தலிபான்கள் தொடர் தாக்குதல்: 12 பேர் உயிரிழப்பு

வடக்கு ஆப்கானிஸ்தானில் இராணுவ முகாம் உட்பட தலிபான்கள் நேற்று நடத்திய தொடர்ச்சியான தாக்குதல்களில் குறைந்தது 12 பேர் கொல்லப்பட்டு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

ஆப்கான் அரசு மற்றும் தலிபான்களிடையிலான பேச்சுவார்த்தைகள் விரைவில் ஆரம்பிக்கும் எதிர்பார்ப்புக்கு மத்தியிலேயே இந்தத் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன.

பல்க் மாகாணத்தில் டிரக் வண்டியில் வந்த தற்கொலைதாரி குண்டை வெடிக்கச் செய்ததில் மூவர் கொல்லப்பட்டனர்.

மேற்கு கார் மாகாணத்தின் இராணுவ சோதனைச் சாவடி ஒன்றில் நடத்தப்பட்ட மற்றொரு தாக்குதலில் எட்டு துருப்பினர் கொல்லப்பட்டதோடு மேலும் ஐவர் காயமடைந்தனர்.

இதன்போது அங்கு ஐந்து மணிநேரம் துப்பாக்கிச் சண்டை நீடித்ததாக மாகாண ஆளுநரின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார். அதேபோன்று தலைநகர் காபுலில் நேற்று இடம்பெற்ற வீதியோர குண்டுத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரி ஒருவர் கொல்லப்பட்டதோடு அடையாளம் தொரியாத தாக்குதல்தாரி நடத்திய துப்பாக்கிச் சூட்டில் பெண் பொலிஸ் அதிகாரி மற்றும் அவரது ஓட்டுநர் காயமடைந்துள்ளார்.

## காசாவில் இஸ்ரேல் மீண்டும் தாக்குதல்

இஸ்ரேல் எல்லையில் தீயை பரவச் செய்யும் பலூன்களை பறக்கவிடுவதற்கு பதில் நடவடிக்கையாக காசாவில் ஹமாஸ் இலக்குகள் மீது இஸ்ரேலிய போர் விமானங்கள் மற்றும் பீரங்கிகள் கடந்த திங்கட்கிழமை இரவும் தாக்குதல் நடத்தியுள்ளது.

காசாவில் இருந்து ரொக்கெட் குண்டு வீச்சுகள் மற்றும் தீப் பந்தத்துடனான பலூன்கள் தொடர்ந்து விடப்படுவதால் கடந்த ஓகஸ்ட் 6 ஆம் திகதி தொடக்க காசா மீது இஸ்ரேல் கிட்டத்தட்ட நாளாந்தம் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

"தெற்கு காசாவில் ஹமாஸ் பயங்கரவாத அமைப்புக்குச் சொந்தமான இராணுவ நிலைகள் மற்றும் நிலத்தடி தளங்களை போர் விமானங்கள், பீரங்கிகள் மற்றும் விமானங்கள் தாக்கின" என்று இஸ்ரேல் இராணுவம் குறிப்பிட்டது. பலஸ்தீனர்கள் விடும் தீமூட்டும் பலூன்கன்களால் தெற்கு இஸ்ரேலின் விவசாய நிலங்களில் தீச் சம்பவங்கள் பரவலாக ஏற்பட்டிருப்பதோடு இதனால் பயிர்களுக்கும் சேதம் ஏற்பட்டுள்ளது.

இதற்கு பதில் நடவடிக்கையாக காசா மீதான முடக்கத்தையும் இஸ்ரேல் கடுமையாக்கியுள்ளது.



## 1,100 ஆண்டுகளுக்கு முந்தைய தங்க நாணயங்கள் கண்டுபிடிப்பு

மத்திய இஸ்ரேலில் அகழ்வாராய்ச்சி தன்னார்வ தொண்டுப் பணியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் 1,100 ஆண்டுகளுக்கு முன் களிமண் சாடியில் புதைக்கப்பட்ட 425 தங்க நாணயங்களை கண்டுபிடித்துள்ளார்.

பெரும்பாலான நாணயங்கள் இந்தப் பிராந்தியம் அப்பாசிய கலீபத்தின் ஓர் அங்கமாக இருந்தபோது ஆரம்ப இஸ்லாமிய காலத்தைச் சேர்ந்ததாக உள்ளன.



345 கிராம் எடை கொண்ட இந்த நாணயங்கள் அது புதைக்கப்பட்ட காலத்தில் கலீபத் நகர் ஒன்றில் ஆடம்பர வீடு ஒன்றை கொள்வனவு செய்ய போதுமான தொகையாக இருந்துள்ளது.

இதற்கு சொந்தமானவர் இதனை தற்காலிக சேமிப்பாக வைத்திருக்கக் கூடும். எனினும் அவரால் மீண்டும் இதனை அடைய முடியாமல்போயுள்ளது.

இதில் உள்ள தங்க நாணயங்கள் தங்க டினார்களாக பயன்படுத்தப்பட்டிருப்பதோடு சிறிதாக வெட்டப்பட்ட நாணயங்கள் சில்லறை நாணயமாக பயன்படுத்தப்பட்டிருக்கும் என்று இஸ்ரேல் தொல்பொருள் அதிகாரசபையின் ரொபர்ட் கூல் தெரிவித்துள்ளார்.

### இனப்படுகொலை குற்றவாளி:

## 'பொஸ்னிய கசாப்புக்காரர்' மிலாடிக் மேன்முறையீடு

பொஸ்னிய சேர்பிய முன்னாள் இராணுவத் தளபதி ரட்கோ மிலாடிக் தம் மீதான இனப்படுகொலை மற்றும் மனிதகுலத்திற்கு எதிரான குற்றத்தை எதிர்த்து ஹேகிலுள்ள சர்வதேச நீதிமன்றத்தில் மேன்முறையீடு செய்துள்ளார்.

கொரோனா வைரஸ் மற்றும் மிலாடிக்கின் உடல்நிலை காரணமாக பல தடவைகள் ஒத்திவைக்கப்பட்ட இரண்டு நாள் மேன்முறையீட்டு விசாரணை நேற்று ஆரம்பிக்கப்பட்டது.

78 வயதான மிலாடிக்கின் தலைமையிலான இராணுவம் 1990களில் பொஸ்னிய யுத்தத்தின் போது பொஸ்னிய முஸ்லிம்களை படுகொலை செய்ததாக குற்றம் காணப்பட்டுள்ளது.

'பொஸ்னியாவின் கசாப்புக்காரர்' என்று அழைக்கப்படும் மிலாடிக்கிற்கு கடந்த 2017 நவம்பர் மாதம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.



இந்நிலையில் நேற்று முகக்கவசத்துடன் நீதிமன்றத்தில் ஆஜராகி இருந்த மிலாடிக், இன்று 10 நிமிடங்கள் பேசவுள்ளார். இதில் பெரும்பாலான நீதிபதிகள் வீடியோ இணைப்பு மூலமே விசாரணையில் பங்கேற்றனர்.

முன்னதாக 7,000க்கும் அதிகமான பொஸ்னிய ஆண்கள் மற்றும் சிறுவர்களை கொலை செய்ததில் மிலாடிக்கிற்கு குறிப்பிடத்தக்க பங்களிப்பு இருப்பதாக குற்றங்காணப்பட்டிருந்தது.

## துருக்கி–கிரேக்கம் பரஸ்பரம் 'போர் ஒத்திகை' அறிவிப்பு

கிரேக்க தீவான கிரீட்டுக்கு அப்பால் துருக்கி மற்றும் கிரேக்கம் பரஸ்பரம் கடற்படை பயிற்சிகளை மேற்கொள்ள விருப்பதாக அறிவித்துள்ளன.

கிழக்கு மத்தியதரைக் கடலில் எரிவாயு மற்றும் எண்ணைக்கு உரிமை கோரும் பதற்றம் அதிகரித்திருக்கும் நிலையிலேயே இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்த பகுதியில் வேறு கப்பல்களை தவிர்த்துக்கொள்ளும்படி துருக்கி உத்தியோகபூர்வ எச்சரிக்கையை விடுத்துள்ளது. நில அதிர்வு ஆராய்ச்சி கப்பலின் செயற்பாட்டை நீடிப்பதாக துருக்கி அறிவித்திருக்கும் நிலையிலேயே கிரேக்கம் இங்கு போர் ஒத்திகை பற்றிய அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இரு தரப்புக்கும் இடையிலான பதற்றத்தை தணிக்கும் முயற்சியாக ஜெர்மனி வெளியுறவு அமைச்சர் ஹெய்கோ மாஸ், துருக்கி மற்றும் கிரேக்கத்திற்கு பயணத்தை ஆரம்பித்துள்ளார். கிரீட் கடலுக்கு அப்பால் மற்றும் சர்ச்சைக்குரிய சைப்ரஸ் கடல் பகுதியில் எண்ணெய் மற்றும் எரிவாயு கண்டுபிடிக்கப்பட்டது தொடர்பில் இரு நேட்டோ அங்கத்துவ நாடுகளான துருக்கி மற்றும் கிரேக்கத்திற்கு இடையே இழுபறி ஏற்பட்டுள்ளது.



தவிர, கருங்கடலில் பெருமளவு இயற்கை எரிவாயு இருப்பு கண்டுபிடிக்கப்பட்டதாக துருக்கி கடந்த வாரம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 13 ஆவது திருத்தச் சட்டத்தை நீக்க இந்தியா இடமளிக்காது

## மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கருணாகரம்

**மண்டூர் குறூப் நிருபர்**

13 ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதற்கு எக்காரணம் கொண்டும் இந்தியா இடமளிக்காதென்பது கூட்டமைப்பின் திடமான நம்பிக்கை என, மட்டு. மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம்(ஜனா) தெரிவித்தார்.

19 ஆவது, 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பாக வினவிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியா , இலங்கை ஆகிய நாடுகளுக்கிடையே ஏற்படுத்தப்பட்ட 13 ஆவது திருத்த சட்டத்தினால் மாகாண சபைகள் முறைமை வந்தது. 13 ஆவது திருத்தச்சட்டம் ஏற்பட பல தியாகங்கள் செய்யப்பட்டிருக்கின்றது, அந்த வகையிலே 13 ஆவது திருத்தச்சட்டம் இந்தியாவின் தலையீடு இன்றி நீக்கப்படுவதென்பது இலேசான காரியமல்ல.



19 ஆவது திருத்த சட்டத்தை நீக்க வேண்டிய தேவை அரசுக்கு இருக்கின்றது. 19 ஆவது திருத்த சட்டத்தின் மூலமாக நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டிருக்கின்றது.

அதற்காக 19 ஆவது திருத்தச் சட்டம் நீக்கப்பட்டு முழு அதிகாரமும் கொண்ட ஜனாதிபதியாக வருவதற்கு முயற்சிக்கின்றார்.

அதற்கு மேலாக பசில் ராஜபக்ஷவின் தூர நோக்கு சிந்தனைக்கேற்ப உருவாக்கப்பட்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன மிக குறுகிய காலத்தில் வளர்ச்சியடைந்து, இந்நாட்டின் ஆட்சியை கைப்பற்றிய நிலையில், பசில் இரட்டை பிரஜாவுரிமையுடன் இருப்பதனால், பாராளுமன்றத்திற்குள் நுழைவதற்கு 19 ஆவது திருத்தச் சட்டம் தடையாக இருப்பதனால் அதை நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்கிறார்கள். தமிழ்மக்களது புரையோடிப்போயுள்ள பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டுமாக இருந்தால் 2/3 பெரும்பான்மையை வைத்துக் கொண்டுள்ள புதிய அரசாங்கம், ஒரு நிரந்தரமான அரசியல் தீர்வை காண வேண்டும். அப்படியில்லாது போனால் இந்த நாடு இருண்ட யுகத்திற்குள் தள்ளப்பட வேண்டியதொரு நிலைக்கு உள்ளாகும். கடந்த போராட்ட காலங்களில் எமது மாவட்டமும் மக்களும் அபிவிருத்தியில் பின்தங்கி அந்நியப்பட்டிருப்பதனால் வேற்றுமைகளை மறந்து ஒற்றுமையாக செயற்பட வேண்டிய காலத்தில் இருந்து கொண்டிருக்கின்றோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்விச் சேவையிலிருந்து ஓய்வு

**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**



அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையின் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் பிரதி அதிபராக கடமையாற்றி நேற்றுமுன்தினம் (24) ஓய்வு பெற்ற இலங்கை கல்வி நிருவாக சேவை தரம் ஒன்றைச் சேர்ந்த திருமதி மெஹ்றுன்நிஸா முஹம்மது மன்சூரின் சேவை நலன் பாராட்டு விழா கலாசாலை மண்டபத்தில் அதிபர் பீ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது.

35 வருட கால கல்விப்பணியில் 27 வருடங்கள் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் சேவையாற்றி ஓய்வு பெற்ற இவரின் கல்விச் சேவையினைக் கலாசாலை சமூகம் பாராட்டியும் பொன்னாடை போர்த்தியும் நினைவுச்சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.மாணவ, ஆசிரியர்களின் கலை கலாசார நிகழ்வுகளும் இதன் போது அரங்கேற்றம் செய்யப்பட்டன.

கல்முனை மஹ்மூத் பாளிகா கல்லூரி உட்பட ஆசிரியராக பணிபுரிந்த இவர், அட்டாளைச்சேனை கல்வியற் கல்லூரியில் விரிவுரையாளராகவும் அதன்பின்னர் அட்டாளைச்சேனை அரசினர் ஆசிரியர் கலாசாலையில் விரிவுரையாளராகவும், பிரதி அதிபராகவும் கடமையாற்றி ஓய்வு பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வில் ஓய்வு பெற்ற விரிவுரையாளர் எம்.ஐ.அப்துல்லதீப்,இணைப்பாளர் ஏ.எம்.பைசல், உட்பட விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.



சம்மாந்துறை பிரதேச சபையினால் பிரதான வீதிகளில் நவீன மின் விளக்குகளை பொருத்தும் வேலைத்திட்டம் சம்மாந்துறை பிரதேச சபையின் பதில் தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்ட போது.

(படம்:சவளக்கடை குறூப் நிருபர்)

# மட்டக்களப்பில் வீதி புனரமைப்பு; இராஜாங்க அமைச்சரினால் ஆரம்பிப்பு

**கல்லடி குறூப்நிருபர்**

அரசினால் வீதி அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில், மட்டக்களப்பு நரிப்புல் தோட்டம் கிராமத்திற்கான காசுபதி வீதி கொங்கிறீட் வீதியாக மாற்றியமைப்பதற்கான ஆரம்பக் கட்ட பணிகளை தபால் சேவைகள் மற்றும் வெகுஜன ஊடக தொழிற்துறை அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் நேற்றுமுன்தினம் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.



சப்ரிகம கிராமிய அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் இரண்டு மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் இவ்வீதி அமைக்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், மண்முனை மேற்கு பிரதேச செயலாளர் எஸ். சுதாகர், கிராம உத்தியோகத்தர் மற்றும் அமைச்சின் உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

இதன் போது அங்கு கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர், எதிர்கட்சியில் இருக்கும் சிலர் மீண்டும் மக்கள் மத்தியில் வெவ்வேறு விதமான கருத்துக்களை பரப்பி வருகின்றார்கள். இவை அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை, இந்த அரசாங்கம் ஒருபோதும் தமிழ் மக்களுக்கு எதிரான செயற்பாடுகளை மேட்கொள்ளாது எனவும், எதிர்வரும் ஐந்து வருடங்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நினைத்துப் பார்க்க முடியாத அளவிற்கு மண் வீதிகளும் கிரவல் வீதிகளும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளது எனவும் தெரிவித்தார்.

## மூதூர் பிரதேச சபையின் ஏற்பாட்டில் குடிநீர் விநியோகம்

**(மூதூர் தினகரன் நிருபர்)**

மூதூர் பிரதேச சபையின் எல்லைக்குபட்ட கிராமங்களான இருதயபுரம், பட்டித்திடல், இக்பால் நகர், இத்திக்குளம், சின்னக்குளம், பாட்டாளிபுரம், சந்தோசபுரம் மற்றும் கூனித்தீவு பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குரிய அத்தியாவசிய குடிநீர் விநியோக வசதியினை தினமும் மூதூர் பிரதேச சபையின் மூலம் வழங்கி வருவதாக மூதூர் பிரதேச சபையின் தவிசாளர் எம்.எம்.ஏ. அரூஸ் தெரிவித்தார்.

இக்கிராமங்களில் உள்ள கிணறுகளில் நீர்வற்றி உள்ளதால் குடிநீரை பெறுவதில் மக்கள் மிக பல்வேறு சொல்லொண்ணா கஸ்டங்களை அடைந்து வருகின்றனர்.

இதேவேளை தேசிய நீர்வளங்கள் வடிகாலமைப்பு சபை மூலமாக இக்குடிநீரைப்பெற்று மூதூர் பிரதேச சபைக்கு சொந்தமான பவுசர்கள் மூலம் தினமும் மக்களின் அன்றாட பாவனைக்கென வழங்கப்பட்டு வருவதாக தவிசாளர் மேலும் தெரிவித்தார்.

# முள்ளம்பன்றி தாக்கி குடும்பஸ்தர் படுகாயம்

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

சீனக்குடா பொலிஸ் பிரிவில் , விமானப் படைத்தள சுற்று வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த குடும்பஸ்தர் ஒருவரை முள்ளாம் பன்றி ஒன்று தாக்கியதில் படுகாயமடைந்து கிண்ணியா தள வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். இச் சம்பவம் ஞாயிற்றுக் கிழமை (23) இரவு 8.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

கிண்ணியா பகுதியைச் சேர்ந்த எம்.சி. றிஸ்வான் (வயது 32) என்பவரே இதில் காயமடைந்தவராவர்.

இவர் பிறிமா மா ஆலையில் கடமையாற்றி விட்டு வீடு நோக்கி வந்து கொண்டிருந்த போது முள்ளம் பன்றி ஒன்று இவரை தாக்கிவிட்டு சென்றுள்ளது.

அந்த வழியால் வந்த சிறியரக லொறி ஒன்றின் மூலம் இவரை ஏற்றி கிண்ணியா தள வைத்திய சாலையில் அனுமதித்து விட்டுச் சென்றனர்.

இப் பிரதேசத்தில் காட்டு விலங்குகள் வீதியை குறுக்கறுத்துச் செல்வதால் அதிகமான விபத்துகள் இடம் பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஆசிரியர் பணியிலிருந்து ஓய்வு

**காரைதீவு குறூப் நிருபர்**



முப்பத்துமூன்று வருட கல்விச்சேவையிலிருந்து நிந்தவூர் அல்அஷ்ரக் தேசியக் கல்லூரியின் தமிழ்ப்பட்டதாரி ஆசிரியை திருமதி கலாபதி சிவராஜா தனது 60வது வயதில் ஓய்வுபெற்றார்.

இவர் 1987. டிசம்பர் மாதம் 14 ஆம் திகதி கல்முனை கார்மேல் பற்றிமா கல்லூரியில் தனது ஆசிரிய பணியை முதன் முதலில் ஆரம்பித்து சுமார் 30 வருடங்கள் அக்கல்லூரியிலும் அதை தொடர்ந்து 2017 அக்டோபர் 24 ஆம் திகதி தொடக்கம் 2020 ஆகஸ்ட் 21 ஆம் திகதி வரை நிந்தவூர் அல் அஷ்ரக் தேசிய பாடசாலையிலும் 33 வருட சேவையைப் பூர்த்தி செய்தவராவர்.

இவருக்கான பாராட்டு வைபவம் பாடசாலையின் உயர்தர பிரிவின் தலைவர் எம்.எ.அச்சிமொகமட் தலைமையில் இடம்பெற்றது. இந் நிகழ்வில் உயர்தர பிரிவு ஆசிரிய ஆசிரியைகள் கலந்து சிறப்பித்தனர்.

## காட்டுயானை தாக்குதலால் பள்ளிவாசல் கண்ணாடிகள் சேதம்

**(வாழைச்சேனை விசேட நிருபர்)**

ஓட்டமாவடி கள்ளிச்சை கிராமத்திலுள்ள ஜூம்ஆ பள்ளிவாசல் காட்டு யானையினால் தாக்குதலுக்கு உள்ளாகி சேதமாக்கப்பட்டுள்ளதாக பள்ளிவாசல் பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

கள்ளிச்சை கிராமமானது மட்டக்களப்பு மாவட்டத்தின் பழம்பெரும் கிராமம் என்பதுடன் யுத்த காலப் பகுதியில் இராணுவ கட்டுப்பாட்டுக்குள் இருந்து வந்த இந்த கிராமத்தில் அண்மைக்காலத்தில் தான் மக்கள் மீளக்குடியமர்ந்து வந்தனர்.

இந்த நிலையில் அமைக்கப்பட்ட புதிய ஜூம்ஆ பள்ளிவாசலின் ஜன்னல் கண்ணாடிகள் சேதமாக்கப்பட்டுள்ளதுடன், தொடர்ந்தும் இந்த பள்ளிவாசலுக்கும் குடியேறியுள்ள மக்களுக்கும் யானையின் அச்சுறுத்தல் இருந்து வருவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.





மூதூர் பிரதேச செயலாளர் பிரிவில் அரச காணியில் வசித்துவரும் மக்களுக்கு காணி ஆவணங்களை வழங்குவதற்கான காணிக் கச்சேரி மூதூர் பிரதேச செயலகத்தில் சனிக்கிழமை (22) பிரதேச செயலாளர் எம்.பி.எம்.முபாரக் தலைமையில் நடைபெற்ற போது.

( படம்;தோப்பூர் தினகரன் நிருபர் )

## சீனக்குடாவில் ரயில் மீது கல்வீச்சு; நான்கு சந்தேக நபர்கள் கைது

**(றொட்டவெவ குறூப் நிருபர்)**

திருகோணமலை சீனக்குடா பகுதியில் நேற்றுமுன்தினம் (24) ரயில் மீது கல்வீச்சு தாக்குதல் நடாத்திய குற்றச்சாட்டின் பேரில் நான்கு சந்தேக நபர்களை கைது செய்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

திருகோணமலையிலிருந்து கலாவெவ பகுதிக்கு சென்றுகொண்டிருந்த ரயில் மீது சீனக்குடா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தீவரகம பகுதியில் கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளது.

இதன்போது ரயில் சாரதியின் உதவியாளர் கல் வீச்சுக்கு இலக்காகி காயமடைந்துள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

இதனையடுத்து கல்வீச்சு நடாத்திய சந்தேக நபர்கள் 4 பேரையும் கைது செய்துள்ளதாகவும் இவர்கள் சீனக்குடா, தீவரகம பகுதியைச் சேர்ந்த 17 வயதுடைய இருவரும் 15 வயதுடைய ஒருவரும் பதின்மூன்று வயது உடைய ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 13 வயதுடைய சிறுவனுக்கு ஏற்கனவே நான்கு குற்றச்சாட்டுகள் பதியப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 4 பேரையும் திருகோணமலை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சீனக்குடா பொலிஸார் தெரிவித்தனர்.

## அம்பாறை மாவட்டத்தில் யானைகளால் தொல்லை

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அம்பாறை மாவட்டத்தில் காட்டு யானைகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர். காட்டு யானைகளின் நடமாட்டமுள்ள பிரதேசங்களில் மக்கள் உயிராபத்தை எதிர்கொண்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில் காட்டு யானைகளின் நடமாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கான நிரந்தரத் திட்டம் தொடர்பில் சம்பந்தப்பட்டவர்கள் அவசர கவனம் செலுத்த வேண்டும் எனவும் மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர்.

அம்பாறை மாவட்ட எல்லைக் கிராமங்களில் காட்டு யானைகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளதாகவும், இதனால் பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

காட்டு யானைகளிகளிடமிருந்து தங்களையும், தங்களது தொழில் முயற்சிகளையும் பாதுகாக்குமாறு பொதுமக்களும் விவசாயிகளும் முன்வைத்துவரும் தொடர் கோரிக்கைகள் இதுவரை பயனளிக்கவில்லை எனவும் கவலை தெரிவிக்கப்படுகின்றது.

# ஹெரோயின் போதை பொருளுடன் இருவர் கைது

**கந்தளாய் தினகரன் நிருபர்**

மூதூர் பகுதியில் 90 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடன் இருவரை கைது செய்துள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர். கட்டப்பறிச்சான் மற்றும் தாகா நகர் பகுதியைச் சேர்ந்த 29 மற்றும் 30 வயதுடைய இருவரே கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்கள் இருவரும் ஒருவர் ஐம்பது மில்லிகிராம் போதைப் பொருளுடனும் மற்றொருவர் நாற்பது மில்லிகிராம் போதைப் பொருட்களை தமது உடைமையில் வைத்திருந்த நிலையில் கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேக நபர்களை தடுத்து வைத்துள்ளதோடு மூதூர் நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்த உள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# மழைக்கு முன்னர் வடிகாண்களை துப்புரவு செய்யுமாறு கோரிக்கை

**(அட்டாளைச்சேனை மத்திய நிருபர்)**

அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களிலுள்ள வீதியோர வடிகாண்களை நீரோட்டத்திற்குப் பொருத்தமான முறையில் துப்புரவு செய்யுமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலுள்ள வடிகாண்களின் தற்கால நிலைமை, சுத்தம், பராமரிப்புத் தொடர்பில் பொதுமக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

கிழக்கில் பருவ மழைக்காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் துப்புரவுப் பணிகளை நிறைவு செய்யுமாறும், இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உதவ வேண்டும் எனவும் பொதுமக்கள் வேண்டுகின்றனர்.

சில பிரதேசங்களிலுள்ள வடிகாண்கள் நீரோட்டத்திற்குப்

பொருத்தமில்லாது காட்சியளிக்கின்றன. இதனால் சிறிய மழைக்கும் தாக்குப் பிடிக்காது, நீர் தேங்கும் அபாயம் காணப்படுகின்றது. அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களில், கடந்த வருடங்களில் நடைமுறைப்படுத்தப்பட்ட வடிகாண் துப்புரவின் போது, வெளியேற்றப்பட்ட கழிவுகள் உடனடியாக அப்புறப்படுத்தப்படாது, கவனிப்பாரற்ற நிலையில்

போடப்பட்டதனால் அக்கழிவுகள் மீண்டும் வடிகான்களைச் சென்றடைந்தமை தொடர்பிலும் மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

# ஓட்டமாவடியில் காணி உறுதி வழங்கும் திட்டம் முன்னெடுப்பு





## முதல் கட்டமாக 100 பேருக்கு கையளிப்பு

## இன்னொருவருக்கு கைமாற்ற முடியாது

**கல்குடா தினகரன் நிருபர்**

ஜனாதிபதியின் காணி இல்லாதோருக்கு காணி வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் நீண்ட காலமாக அரச காணிகளை பராமரித்து வந்த மக்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நாடளாவிய ரீதியில் நடைபெற்று வருகின்றது.

இதனடிப்படையில் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் நீண்ட காலமாக அரச காணிகளை பராமரித்து வந்த மக்களுக்கு முதல் கட்டமாக காணி உறுதிப் பத்திரம் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை ஓட்டமாவடி செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் அப்கர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில்,பிரதேச செயலக கணக்காளர் ஐ.எஸ்.சஜ்ஜாத் அஹமட், நிருவாக உத்தியோகத்தர் எஸ்.அப்துல் ஹமீட், செயலக காணிக் கிளை உத்தியோகத்தர்கள், பயனாளிகள் என பலர் கலந்து கொண்டனர்.

காணி இல்லாதோருக்கு காணி அனுமதிப் பத்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் முதல் கட்டமாக நூறு பேருக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்கி வைக்கப்பட்டது.

அரச காணிகளை பராமரித்து வந்த ஏனைய மக்களுக்கும் அனுமதிப் பத்திரத்தினை பெற்றுக் கொடுப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், குறித்த காணிகளை தங்களின் தேவைக்கு மாத்திரம் பயன்படுத்த முடியும், அதனை பயன்படுத்த முடியாத பட்சத்தில் அரசாங்கத்திடம் ஒப்படைக்க முடியுமே தவிர காணியை இன்னொருவருக்கு கைமாற்ற முடியாது என ஓட்டமாவடி பிரதேச செயலாளர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி மன்றங்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் கையளிப்பு



**(ஒலுவில் விசேட நிருபர்)**

கொவிட்19 இலிருந்து பாதுகாப்பு பெறுவதற்காக அம்பாறை மாவட்டத்திலுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கு குளோபல் கொமினிசிட் அரச சார்பற்ற நிறுவனத்தினால் பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்ட செயலகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற நிகழ்வில் மாவட்ட செயலாளர் டி.எம்.எல். பண்டாரநாயக்கவினால் அம்பாறை நகர சபை உட்பட நான்கு உள்ளூராட்சி மன்றங்களுக்கு பாதுகாப்பு உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அம்பாறை நகர சபை, பதியத்தலாவ, தெஹியத்தக்கண்டிய, இறக்காமம், நாவிதன்வெளி ஆகிய பிரதேச சபைகளுக்கு இவ் உபகரணத் தொகுதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

குப்பைத் தொட்டிகள், கை கழுவும் உபகரணத் தொகுதி மற்றும் வெப்பநிலை அளவிடும் கருவி ஆகியன வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

மக்களைப் பாதுகாப்பதற்கு இவ்வாறான பாதுகாப்பு உபகரணங்களை வழங்கியமைக்கு மாவட்ட செயலாளர் டி.எம்.எல். பண்டாரநாயக்க பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந் நிகழ்வில் குளோபல் கொமினிசிட் அரச சார்பற்ற நிறுவனத்தின் பிரதிநிதிகள், உள்ளூராட்சி மன்றங்களின் செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிண்ணியா பிரதேச செயலாளரால் பட்டதாரிகளின் மனு நிராகரிப்பு



**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

கிண்ணியா பிரதேசத்திலுள்ள வெளிநாட்டு பல்கலைகழகத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் நேற்று முன்தினம் (24) மாலை கிண்ணியா பிரதேச செயலாளர் எம் எச்.எம் கனியை சந்தித்து மனு ஒன்றினை வழங்குவதற்காக பிரதேச செயலக வளாகத்தில் ஒன்றுகூடினர்.

இதன் போது வெளி நாட்டுப் பட்டம் பெற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் பிரதேச செயலாளருக்கு வழங்கப்பட்ட மனுவினை பிரதேச செயலாளர் வாங்காமல் நிராகரித்தார்.

அவர் இதுதொடர்பாக தெரிவிக்கையில், வெளிநாட்டு பட்டதாரிகள் நியமனம் தொடர்பாக எந்தவிதமான அறிவுறுத்தல்களும் அரசினால் தமக்கு வழங்கவில்லை என்றும், அந்தக் காரணத்தை அடிப்படையாகக் கொண்டே இதனை எம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு பட்டதாரிகளுக்கு அண்மையில் நியமனம் வழங்கப்பட்டுள்ளதாக இதன்போது பட்டதாரிகள் தெரிவித்தனர்.

மேலும் அவர்கள் கருத்து தெரிவிக்கையில், தாம் செய்த சிறு தொழில்களையும் கைவிட்டுவிட்டு இன்று மனவேதனை அடைவதாகவும் தெரிவித்தனர்.

ஜனாதிபதி மற்றும் பிரதமர் இதற்கான உரிய தீர்வினை பெற்றுக்கொடுக்க வேண்டும் என இதன்போது வெளிநாட்டு பல்கலைக்கழகத்தில் பட்டம் பெற்ற பட்டதாரிகள் கேட்டுக்கொண்டனர்.

# வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

வேலையற்ற பட்டதாரிகளுக்கு தொழில்வாய்ப்பினை உறுதிப்படுத்த அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ் தேசிய கூட்டமைப்பு மட்டு.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதேபோன்று கடந்த ஜனாதிபதி தேர்தல் காலத்தில் இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்ட உதவியாளர் நியமனத்தினை மீள வழங்க நடவடிக்கையெடுக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், இலங்கையில் வேலையற்ற பட்டதாரிகளை அரச நியமனத்திற்குள் உள்வாங்கும் செயற்பாடுகளுக்கு நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். பட்டதாரிகளை பொறுத்தவரையில் வட,கிழக்கில் உள்ள பட்டதாரிகள் கடந்த காலத்தில் பல்வேறு கஷ்டங்களுக்கு மத்தியில் தமது கல்வியை பூர்த்தி செய்து பலகாலமாக தொழில்வாய்ப்புகள் இன்றி பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டவர்களாவர்.



வட, கிழக்கு மாகாணத்தில் உள்ள பெரும்பாலான பட்டதாரிகளைக் கொண்ட குடும்பங்கள் மிகவும் வறுமை நிலையினைக் கொண்டதாக இருக்கின்றது. இந்த நிலையில் பட்டத்தை பூர்த்திசெய்த பின்னர் தமது குடும்ப வறுமையினைப் போக்கும் வகையில் சிலர் நிறுவனங்களில் மிகவும் குறைந்த சம்பளத்தில் தமது தொழில் தகைமைக்கும் குறைவான தொழிலை செய்து தமது குடும்ப நிலையினை ஓரளவு போக்கிவருகின்றனர்.

இவ்வாறான பட்டதாரிகள் அரச நியமனம் வழங்கும் நடைமுறைக்குள் உள்வாங்கப்படாத நிலையில், இவர்களின் குடும்பங்கள் மேலும் வறுமை நிலைக்கே செல்லவேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்படும். எனவே வேலையற்ற பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்படும்போது அனைத்து பட்டதாரிகளுக்கும் நியமனங்களை வழங்குவதற்கான செயற்பாடுகளை அரசாங்கம் முன்னெடுக்க வேண்டும்.

அத்துடன் ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பாக பிரதேச செயலகங்கள் தோறும் நியமிக்கப்பட்டு தேர்தல் நடவடிக்கைகளினால் இடைநிறுத்தப்பட்ட செயற்றிட்ட உதவியாளர்களின் நியமனங்களையும் மீண்டும் வழங்க வேண்டும்.

செயற்றிட்ட உதவியாளர்களாக நியமனம் வழங்கப்பட்டவர்களின் பல குடும்பங்கள் இன்று நிர்க்கதியான நிலையில் உள்ளது. பலர் மிகவும் கஷ்டமான நிலையில் வாழ்கின்றனர். எனவே இவர்களின் நியமனத்தினை மீளவும் வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

# தொற்றுநோய் பாதுகாப்பு அங்கி வழங்கிவைப்பு



**(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)**

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் கீழ் இயங்கும் 21 ஆயுர்வேத வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தொற்று நோய் பாதுகாப்பு அங்கி (Protective Coverall) நேற்று (25) கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான எம்.ஏ.நபீலினால் வழங்கி வைக்கப்பட்டது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் குணசிங்கம் சுகுணனின் அறிவுறுத்தலுக்கு அமைவாகவே இப் பாதுகாப்பு அங்கிகளை கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளரும், நிந்தவூர் மாவட்ட ஆயுர்வேத வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகருமான எம்.ஏ.நபீல் அட்டாளைச்சேனை தள ஆயுர்வேத வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி எம்.பி.எம்.ரஜீஸிடம் வழங்கி வைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் கடமையாற்றும் வைத்தியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்களுக்கு வைத்திய பொறுப்பதிகாரி எம்.பி.எம்.ரஜீஸ் மற்றும் கல்முனை பிராந்திய ஆயுர்வேத இணைப்பாளர் எம்.ஏ.நபீல் ஆகியோரினால் வழங்கி வைக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

# கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் வாகனத் தரிப்பிடம் திறந்து வைப்பு

**பெரியநீலாவணை விசேட நிருபர்**

கல்முனை பிரதேச செயலகத்திற்கும் மாநகர சபைக்குமிடையில் முரண்பாடுகள் ஏற்பட்டிருந்தன, எனினும் இப்போது சுமுகமான நிலையில் உடன்பாட்டோடு பயணிக்கிறோம் என கல்முனை பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர் தெரிவித்தார்.

கல்முனை பிரதேச செயலக வளாகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிடம் நேற்று (25) திறந்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் பிரதான கணக்காளர் எம்.எம்.முஸ்தபா பிரதம அதிதியாக கலந்து கொண்டு நாடாவை வெட்டி வாகனத் தரிப்பிடத்தை திறந்து வைத்தார்.

இங்கு தொடர்ந்து உரையாற்றிய பிரதேச செயலாளர், மிகவும் பழைமை வாய்ந்த இந்த கட்டடம் அமைந்திருக்கும் வளாகத்தில் கல்முனை மாநகர சபை கட்டடம் மற்றும் நகர அபிவிருத்தி திணைக்களத்தின் அலுவலகம் என்பனவும் இயங்கிவருகின்றன.



இட நெருக்கடிகளுக்கு மத்தியில் இயங்கிவரும் இந்த பிரதேச செயலகத்திற்கு வாகன தரிப்பிட வசதி இல்லாமையால் நீண்ட காலமாக அலுவலகத்தில் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்கி வந்தனர். சுமார் 5 இலட்சம் ரூபா செலவில் பல்தேவைகளுக்கும் பயன்படுத்தும் விதத்தில் தற்போது இந்த வாகன தரிப்பிடம் அமைக்கப்பட்டுள்ளது.

# கிழக்கில் 466 பேரை ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்க அனுமதி

## மாகாண கல்விப் பணிப்பாளர் நிஸாம்

**(காரைதீவு குறூப் நிருபர் )**

கிழக்கு மாகாணத்தில் 466 பேரை ஆசிரிய ஆலோசகர்களாக நியமிக்க அரசசேவை ஆணைக்குழு அனுமதி வழங்கியுள்ளது. அதற்கான நடவடிக்கைகள் இடம்பெற்று வருவதாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.எ.நிஸாம் தெரிவித்தார்.

கல்விப் புலத்தில் புதிதாக இலங்கை ஆசிரிய ஆலோசகர் சேவை ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. கிழக்கில் அதன் நடவடிக்கைகள் குறித்து கேட்டபோதே மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் கூறுகையில்:

கல்வியமைச்சினால் உருவாக்கப்பட்டுள்ள புதிய ஆசிரிய ஆலோசகர் சேவைப் பிரமாணக் குறிப்பிற்கமைவாக கிழக்கு மாகாணத்தில் கடமையாற்றும் ஆசிரிய ஆலோசகர்களை புதிய சேவையின் கீழ் கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அனுமதிவழங்கப்பட்ட 466 பேரில் 370 பேர் தமிழ் மொழிமூலமும் 96 பேர் சிங்கள மொழி மூலமும் தெரிவாகவுள்ளனர். அதற்காக கிழக்கிலுள்ள 15 தமிழ், 5, சிங்கள மொழிமூல மொத்தமாக 17, கல்வி வலயங்களிலும் தற்போதுள்ள ஆசிரிய ஆலோசகர்களது தகவல்கள் கோரப்பட்டுள்ளன என்றார்.



# காத்தான்குடியில் சமுர்த்தி மீளாய்வு கூட்டம்

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடி பிரதேச செயலகப்பிரிவில் மேற் கொள்ளப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டத்தின் மாதாந்த முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

காத்தான்குடி பிரதேச செயலாளர் யு.உதயசிறீதர் தலைமையில் இடம் பெற்ற இக் கூட்டத்தில் காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி தலைமையக முகாமையாளர் திருமதி பத்மா ஜெயராஜ் உட்பட சமுர்த்தி முகாமைத்துவப் பணிப்பாளர், திட்ட முகாமையாளர், வலய முகாமையாளர்கள் ,சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இதன் போது காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் தோறும் மேற் கொள்ளப்பட்ட சமுர்த்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றம் குறித்து அப் பிரிவு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு அது தொடர்பாக ஆராயப்பட்டன.

# மோட்டார் சைக்கிள் விபத்து; சீசீடிவியில் தென்பட்ட காட்சி

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான வீதியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கில் விபத்தில் திருக்கோவில் பிரதேச செயலகத்தில் கடமை புரியும் கிராம சேவை உத்தியோகத்தர் படுகாயம் அடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

விபத்து தொடர்பாக தெரியவருவதாவது, திருக்கோவில் பிரதேசத்தில் இருந்து மனைவியை அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலைக்கு கடமைக்காக அழைத்துச் சென்று அவரை அங்கு இறக்கிவிட்டு மீண்டும் வீடு நோக்கி திரும்பிக் கொண்டிருந்த வேளை இவ் விபத்து இடம்பெற்றிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அக்கரைப்பற்று பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர். இவ்விபத்து இடம்பெற்ற காட்சி வீதியின் அருகில் இருந்த சீசீடிவி கமராவில் பதிவாகியுள்ளதுடன், அந்த காட்சியை பார்க்கின்ற போது மனதில் திகில் ஊட்டும் வகையில் அமைந்துள்ளதுடன், சினிமா படங்களில் இடம் பெறும் விபத்து காட்சியைப் போன்று இருந்தது.



# நீண்டகாலமாக புனரமைக்கப்படாமல் இருக்கும் திபட்டன் தோட்ட லயன் குடியிருப்புகள்





**மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்**

ஆர்.பி.கே.பிலான்டேசனுக்கு சொந்தமான மஸ்கெலியா ஹப்புகஸ்தனை, திபட்டன் தோட்ட பிரிவின் கீழ் பகுதியில் காணப்படும் லயன் குடியிருப்புகள் நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

1980 காலப்பகுதியில் திபட்டன் தோட்டபிரிவு மேல் பிரிவு, கீழ் பிரிவு என இரு பகுதிகளாக பிரிக்கப்பட்டு 14 லயன்குடியிருப்புகள் அமைக்கப்பட்டன.

கடந்த ஆண்டு பெய்த கடும் மழை, காற்று காரணமாக கீழ்பிரிவு லயன் குடியிருப்பின் முன்பகுதியில் உள்ள சுவர் சரிந்து வீழ்ந்ததில் இரு வீடுகள் பாதிக்கப்பட்டுள்ளன. இதனால் உடைமைகள் பாதிக்கப்பட்டன. எனினும் தோட்ட நிர்வாகம் கண்டுகொள்ளவில்லையென்பதால் பல குடும்பங்கள் அப்பிரதேசத்தை விட்டு வேறு இடங்களுக்கு இடம் பெயர்ந்தன.

எஞ்சிய குடும்பத்தை சேர்ந்த 17 தொழிலாளர்களும், முதியவர்கள் 3 பேரும், சிறு குழந்தைகள் 8 பேரும் அடங்களாக அந்த குடியிருப்புகளில் வாழ்ந்து வருகின்றனர். கடந்த கால நல்லாட்சியில் இவர்களுக்கு புதிய வீடமைப்பு திட்டங்கள் உருவாக்கப்பட்டு தொழிலாளர்களின் பண செலவில் அடிக்கல் நாட்டப்பட்டது. இருந்த போதும் தற்காலம் வரை கட்டுமாண பணிகள் நடக்கவில்லையென அவர்கள் கூறுகின்றனர்.

இந்த லயன் குடியிருப்பின் மேல் பகுதியில் அடர்ந்த காடு உள்ளது. இதில் சுமார் 500ற்கும் மேற்பட்ட மரங்கள் காணப்படுகின்றன. மழையுடன், காற்று வேகமாக வீசும் காலப்பகுதியில் மரங்கள் சரிந்து விழும் அபாயம் உள்ளதாக மக்கள் சுட்டிக்காட்டுகின்றனர். மேலும் அப்பகுதியில் 200 ஏக்கரில் தேயிலை செடிகள் காணப்படுவதாகவும், அவற்றை முறையாக பாராமரிக்க ஆளணி பற்றாக்குறை நிலவுவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.


நிர்வாகம் முறையாக கிருமிநாசினிகள் உரம் வழங்காமையால் தோட்டங்கள் காடாகி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எதிர்காலத்தில் அப்பகுதியில் மேலும் குடியேற்றங்கள் இடம் பெறலாம் என அத்தோட்ட மக்கள் தெரிவிக்கின்றனர். தோட்ட பிரிவில் கடந்த 20 வருடங்களுக்கு முன்னர் வேல்விசன் நிறுவனத்தால் குழந்தைகள் காப்பகம் ஒன்று பாரிய நிதியினை ஒதுக்கி அமைத்து கொடுத்ததுடன் அதற்கான மின்சாரம், விளையாட்டு உபகரணங்கள் என்பவற்றையும் பெற்றுக்கொடுத்தது.

எனினும் அதை பராமரிக்க பொறுப்பான ஒருவரை நியமிக்காததால் தற்போது அவை பற்றை காடாகி வருகின்றது.

மேலும் காட்டு மிருகங்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளதால், இரவு நேரங்களில் யாரும் வெளியில் செல்வது கிடையாது என தெரிவிக்கின்றனர்.

## இரத்தினபுரி - கொழும்பு வீதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது



**காவத்தை தினகரன் விசேட நிருபர்**

இரத்தினபுரி கொழும்பு பிரதான வீதி பாலம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதன் காரணமாக நேற்று (25) முதல் மேற்படி வீதி மறு அறிவித்தல் வரை மூடப்பட்டுள்ளது.

இது சம்பந்தமான முழு விபரம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளேன்.

## கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கு பயிற்சிகள்

இலங்கை கரப்பந்தாட்ட சம்மேளனத்தின் ஊடாக கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களுக்கான பயிற்றுவிப்பு நுவரெலியா மாவட்டத்தில் எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ளது.

தேசிய மட்டத்தில் இடம்பெறும் இப்பயிற்றுவிப்புக்கு, நுவரெலியா மாவட்டத்திலுள்ள அனைத்து கரப்பந்தாட்ட பயிற்றுவிப்பாளர்களும் நுவரெலியா மாவட்டத்திலுள்ள பாடசாலை மட்டத்திலுள்ள ஆசிரியர்களும் உள்வாங்கப்படவுள்ளனர்.

இந்நிலையில், இதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. தகுதியுடையவர்கள், திரு.யு.தங்கவேல், நுவரெலியா மாவட்ட கரப்பந்தாட்ட இணைப்பாளர், 164, பிரதான வீதி, மஸ்கெலியா எனும் முகவரிக்கு, விண்ணப்பங்களை சமர்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

இல்லையேல், 0770678536/0716069093 எனும் அலைபேசியின் ஊடாக விவரங்களைத் தெரிந்து கொள்ளுமாறும் கோரப்பட்டுள்ளது.

இந்நிகழ்வுக்கு குறிப்பிட்ட சிலரே சேர்த்துக்கொளளப்படவிருப்பதால் விரைவில் பதிவுகளை மேற்கொள்ளுமாறும் நுவரெலியா மாவட்ட சம்மேளன இணைப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

# 13ஆவது திருத்தச்சட்டத்தை நீக்குவதை ஏற்றுக்கொள்ளமுடியாது



**(ஹற்றன் சுழற்சி நிருபர்)**

அரசியலமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டம் நீக்கப்பட வேண்டும் என்ற ஆளுங்கட்சி உறுப்பினர்களின் கருத்தை ஏற்கமுடியாது. 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும் என பாராளுமன்ற உறுப்பினர் வே. இராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

நுவரெலியாவில் நேற்று மதியம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

" இலங்கை, இந்தியா ஆகிய இரு நாடுகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையிலேயே மாகாணசபை முறைமையை உருவாக்குவதற்காக 13ஆவது திருத்தச்சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. எனவே, இதுவிடயத்தில் இலங்கையில் தன்னிச்சையாக செயற்படமுடியாது. குறிப்பாக இந்தியாவை பகைத்துக் கொண்டு இதனைநீக்கினால் நெருக்கடிகள் ஏற்படக்கூடும்.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாக இருக்கும்போது 13 பிளஸ் எனக்கூறினார். இன்றுகூட அவரோ அல்லது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவோ 13 ஐ நீக்குவது தொடர்பில் கருத்து வெளியிடவில்லை. தமது வாக்கு வங்கியை அதிகரித்துக்கொள்வதற்காகவே 13 நீக்கப்படவேண்டும் என சிலர் வலியுறுத்திவருகின்றனர். இதற்கு நாம் இடமளிக்கமாட்டோம். வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல நாட்டில் ஏனைய 7 மாகாணங்களிலும் மாகாண சபைகள் இயங்கின. முதல்வர்கள் தெரிவானார்கள். எனவே, மாகாணசபை முறைமையை பலப்படுத்தவேண்டுமே தவிர அதனை பலவீனப்படுத்தக்கூடாது. எவ்வித அதிகார குறைப்பும் இன்றி 13 முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் நிலைப்பாடாகும்.

தமிழ் முற்போக்கு கூட்டணியில் மூன்று கட்சிகள் அங்கம் வகிக்கின்றன. இம்மூன்று கட்சிகளும் இணைந்து பயணித்தாலேயே எமக்கான பிரதிநிதித்துவத்தை பாதுகாத்துக்கொள்ளக்கூடியதாக இருந்தது எனவே, வடக்கு, கிழக்கிலுள்ள தமிழ் கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும்." என்றார்.

# அலவத்துகொடையில் புதிய வீடமைப்பு திட்டங்கள்



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் (சௌபாக்கிய தெக்ம) 'செழிப்பின் பார்வை' வேலைத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் 'உங்களுக்கு ஒரு வீடு, நாட்டுக்கு நாளை' என்ற வீடமைப்பு திட்டத்தின் கீழ் அலவத்துகொடை பலகடுவ பகுதியில் வசதி குறைந்த குடும்பமொன்று வீடு ஒன்று அமைப்பதற்காக அடிக்கல் நாட்டப்பட்டது.

கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திலக் ராஜபக்ஷ, அக்குறணை பிரதேசபைத் தலைவர் இஸ்திஹார் இமாதுதீன் மற்றும் அக்குறணை பிரதேச சபை உறுப்பினர் அமரஜீவ ஆகியோர் இதில் அதிதிகளாகக் கலந்து அடிக்கல் நாட்டி வைத்தனர். அக்குறணை பிரதேச சபையின் தலைவர் இதற்கான நிதி உதவியை வழங்கியுள்ளார். அக்குறணை பிரதேச செயலாளர் அபேசிங்க, வீட்டுவசதி மேம்பாட்டு அதிகார சபை முகாமையாளர் தென்னகோன் உட்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

# மாத்தளை மா நகர சபை உறுப்பினர்களுக்கு இடையில் முறுகல்; அபிவிருத்தி பணிகள் ஸ்தம்பிதம்

**உக்குவளை விசேட நிருபர்**

மாத்தளை நகர சபை மாநகர முதல்வர், மாநகர ஆணையாளர் மற்றும் ஒரு சில மாநகர சபை உறுப்பினர்களுக்கிடையில் நீண்டகாலமாக இடம்பெற்றுவரும் முறுகல் நிலைக்காரணமாக மாநகரஎல்லைக்குள் அபிவிருத்தி பணிகள் இடம் பெறாமல் தடைப்பட்டுள்ளதோடு 2020 ஆண்டுக்கான மாத்தளை மாநகரசபையின் அபிவிருத்தி பணிகளுக்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதி இதுவரை எந்தவிதமான அபிவிருத்திபணிகளுக்கும் செலவுசெய்யப்படாது நிதி பிரிவில் தேங்கி கிடக்கின்றது.

மாத்தளை மாநகர சபை நிருவாகம் ஆரம்பிக்கப்பட்டு சுமார் மூன்று ஆண்டுக்காலம் நிறைவு பெற உள்ள நிலையில் மாத்தளை மாநகரசபையின் மாநகர முதல்வர்,மாநகரஆணையாளர் மாநகர சபை உறுப்பினர்கள் சிலரின் முறுகல் நிலை காரணமாக மாநகரவரி இருப்பாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் தேவைகள் எதுவும் நிறைவேற்றப்படமுடியாத நிலையில் இருப்பதாக குடியிருப்பாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களுக்கிடையில் இருக்கும் முறுகல் நிலையை நிவர்த்தி செய்து தேவையான அபிவிருத்தி பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கும் படி மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேவின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. அதனைதொடர்ந்து மாத்தளை மாநகர சபையுடன் தொடர்புடையவர்களை அழைத்து நேரடி விசாரணைகளை மேற்கொண்ட போதும் இதுவரை எந்தவிதமான தீர்வுகளும் காணப்படாத நிலையில் மாத்தளை மாநகர சபை நிர்வாகம் மந்தநிலையில் இயங்குவதை அவதானிக்க முடிகிறது.

எனவே, இவர்களுக்கிடையிலான முறுகல் நிலையிலிருந்து மாத்தளை மாநகரசபையை மீட்டெடுத்து மாநகரவரியிருப்பாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களின் தேவைகளை நிவர்த்தி செய்து 2020 க்கான நிதியை மாநகரசபையில் தேங்கவிடாமல் உடனடியாக அபிவிருத்தி பணிகளில் துரிதப்படுத்திட மாகாண ஆளுனர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டுமெனவும் மாநகரமக்கள் வேண்டுக்கோள் விடுக்கின்றனர்.



கண்டி தமிழ் அதிபர் சங்கத்தின் அனுசரணையுடன் அண்மையில் ஓய்வு பெற்ற அதிபர்களை பாராட்டி விருது வழங்கும் நிகழ்வு கண்டி விவேகனந்தா பாடசலையில் நடை பெற்ற போது எடுக்கப்பட்ட படம். (படம் : ஹேவாஹெட்ட தினகரன் நிருபர்)

# மாத்தளை மாவட்டத்தில் வெங்காயச் செய்கை வீழ்ச்சி

மாத்தளை மாவட்டத்தில், இம்முறை பெரிய வெங்காயச் செய்கை வீழ்ச்சியடைந்துள்ளதாக, மாவட்ட விவசாயக் குழுக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாரத்தளை மாவட்டத்தில் இந்த ஆண்டு பெரும்போகத்தில், 828 ஹெக்டெயர் நிலப்பரப்பிலேயே, பெரிய வெங்காயச் செய்கை பண்ணப்பட்டுள்ளதாகச்சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பெரிய வெங்காயச் செய்கையானது, 2,396 ஹெக்டெயர் நிலப்பரப்பில் செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட போதும் மழை காரணமாக செய்கையில் வீழ்ச்சி ஏற்பட்டதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பெரிய வெங்காயத்தின் தேசிய தேவைக்கு மாத்தளை மாவட்டம் அதிகம் பங்களிப்பு செய்துள்ள நிலையில், சில வருடங்களாக இங்கு பெரிய வெங்காயத்தின் செய்கை வீழ்ச்சியடைந்து வருவதாக விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். மாகாண மற்றும் மத்திய அரசாங்கத்தின் விவசாய திணைக்களத்தின் பல்வேறு நிறுவனங்கள் ஊடாக பெரிய வெங்காய உற்பத்தியை ஊக்குவிப்பதற்காக வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டாலும் அதன் பலனை மக்கள் பெறமுடியாதுள்ளதாக விவசாய அமைப்புகளின் பிரதானிகள் தெரிவித்துள்ளனர்.

## நிழல் ஓவியம் புகைப்பட கண்காட்சி

**பசறை நிருபர்**

புகைப்படங்களின் கண்காட்சி " நிழல் ஓவியம்" என்ற தொனிப் பொருளில் எதிர்வரும் 29ஆம் திகதி சனிக்கிழமை நடைபெறவுள்ளதாக ஊவா சக்தி பவுண்டேஷன் அமைப்பின் தலைவர் சுரேஷ் நடேசன் தெரிவித்தார்.

மு.ப.8.30 மணி தொடக்கம் மாலை 5.30 மணிவரை பண்டாரவளை கல்வி வலயத்தில் அமைந்துள்ள ஊவா ஹைலண்ட்ஸ் தமிழ் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது. புகைப்படக் கலையில் பயிற்சியை முடித்துக்கொண்ட நாற்பது மலையக இளைஞர், யுவதிகளினால் பதிவு செய்யப்பட்ட ஓவியங்கள் இதில் காட்சிப்படுத்தப்படவுள்ளது.

மலையக இளைஞர், யுவதிகளின் புகைப்பட கலை ஆர்வத்தை தூண்டும் வகையில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள இரண்டாவது கண்காட்சி இதுவாகும். இக் கண்காட்சிக்கு மாற்று கொள்கை நிலையம், ஊவா சக்தி பவுண்டேஷன் மற்றும் ஜி.டீ.இஸட் என்பவை அனுசரணை வழங்குகின்றன.

## புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கற்குவாரிக்கு பொதுமக்கள் எதிர்ப்பு

பலாங்கொடை பின்னவல அமுபிட்டிய எனும் இடத்தில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள கற்குவாரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரதேச மக்கள் அண்மையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கற்குவாரிக்கு சுற்றாடல் அதிகார சபை அதிகாரிகள் களப்பரிசோதனை மேற்கொள்வதற்காக விஜயம் மேற்கொண்டபோது, அங்கு கூடியிருந்த பிரதேச மக்கள் அதற்கான அனுமதியை வழங்க வேண்டாம் என்று தெரிவித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்களின் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட அதிகாரிகள், பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தும் எந்தச் செயற்பாட்டையும் முன்னெடுக்கப்போவதில்லை என்று தெரிவித்தனர்.



ஐக்கிய மக்கள் சக்தியின் நுவரெலியா, பதுளை, கண்டி, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் தமிழ் முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிட்டு வெற்றிப்பெற்றவர்களுக்கான வரவேற்பு நிகழ்வு அண்மையில் ஹற்றன் நகரில் நடைபெற்ற போது எடுக்கப்பட்ட படங்கள்.

## குடிநீர் வசதியின்மையால் 150 குடும்பங்கள் பாதிப்பு

**( பலாங்கொடை தினகரன் நிருபர்)**

கஹவத்தை ஒபாத இரண்டாம் பிரிவு தோட்டப் பகுதியில் வசிக்கும் 150 குடும்பங்கள் குடிநீர் வசதியின்மையால் பல்வேறு இன்னல்களை எதிர்நோக்கிவருகின்றனர்.

இப்பகுதியில் நீரினை சேகரித்து வைத்து அமைக்கப்பட்ட இரண்டு நீர்த்தாங்கிகளும் பழுதடைந்துள்ளதாக பொதுமக்கள் சுட்டிக்காட்டினர்.

கொடக்கவெல பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட இப் பிரதேசத்தில் உள்ள நீர் ஊற்றினால் நீரினை பெற்றுக்கொள்ள சுமார் இரண்டு , மூன்று கிலோமீட்டர் தூரம் நடந்து செல்ல வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது.

ஒபாத இரண்டாம் இலக்க பிரிவில் அமைந்துள்ள தமிழ் பாடசாலையில் சுமார் 49 மாணவ மாணவிகள் கல்விகற்று வருகின்றனர். அவர்களுக்கு தேவையான குடிநீரை பெற்றுக்கொள்ள நீரூற்றை தேடி 200 மீற்றர் தூரம் பயணிக்க வேண்டிய நிலைமை உருவாகியுள்ளது. அதேசமயம் கிராம மக்களும், பாடசாலை மாணவர்களும் இந்த நீரூற்றின் அருகில் குடிநீரைப் பெறுவதற்காக வரிசையில் நிற்க வேண்டிய நிலை உருவாகியுள்ளது.

இந்த நீரூற்று சாக்கடை வழியாக ஓடுவதால் சுத்தமான தன்மை குறைவாக உள்ளதாகவும் இதற்கு மாற்று வழியாக நீரினை சேகரிக்கும் நீர்த்தாங்கியினை புனரமைத்து தருமாறு கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த நீரூற்றின் மூலம் தேவையான நீர் குழாய்களைப் பொருத்தி பாடசாலைக்கும் கிராமத்திற்கும் நீரினைப் பெற்றுத் தருமாறும் மக்கள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

# திரையரங்குகள் மூடி 150 நாட்கள்; திறக்க வாய்ப்பில்லை

## அமைச்சர் கடம்பூர் ராஜூ

கொரோனா வைரஸ் தொற்று பாதிப்பு காரணமாக இந்தியா முழுவதும் சில தளர்வுகளுடன் பொது முடக்கம் அமலில் உள்ளது. படப்பிடிப்புகள் எதுவும் நடைபெறாத நிலையில், சினிமாவை நம்பியுள்ள தொழிலாளா்கள் மிகவும் நெருக்கடிக்குள்ளாகியுள்ளனர். திரையரங்குகளும் இயங்காததால் படங்கள் வெளியாவதிலும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. கொரோனா அச்சுறுத்தல் மற்றும் ஊரடங்கு உத்தரவால் திரையரங்குகளில் படங்கள் வெளியாவது குறித்து தெளிவான நிலை இல்லாததால் நேரடியாக ஓடிடி தளங்களில் படங்களை வெளியிடத் தயாரிப்பாளர்கள் முயன்று வருகிறார்கள்.

கடந்த 4 மாதங்களாக ஊரடங்கு உத்தரவால் அதிக இழப்புகளைச் சந்தித்துள்ளார்கள் திரையரங்கு உரிமையாளர்கள். எனவே, கொரோனா ஊரடங்குத் தளர்வில் திரையரங்குகளை உரிய விதிமுறைகளுடன் இயங்க அனுமதிக்க வேண்டும் என்று திரையரங்கு உரிமையாளர்கள் அரசிடம் கோரிக்கை வைத்தார்கள். நாள்தோறும் குறைந்தபட்சம் 2 காட்சிகளுக்காவது அனுமதியளிக்க வேண்டும் என்பது அவர்களுடைய கோரிக்கையாக இருந்தது.

ஆகஸ்ட் 1 முதல் திரையரங்குகள் மீண்டும் இயங்க வாய்ப்புள்ளதாகத் தகவல்கள் வெளியானதால் அரசின் அறிவிப்பைத் திரையரங்கு உரிமையாளர்கள் ஆவலுடன் எதிர்பார்த்தார்கள்.

ஆ னால் தமிழகத்தில் ஆகஸ்ட் 31 வரை பொதுமுடக்கம் நீடிக்கப்படுவதாக முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி அறிவித்தார். திரையரங்குகள் இயங்க அனுமதி இல்லை எனத் தமிழக அரசு தெரிவித்தது. இதனால் தமிழ்த் திரையுலகம் ஏமாற்றமடைந்தது.

திரைப்படம், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கான படப்பிடிப்புகளை பல்வேறு கட்டுப்பாடுகளுடன் மீண்டும் தொடங்க மத்திய அரசு சமீபத்தில் அனுமதி அளித்துள்ளது. சமூக இடைவெளியைப் பின்பற்றுதல், கேமரா முன் நிற்கும் நடிகர்கள் தவிர மற்றவர்கள் முகக் கவசம் அணிய வேண்டும் உள்ளிட்ட வழிகாட்டு நடைமுறைகள் அதில் இடம்பெற்றுள்ளன.

தமிழ்நாட்டில் திரையரங்குகள் மூடி இன்றுடன் 150 நாள்களுக்கு மேல் ஆகின்றன. இதனால் திரையரங்குகளைத் திறக்க வேண்டும் எனத் திரையுலகினர் சமூக வலைத்தளங்கள் வழியாக மீண்டும் கோரிக்கை வைத்துள்ளார்கள். இந்நிலையில் தமிழ்நாட்டில் திரையரங்குகளைத் திறக்க தற்போதைக்கு வாய்ப்பில்லை என்று அமைச்சர் கடம்பூர் ராஜூ பேட்டியளித்துள்ளார். அவர் கூறியதாவது:

மக்கள் அதிகளவில் கூடுவார்கள் என்பதால் தமிழகத்தில் திரையரங்குகளைத் திறக்க தற்போது வாய்ப்பில்லை. கொரோனா குறைந்து இயல்பு நிலை திரும்பிய பிறகே திரையரங்குகளைத் திறக்க வாய்ப்புள்ளது என்று கூறியுள்ளார்.

# தே.மு.தி.க தலைவர் விஜயகாந்துக்கு நேற்று 69 ஆவது பிறந்த நாள்

தேசிய முற்போக்கு திராவிட கழகம் கட்சியின் தலைவரும், நடிகருமான விஜயகாந்த் நேற்று 69 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். அதையொட்டி கட்சியினர் மக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்.

அதிமுக சார்பில் மாநிலங்களவை சீட் கிடைக்காதது வருத்தமளிக்கிறதா என்ற நிருபர்களின் கேள்விக்கு தேமுதிக பொருளாளர் பிரேமலதா பதில் அளித்தார்.

அப்போது அவர் கூறியதாவது:

சட்டசபை தேர்தலில் தேமுதிக கூட்டணியா, தனித்துப் போட்டியா என்பதை விஜயகாந்த் அறிவிப்பார். இப்போதைக்கு அதிமுக உடனான கூட்டணி தொடர்கிறது. தேர்தலின்போது முடிவு எடுக்கப்படும். தேர்தல் நெருங்கும்போது செயற்குழு, பொதுக்குழு கூட்டி முடிவெடுக்கப்படும். தேமுதிகவிற்கு கிடைக்க வேண்டியது உரிய நேரத்தில் கிடைக்கும்.

விஜயகாந்த் இனி கிங் ஆக இருக்கவேண்டும் என்பதே தேமுதிக தொண்டர்களின் எண்ணம். தேமுதிக தனித்துப் போட்டியிட வேண்டும் என்பதே தொண்டர்கள், நிர்வாகிகள் எண்ணமாக உள்ளது. டிசம்பர், ஜனவரியில் பொதுக்குழு, செயற்குழு கூட்டி முடிவெடுக்கப்படும் என்று தேமுதிக பொருளாளர் பிரேமலதா விஜயகாந்த் கூறினார்.

# இந்தியாவில் 3.5 கோடி பேருக்கு PCR பரிசோதனை

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்றின் தாக்கம் அதிகரித்த வண்ணம் உள்ளது. இதனால் கொரோனா பரிசோதனை அதிகரிக்கப்படுத்தப்பட்டுள்ளது.

நாள் ஒன்றுக்கு 8 இலட்சம் வரை பரிசோதனை செய்யப்படுகிறது. இந்நிலையில் நேற்றுக் காலை 3.5 கோடி பேருக்கு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. கொரோனா வைரஸுக்கு தடுப்பூசி கண்டுபிடிக்கப்படாததால் சமூக இடைவெளி, முகக் கவசம் அணிதல், பரிசோதனையை அதிகரித்து நோய் தாக்கியவர்களை உடனடியாக கண்டுபிடித்து தனிமைப்படுத்தி மற்றவர்களுக்கு பரவாமல் தடுப்பது சிறந்த வழியாக கருதப்படுகிறது.

# தொடர்மாடி இடிந்து விழுந்ததில் 19 மணி நேரத்துக்கு பின் சிறுவன் உயிரோடு மீட்பு

மகாராஷ்டிர மாநிலம் ராய்கட் மாவட்டத்தில் உள்ள காஜல்புரா என்னுமிடத்தில் 5 மாடி குடியிருப்பு கட்டடம் இடிந்து விழுந்த சம்பவத்தில், 19 மணி நேரத்துக்குப் பின் 4 வயது சிறுவன் ஒருவன் உயிரோடு மீட்கப்பட்டுள்ளான்.

உடனடியாக சிறுவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளான். சிறுவனின் பெயர் மொஹம்மது என்று தெரிய வந்துள்ளது.

மேலும், இந்த கட்டட விபத்தில் சிக்கி பலியானோர் எண்ணிக்கை 4 ஆக உயர்ந்துள்ளது. கட்டட இடிபாடுகளில் சிக்கி 30 வயது பெண்ணின் உடல் மீட்கப்பட்டதை அடுத்து பலி உயர்ந்துள்ளது. இந்த கட்டட விபத்தில் பலர் படுகாயம் அடைந்தனர்.

சுமார் பத்தாண்டுகள் பழைமை வாய்ந்த கட்டடத்தில் 45 குடியிருப்புகள்





இருந்தன. இக்கட்டடம் திங்கட்கிழமை மாலை திடீரென இடிந்து விழுந்தது. இடிபாடுகளுக்கு இடையில் 70 பேர் சிக்கினர். அவர்களை மீட்கும் பணியை மாநில பேரிடர் மீட்புக் குழுவினர் மேற்கொண்டனர்.

இடிபாடுகளில் சிக்கிய ஒருவரின் சடலம் நேற்று இரவு மீட்கப்பட்டது.

நேற்றுக் காலை மேலும் மூன்று பேரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மேலும் 25 பேர் காயங்களுடன் மீட்கப்பட்டனர். சுமார் 50 பேர் இடிபாடுகளில் சிக்கியிருக்கலாம் என்று கூறப்படுகிறது. மோப்ப நாய்களின் உதவியுடன் மீட்புப் பணி தொடர்ந்து நீடிக்கிறது.

# உயர்சாதியினர் தோட்டத்தில் பூக்களைப் பறித்த சிறுமியின் குடும்பத்தை தள்ளிவைத்த தீண்டாமை

## ஒடிசா மாநிலத்தில் தொடரும் அவலம்

ஒடிசா மாநிலத்தில் உயர்சாதியினர் தோட்டத்தில் பூக்களைப் பறித்த தலித் சிறுமியின் செயலுக்கு ஒட்டுமொத்த தலித் குடும்பத்தினரை ஒத்திவைத்த தீண்டாமை கொடூரம் அரங்கேறியுள்ளது.


இந்தியாவில் தலித் மக்களுக்கு எதிராக தொடரும் சாதிக் கொடுமைக்கு மேலும் ஆதாரமாக சமீபத்திய நிகழ்வு ஒடிசா மாநிலத்தில் நடந்துள்ளது. ஒடிசாவில் தெங்கனல் மாவட்டத்தின் கான்டியோ கட்டேனி கிராமத்தில் தலித் சமூகத்தைச் சேர்ந்த சுமார் 40 குடும்பங்கள் வசித்து வருகின்றன. இந்நிலையில் தலித் சமூகத்தைச் சேர்ந்த சிறுமி ஒருவர் இரண்டு மாதங்களுக்கு முன்பு உயர்சாதியினரின் தோட்டத்தில் மலர்ந்த பூக்களைப் பறித்ததாக தெரிகிறது.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்த உயர்சாதியினர் அந்த சிறுமியையும் அவரது பெற்றோர்களையும் மன்னிப்பு கேட்க வைத்து நிர்ப்பந்தித்துள்ளனர். சிறுமியின் பெற்றோரும் கிராம பஞ்சாயத்திடம் மன்னிப்பு கேட்டு கெஞ்சியுள்ளனர். இருந்தும் உயர்சாதியினர் அவர்களுக்கு தண்டனையாக, தலித் குடும்பங்கள் கிராம சடங்குகளில் பங்கேற்க தடை விதித்துள்ளனர். மேலும் கிராமத்தில் தலித் குடும்பத்தினர் யாருடனும் பேச அனுமதி மறுத்தும், அரசு ரேஷன் கடைகளில் இருந்து பொருட்களை வாங்கவும் தடை விதிக்கப்பட்டது.

இது குறித்து தலித் சமூகத்தினர் காவல் நிலையத்தில் புகார் தெரிவித்ததையடுத்து காவல்துறையினர் இரு தரப்பினரையும் அழைத்து சமரசம் செய்து வைத்தனர்.

# ஊரடங்கில் படமாக்கப்பட்ட பஹத் பாசில் படம்

## டிரெய்லர் வெளியீடு




பஹத் பாசில், ரோஷன் மேத்யூ, தர்ஷனா ராஜேந்திரன் நடிப்பில் மகேஷ் நாராயணன் இயக்கியுள்ள படம் சி யூ சூன். ஊரடங்குக் காலத்தில் செல்போன் மூலமாகப் படமாக்கப்பட்ட இப்படத்தின் டிரெய்லரை நடிகர் கமல் ஹாசன் ட்விட்டரில் வெளியிட்டுள்ளார். அமேசான் பிரைம் ஓடிடி தளத்தில் செப்டம்பர் முதலாம் திகதி வெளியாகவுள்ளது.

இதற்கு முன்பு பஹத் பாசிலும் மகேஷ் நாராயணனும் டேக் ஆஃப் படத்தில் இணைந்து பணியாற்றினார்கள்.


உள்ளக பாதுகாப்பு, உள்நாட்டலுவல்கள் மற்றும் அனர்த்த முகாமைத்துவ இராஜாங்க அமைச்சு

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்**

**விலைகூறல்களுக்கான அழைப்பு**

**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்திற்கு சுத்தம் செய்வதற்கும், துப்புரவு செய்வதற்குமான சேவைகளை வழங்குதல்**

**ஒப்பந்த இல.: DIE/PRO/08/2020/21**

1. குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கீழ்க் காட்டப்பட்ட அலுவலகங்களுக்கு சுத்தம் செய்வதற்கும், துப்புரவு செய்வதற்குமான சேவைகளை வழங்குவதற்காக, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் சார்பில் திணைக்களத்தின் கொள்முதல் குழுத் தலைவரினால், தகைமையுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைகூறல்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

2.

| | |
|---|---|
| 1. | பிரதான அலுவலகம், ‘‘சுகுறுபாயா’’, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை. |
| 2. | மாத்தறை பிராந்திய அலுவலகம். |
| 3. | கண்டி பிராந்திய அலுவலகம். |
| 4. | வவுனியா பிராந்திய அலுவலகம். |
| 5. | குருணாகல் பிராந்திய அலுவலகம். |
| 6. | திருகோணமலை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 7. | கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 8. | ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 9. | யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 10. | மத்தலை சர்வதேச விமான நிலையத்தின் உத்தியோகத்தர் ஓய்வறை. |
| 11. | மிரிஹான தடுப்பு முகாம். |
| 12. | கொழும்புத் துறைமுக அலுவலகம். |
| 13. | காலி துறைமுக அலுவலகம். |

3. தேசிய போட்டி ரீதியிலான விலைகூறல் நடைமுறையின் கீழ் இந்த விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

4. இதில் ஆர்வமுள்ள விலைகூறுவோர்களுக்கு, இது தொடர்பான மேலதிக விபரங்களை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ‘‘சுகுறுபாயா’’, 5 ஆம் மாடி, ‘‘B’’ பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், விலைகூறல் ஆவணங்களை அதே முகவரியில் வைத்து வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை பரீட்சிக்கலாம்.

   தொடர்புகளுக்கு: தொலைபேசி இல.: 011 – 5359530 தொலைநகல்: 011 - 2885358

5. மீளளிக்கப்படாத ரூபா ஐயாயிரத்து ஐந்நூறு (ரூ. 5,500/-) கட்டணத்தைச் செலுத்தி, எழுத்துமூல விண்ணப்பமொன்றை, பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ‘‘சுகுறுபாயா’’, 5 ஆம் மாடி, ‘‘B’’ பகுதியில் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின் கொள்முதல் பிரிவின் உதவிக் கட்டுப்பாட்டாளர் (கொள்முதல்) அவர்களிடம் சமர்ப்பிப்பதன் மூலம், 2020.08.26 ஆம் திகதி தொடக்கம் 2020.09.16 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மணி தொடக்கம் பி.ப. 3.00 மணி வரை, அச்சிடப்பட்ட முழுமையான விலைகூறல் ஆவணத் தொகுதியொன்றைப் பெற்றுக் கொள்ளலாம்.

6. ‘‘மூலப் பிரதி’’ (Original) ‘‘இணைப் பிரதி’’ (Duplicate) என்றவாறு 2 பிரதிகளில் தயாரித்து பூர்த்தி செய்யப்பட்ட விலைகூறல்களை, 2020.09.16 ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, தலைவர், திணைக்களக் கொள்முதல் குழு, குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம் 5 ஆம் மாடி, ‘‘B’’ பகுதி, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் அல்லது நேரில் வந்து ஒப்படைக்கப்படுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைகூறல்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும்.

7. விலைகூறல்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 105 நாட்களுக்கு அல்லது ஏதேனுமொரு நீடிக்கப்பட்ட காலப்பகுதிக்கு விலைகூறல்கள் செல்லுபடியானதாக இருத்தல் வேண்டும்.

8. எல்லா விலைமனுக்களும், விலைமனுக்கோரல் ஆவணத்தில் பந்தி 3.4 இல் காட்டப்பட்ட மாதிரிக்கு அமைய, விலைமனு பிணைமுறியொன்றுடன், குடிவரவு, குடியகல்வு கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் பெயரில் அனுப்பப்படல் வேண்டும் என்பதுடன், விலைமனு பிணைமுறியானது ரூபா நான்கு இலட்சம் (ரூ. 400,000/-) பெறுமதியைக் கொண்டதும், 2020.12.28 ஆம் திகதி வரை செல்லுபடியானதுமான, இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் இயங்குகின்ற வர்த்தக வங்கியொன்றால் விநியோகிக்கப்பட்டதுமாக இருத்தல் வேண்டும்.

9. விலைமனு முன் சந்திப்பொன்று 2020.09.09 ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு பத்தரமுல்லை, ஸ்ரீ சுபூத்திபுர வீதி, ‘‘சுகுறுபாயா’’, 5 ஆம் மாடி, பகுதி ‘‘A’’ இல் அமைந்துள்ள குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தின், கட்டுப்பாட்டாளர் நாயகத்தின் அலுவலகத்தில் நடைபெறும்.

**யூ.வீ. சரத் ரூப்பசிறி**
**கட்டுப்பாட்டாளர் நாயகம்**
**குடிவரவு, குடியகல்வுத் திணைக்களம்,**
**“சுகுறுபாயா”,**
**ஸ்ரீ சுபூத்திபுர வீதி, பத்தரமுல்லை.**

# நீர்வழங்கல் அமைச்சு – தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை

# விலைக்கோரல் அறிவித்தல்

**பின்வரும் வேலைகள் / வழங்கல்களுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச்சபை சார்பில் பெறுகைக் குழுத்தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.**

| ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் ஒப்பந்த இலக்கம் | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தேவையான விலை மனு பிணை | தேவையான தகைமை | VAT உட்பட மதிப்பிடப்படும் செலவு (ரூபா) | தொடர்புகொள்ள வேண்டிய நபர் மற்றும் ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | இறுதித் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|---|
| **சிவில் கேள்விகள்** | | | | | | |
| 01) திக்குவளை அலுவலக வளவில் எல்லைச் சுவரை நிர்மாணித்தல் மற்றும் அக்குரஸ்ஸ WTP ஹில்டொப் நீர்த்தாங்கிக்கு தொடர்வேலியை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/C/ MATHARA,AKURESSA,D'WELLA/ RH/2020-63** | 4,000/-+VAT | ரூபா 69,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C9 மற்றும் C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு | 4.61 மில்லியன் | பி.ஒ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 16/09/2020 பி.ப. 2.00 மணி |
| 02) தங்காலை நீர் வழங்கல் திட்டத்தின் நலகம நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கான புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/C/RENOVATION/ TANGALLE/WTP/RH/2020/08** | 2,000/-+VAT | ரூபா 29,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C9 மற்றும் C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு | 1.91 மில்லியன் | பி.ஒ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 16/09/2020 பி.ப. 2.00 மணி |
| 03) அம்பலாந்தோட்ட நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் யுனிஹா பொதித்தொகுதிக்கான பில்டர் மீடியாவை சுத்திகரித்தல் மற்றும் பிரதியீடு செய்தல்<br>ஒப்பந்த இல. RSC(S)/P&C/C/FILTER MEDIA/AMBALANTOTA/RECHARGEABLE/2020-62 | 2,000/-+VAT | ரூபா 25,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C8 மற்றும் C9 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் தகைமை வாய்ந்த filter media வழங்கும் வழங்குநர்கள் மற்றும் filter media ஈடு செய்தலில் இரண்டு வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். | 1.46 மில்லியன் | பி.ஒ.நி. (தெற்கு), 395, குமாரதுங்க முனிதாச மாவத்தை, பம்புரன, மாத்தறை.<br>Tele:041-2229792 Fax 041-2224769 | 16/09/2020 பி.ப. 2.00 மணி |
| 04) பொத்துவில் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு Well Head மற்றும் வால்வு அறைகளை நிர்மாணித்தல் மற்றும் Sumps மற்றும் கோபுரத்திற்கான ஏணியை வழங்குதல் மற்றும் பொருத்துதல், சுத்திகரிக்கப்படாத நீர் பம்பிக்கு PE/DI குழாய்கள் மற்றும் பொருத்திகளை பதித்தல்.<br>ஒப்பந்த இல. **RSC(E)/AGM (ES)/L/PL & CWH/PVL/ RH-AKP/2020/40** | 2,000/-+VAT | ரூபா 28,500/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C9 மற்றும் C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு | 1.91 மில்லியன் | உதவிப் பொது முகாமையாளர் (கிழக்கு) அலுவலகம், தேநீவவச, ஸ்ரீ தர்மரத்ன மாவத்தை, அம்பாறை.<br>Tele 063-2223926 Fax :063-2224975 | 09/09/2020 மு.ப. 10.00 மணி |
| 05) ஹபரண நீர் வழங்கல் திட்டத்தில் வால்வு அறையை நிர்மாணித்தல் மற்றும் DI குழாய்கள், பொருத்திகள், வால்வுகளை பதித்தல்.<br>ஒப்பந்த இல. **NRW/NC/DGM/HAB/2020/152** | 6,000/-+VAT ** | ரூபா 87,200/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 5.81 மில்லியன் | பி.ஒ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele : 025-2235993 Fax: 025-2225609 | 09/09/2020 பி.ப. 2.00 மணி |
| 06) அனுராதபுரம் பிராந்தியத்தில் தற்போதுள்ள வால்வு அறையை உயர்த்துதல் மற்றும் வால்வு அறையை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல. **NRW/NC/DGM/ANU-REGION/2020/175** | 6,000/-+VAT ** | ரூபா 93,000/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 6.20 மில்லியன் | பி.ஒ.நி. (வடமத்தி), கொடகே மாவத்தை, அனுராதபுரம்.<br>Tele : 025-2235993 Fax: 025-2225609 | 09/09/2020 பி.ப. 2.00 மணி |
| 07) பிரதான உள்ளீர்ப்பிலிருந்து பல்கலைக்கழக நீர் வழங்கல் திட்டத்தின் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதிக்கு DI சுத்திகரிக்கப்படாத நீர் மாற்றியை பதித்தல்<br>ஒப்பந்த இல- **RSC-C/P&D/PL/RECH(UOP)/ UNIVERSITY/2020/180** | 6,000/-+VAT ** | ரூபா 104,550/- | நீர் வழங்கல் மற்றும் சாக்கடைத் துறையில் C7 மற்றும் C6 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு மற்றும் பொது ஒப்பந்த பதிவாளருடன் 1987இன் 03ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு | 6.96 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027 | 09/09/2020 பி.ப. 2.00 மணி |
| 08) வெலம்பொல நீர் வழங்கல் திட்டத்திலுள்ள எல்பிட்டிய நீர் சுத்திகரிப்புப் பொறித்தொகுதிக்கு தடுப்புச் சுவரை நிர்மாணித்தல்<br>ஒப்பந்த இல- **RSC-C/KS/CIVIL/REH/ WELAMBODA/2020/189** | 4,000/-+VAT | ரூபா 22,000/- | கட்டிட நிர்மாணத் துறையில் C7 மற்றும் C8 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் CIDA பதிவு | 2.2 மில்லியன் | பி.ஒ.நி. (மத்திய), கெட்டம்பே, பேராதனை.<br>Tele : 081-2386068 Fax: 081-2388027<br>முகாமையாளர் (மத்திய தெற்கு) அலுவலகத்தில் 07-09-2020ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். | 09/09/2020 பி.ப. 2.00 மணி |
| 2020-08-19ஆம் திகதிய விளம்பரம் சம்பந்தமானது. நெடுந்தீவு நீர் வழங்கல் திட்டத்திற்கான DI/uPVC குழாய்கள் பொருத்திகள், விசேடங்கள் மற்றும் துணைப்பாகங்களை பதித்தல்.<br>ஒப்பந்த இல. **RSC/N/DGM/RH/LAYING/DELFT/2020/047 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தப்படும் திகதி 02-09-2020 பி.ப. 2.00 மணி எனத் திருத்தப்படல் வேண்டும். | | | | | | |
| 2020-08-19ஆம் திகதிய விளம்பரம் சம்பந்தமானது. ஒக்கம்பிட்டிய பெக்கேஜ் நீர் சுத்திகரிப்புப் பொறித் தொகுதியின் புதுப்பித்தல் வேலைகள்<br>ஒப்பந்த இல. **RSC(UVA)/DGM(UVA)/REH/OKKAMPITIYA/2019/223 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தப்படும் திகதி 02-09-2020 பி.ப. 2.00 மணி எனத் திருத்தப்படல் வேண்டும். | | | | | | |
| 2020-08-12ஆம் திகதிய விளம்பரம் சம்பந்தமானது. காலி நீர் வழங்கல் திட்டத்திலுள்ள பீக்கா பொறுப்பதிகாரி அலுவலகத்தின் களஞ்சியசாலை மற்றும் பிரவேச வீதியின் புதுப்பித்தல் வேலைகளுக்கான கேள்வி -<br>ஒப்பந்த இல. **RSC(S)/P&C/C/RENOVATION/GALLE/RH/2019/105 -** இந்தக் கேள்வியின் முடிவுறுத்தப்படும் திகதியானது 02-09-2020ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. | | | | | | |
| **M&E கேள்விகள்** | | | | | | |
